கல்கி

ஸ்பீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



ALKI | 19.12.2010 | ₹ 10.00 | 96 பக்கங்கள் | www.kalkionline.com



கஞ்சிரா to கபடிக்குழு!


- செல்வகணேஷ்

நாதஸ்வர கிராமங்கள்!

சீர்காழி மூவருக்குச் சிற்ப மண்டபம்!



னியை ருக்கிய ர்ணரஞ்சனி!


Sri Aishwarya Sarees
Temple of Silk Cottons
Handloom
SILK MARK
ஏழு ஸ்வரங்களில்
எத்தனை ராகங்கள்
எண்ணிலா
வண்ணங்களில்
எத்தனை ரகங்கள்
Exclusive Silks
Silk Cottons
Cottons
Printed
Embroidery
Fancy Sarees
Designer Blouses
10 yards sarees
and
Dress Materials
All Major Credit Cards Accepted
Give Life to Handloom
Tailoring & Embroidery Undertaken
No. 19, Arcot Street, T.Nagar, Chennai - 600 017. INDIA (Near M.G.R. Memorial House)
Tel : 044-4260 4447 Mobile : 98409 83999



பயாஸ்கோப்

சாமி, 1977ல் தொடங்கப்பட்டதாம். இதில் என்ன என்ன சொல்லித் தருகிறீர்கள் என்று கேட்டதற்கு, ''டயலாக் டெலிவரி, பாடிலாங்குவேஜ், தனித் திறமை ஊக்குவிப்பு, சிலம்பு வரிசை, கயிறு ஏறுதல் போன்றவை'' என்கிறார் முத்துசாமி. 3 மாத கட்டணம் 35,000 ரூபாயாம். பார்ட் டைம் நடிப்பு பயிற்சியும் உண்டாம். (காலை 6 முதல் 9 வரை) (நிறைய பேரை உருவாக்குங்க, ஆல் த பெஸ்ட்!)

'மைனா' நாயகன் விதார்த்...


இனி வரும் படங்களில் எப்படி என்று 'மைனா' விதார்த்திடம் கேட்டால்... ''கண்டிப்பாக,

'3 இடியட்ஸ்'-ல் விஜய் - ஜீவா - சத்யராஜ்

ஜெமினி நிறுவனம் 90 கோடி செலவில் தயாரிக்கும் '3 இடியட்ஸ்' படம், ஷங்கர் இயக்கத்தில் உருவாவது உண்மை தானாம். விஜய், ஜீவாவுடன் மூன்றாவது நபர் தேடும் வேலை மும்முரமாக நடந்து வருகிறது. 'எந்திரனில்' ரஜினிக்கு வில்லனாக நடிக்க மறுத்த சத்யராஜ், இதில் பேராசிரியராக நடிக்கிறார். ஏன் என்றதற்கு, ''ஷங்கர்... சிவாஜியிலும் வில்லனாக நடிக்க அழைத்தார். 'எந்திரனி'லும் நடிக்க அழைத்தார். மறுத்த நான் இப்போது '3 இடியட்ஸ்'ல் செய்கிறேன்'' என்கிறார்.

கூத்துப் பட்டறை

நாசர், பசுபதியை அடுத்து களவாணி விமல், மைனா, விதார்த் இருவரும் கூத்துப் பட்டறையில் இருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சரி, இந்தக் கூத்துப்பட்டறை எங்கே உள்ளது. சென்னையின் சின்மயா நகர், ஐயப்பன் 5வது தெருவில் இருக்கிறது. இதை நடத்துபவர் முத்து





நான் நடிக்கிற ஒவ்வொரு படத்திலும் அந்தக் கதாபாத்திரத்துக்கு என்ன தேவையோ அதற்கேற்ப என்னை முழுவதுமாக மாற்றி நடிப்பேன். நான் நடிக்கிற ஒவ்வொரு கதையும் வலுவுள்ளதாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக் கிறேன். வெறும் கமர்ஷியல் ஹீரோவாக மட்டுமே இல்லாமல் தரமான நடிகராக நீடிக்கவே ஆசை'' என்கிறார்.

தெய்வமகன் விக்ரம்!

ஏவி.எம். 8-வது ஃப்ளோரில் விக்ரம் மன்னர் வேடத்தில் வாளைச் சுழற்றுவதுபோல் படமாக்கிக் கொண்டிருந்தார் 'மதராசபட்டினம்' இயக்குனர் விஜய். அங்கே இருந்த இப்படத்தின் தயாரிப்பாளர் மோகன் நடராஜிடம், ''என்ன சார் ரொம்ப நாள் கழிச்சு தயாரிப்பில் இறங்கிருக்கீங்க. இவ்வளவு நாள் ஒதுங்கிவிட்டீர்களே?'' என்றோம். அவர், ''ஒதுங்க வைத்து விட்டார்கள்... இப்போதைக்கு இதற்கு மேல் வேண்டாமே'' என்றார் சலிப்போடு. 'தெய்வமகன்' டைட்டிலுக்கு சிவாஜி புரொடக் ஷனை அணுகி உள்ளார்களாம்.

ஏவி.எம்.தியேட்டரில் தேசபக்தி

முன்பு எல்லாம் திரைப்படம் முடிந்தவுடன் 'ஜன கண மன' போட்டுக் கொண்டிருந்தனர். அதற்கு ரசிகர்கள் மதிப்புத் தருவதில்லை என்று நிறுத்திவிட்டார்கள். இப்போது ஏவி.எம்மின் ராஜேஸ்வரி திரை அரங்கில் படம் தொடங்குவதற்கு முன் 'ஜன கண மன' போடுகிறார்கள். இது வரவேற்க வேண்டிய விஷயம்தானே!

- விஜய்கோபால்

கல்கி


பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்


ஆசிரியர் : சீதா ரவி
பொறுப்பாசிரியர்:
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி: 044 - 4343 8888
தொலைநகல்: 044 - 4343 8899
ஆசிரியர் குழு:
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ₹ 500/-
வெளிநாடு : ₹ 3,800/-


கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32





✱ தெள்ளிய...

✱ ...குழப்பம்!



குரல் எழுப்பினால் பேருந்து கக்கும் புகை குறைந்துவிடுமா என்ன? அது பாட்டுக்குச் சூழலை விஷமாக்கிக் கொண்டுதான் இருக்கும்.

● எஸ். சுவாமிநாதன், மன்னார்குடி

? ''இலங்கைப் பயணம் எனக்கு முழு திருப்தி அளிப்பதாக இருக்கிறது; ஆனால், அங்குள்ள தமிழர்களின் நிலை கவலை அளிப்பதாக இருக்கிறது,'' என்கிறாரே வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா?

! எஸ்.எம்.கிருஷ்ணாவின் இந்த முரண்பட்ட பேச்சும் கையாலாகாதனத்தை வெளிப்படுத்தும் கருத்தும் தமிழ்கூறு நல்லுலகமெங்கும் கவலையையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது.

● எஸ்.அமிர்தா, சென்னை-26

? ஜெயா டி.வி.யில் வைகோ, சோ, சு.சுவாமி - நீங்கள் ரசித்தது எது?

! இவர்கள் எல்லோரையும் விட பா.ஜ.க.வின் புதிய செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீதாராமனின் பேட்டிதான் கச்சிதம்.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? ''பெரியோர்களின் அனுமதியின்றி வெளியே காலெடுத்து வைக்கக் கூடாது என்கிற கட்டுப்பாடெல்லாம் இக்கால தலைமுறை பெண்களுக்கு இல்லாதது மகிழ்ச்சி அளிக்கிறது,'' என்று தமன்னா கூறுகிறாரே- தராசு கருத்து என்ன?

! ''அனுமதி தேவையில்லை என்றாலும் அனுமதி பெற்று (தெரிவித்துவிட்டு)

● ந.சிவாஜி மூக்கையா, தர்காஸ்

? விஜயகாந்த் - சரத்குமார் - இருவரில் யார் அரசியல் தெளிவானது? யார் அரசியல் குழப்பமானது?

! அரசியலில் இருவருக்குமே தெளிவு உண்டு. சாணக்கியத்தில் இருவருக்குமே குழப்பமும் உண்டு.

● செல்.பச்சமுத்து, வ.களத்தூர்

? கருணாநிதி வீட்டுக்கும் விஜயகாந்த் வீட்டுக்கும் உள்ள தூரம் எவ்வளவு?

! ஜெயலலிதா வீட்டுக்கும் கலைஞர் வீட்டுக்கும் இடையில் உள்ள தூரத்தைவிடக் குறைந்ததல்ல என்பதை விஜயகாந்தின் சமீபத்திய கருணாநிதி மேலான தாக்குதல்கள் தெளிவுபடுத்துகின்றன.

● ஜெ.ஜெயராணி, மதுரை

? ''வரும் சட்டசபை தேர்தலுக்கான வெள்ளோட்டமே தற்போது நடந்து முடிந்துள்ள போக்குவரத்துத் தொழிலாளர்கள் தேர்தலில் தி.மு.க. பெற்றுள்ள வெற்றி,'' என்று கருணாநிதி சொல்கிறாரே?

! 'டபுள் ரைட்' என்று நடத்துநர் ஓங்கிக்

விக்கிலீக்ஸ் அமெரிக்காவை

வெளியே போவது புத்திசாலித்தனம். இன்றைய சூழ்நிலை இதை அவசிய மாக்குகிறது'' என்று தமன்னா கூறியிருந் தால், அவருக்கு மட்டுமின்றி தராசுக்கும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

●ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? தமக்குத் திருமணமாகவில்லை என்ற கோபத்தில் ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தை நிறுத்தியவர் ஜெய லலிதா என்று துணைமுதல்வர் ஸ்டாலின் குற்றம் சாட்டியிருப்பது பற்றி...?

! மிகவும் தரம் தாழ்ந்த, விஷம் கலந்த விமர்சனம். இதற்கு 'ஜெ.' விடுத்துள்ள மறுப்பு அறிக்கை விஷ முறிவு.

●மகிழ்ச்சிக் கருப்பன், சென்னை - 101

? பத்திரிகையாளரான தி.மு.க. தலைவர் கருணாநிதி, தினமலர், தினமணி, கல்கி போன்ற இதழ்களைத் தாக்கிப் பேசுவது நியாயமா?

! சக பத்திரிகைகள், பத்திரிகையாளர்கள் தப்பு செய்தால் அதைச் சுட்டிக்காட்ட பத்திரி கைகளுக்கு உரிமை உண்டு. அது கடமை யும்கூட.. ஆனால் விமர்சனங்களைச் சகித்துக் கொள்ள முடியாமலும் அவற்றுக்குத் தக்க பதில் இல்லாததாலும், விமர்சித்த பத்திரி கைகள் மீது ஜாதி சேற்றை வாரி இறைப்பது

ஆட்டிப்படைக்கிறதே?

அதர்மம் மட்டுமல்ல; பத்திரிகைகளை மறைமுகமாக அச்சுறுத்தி ஒடுக்கும் முயற்சி. அதற்கு பலியாகாமல் இருப்பது பத்திரிகை களின் பொறுப்பு.

●லெ.நா.சிவகுமார், சென்னை-33

? சென்னை செம்மொழிப் பூங்காவைக் கண்டு களித்தீரா?

! நல்ல முயற்சி. அசுர சென்னையின் மத்தியில் இப்படியொரு அபார அழகு மகிழ்ச்சிக்குரியது. இன்னொரு கட்டடக்காடு முளைக்காமல் தப்பித்தது பெரிய விஷயம்.

●ஆர்.ஜி.கல்யாணி, திசையன்விளை

? வெற்றி என்று வருகிறபோது பா.ஜ.க. இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. எல்லாம் ஒன்றாகக் காட்டிக் கொள்வதும் பிரச்னைகள் என்று வருகிறபோது அவை வெவ்வேறாக மாறுவதும் ஏன்?



* மைனஸ் மகிழ்ச்சி!




* "டபுள் ரைட்!"




* முரணான திருப்தி!



* கேடய...



* ... கண்டனம்!



* கச்சித பேட்டி!

! தேர்தலுக்குப் பாடுபட, ஆர்.எஸ்.எஸ். முதலான ஹிந்துத்வா இயக்கங்களின் அமைப்புபலம் என்கிற கூழ் பி.ஜே.பிக்குத் தேவைப்படுகிறது. பிரச்னை என்று வந்தாலோ, பா.ஜ.க. மீசையைச் சுத்தமாக வைத்துக்கொள்ள விரும்புகிறது!

●பெ.செல்வக்குமார், சேலம் ❒

? ஜாதி என்கிற ஆயுதம், ஊழல் புகார்களைத் தட்டிக் கழிக்கும் கேடயமா?

! ராசாவைக் காக்க நினைத்து கருணாநிதி பிடித்த கேடயத்தை தமிழரசனும் கிருஷ்ணசாமியும் நொறுக்கி, நசுக்கிவிட்டனரே! ராசாவை மீட்க எண்ணி தலித்துகளைக் கலைஞர் இழிவுபடுத்திவிட்டதாகப் பலரும் கருதுவதில் தவறேயில்லை.

●கே.வி.ஜானகிராமன், சென்னை-4

? எடியூரப்பா முதல் தாமஸ் வரை - பதவியை ராஜினாமா செய்ய ஏன் மறுக்கிறார்கள்?

! செய்த ஊழலை மூடி மறைக்கத்தான்! பதவியில் தொடர்ந்து இருந்தால்தான் ஊழல் ஆய்வு விசாரணைகளைத் தாமதப்படுத்த முடியும்; சாட்சியங்களை அழிக்கவும் முயற்சி மேற்கொள்ள முடியும்.

●எஸ்.வி.பக்கிரிசாமி, புதுச்சேரி

? இந்திய அரசாங்கத்தை ஊழல் சாம்ராஜ்யம் ஆட்டி வைப்பதுபோல், விக்கிலீக்ஸ் அமெரிக்காவை ஆட்டி வைக்கிற நிலை பற்றி...?

! அமெரிக்காவும் விக்கிலீக்ஸை
யும் அதன் அதிபரையும் ஆட்டிப்
படைக்கிறதே! அந்த இணைய தள
தின் சர்வர் இணைப்புகளைத் தடை
செய்வதும் அதன் அதிபர் மீது செக்
குற்றப் புகார்களைப் பதிவு செய்து
லண்டன் போலீஸ் உதவியுடன் கைது
பண்ணுவதும்... அங்கும் இந்திய
ஸ்டைல் அரசியல் ஆரம்பிச்சாச்!

●நா.பாலசுப்பிரமணியன், சென்னை - 40 *

? நதிகள் இணைப்பு செய்யப்
பட்டிருந்தால் வெள்ள அபாயம்
தவிர்க்கப்பட்டிருக்குமல்லவா?


! வெள்ள அபாயத்தைத் தவிர்

❒ ரூ.150/ பரிசு பெறுபவர்:
பெ.செல்வக்குமார், சேலம்

*** ரூ. 75/ பரிசு பெறுபவர்:**
நா.பாலசுப்பிரமணியன், சென்னை - 40

கும் வகையில் அந்த இணைப்பு
திட்டமிடப்பட்டால் நீங்கள் நினை
பது நிறைவேறக் கூடும். அவ்வள
ஏன். தமிழ்நாட்டிலேயே ஏரி, கா
வாய், நதிப் படுகைகள் பராமரிப்பு
தூர் எடுத்தலும் காலா காலத்தி
சிறப்பாக நடந்திருந்தால் சேதம்
கணிசமாகக் குறைந்திருக்கும். தூ
வாரலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை
யார் யாரோ வாரிக் கொண்டு போய்
விட்டால், வெள்ளச் சேதம்தான்
வெள்ள நிவாரணத்துக்கு நிதி ஒது
கீடு; அதிலும் கொள்ளை... என்று
தொடர் ஊழல்தான் நடக்கிறது.

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், **KAGQA** என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.









லோக க்ஷேமத்திற்காக 1.1.2011 (சனிக்கிழமை) ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு

ஸ்ரீஸ்ரீநிவாச பெருமாள் திருகல்யாண மஹோத்ஸவம்

1-1-2011 சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 வரை

மற்றும்

ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷண மஹா யக்ஞம்
ஸ்ரீ தன்வந்தரி மஹா யக்ஞம்

1-1-2011 சனிக்கிழமை மாலை 6 மணி முதல் 2.1.2011 ஞாயிறு வரை

நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம்: **ஷோபனா கல்யாண மண்டபம்,**
74, ஆரிய கௌடா ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன் : 2488 0885

திருகல்யாண உற்சவ கட்டணம் ரூ. 300/-க்கு
திருவேங்கடபெருமாள் தாயார் 2 கிராம் வெள்ளி காசு, மஞ்சள் குங்குமம், திருமண தாம்பூலம், ரவிக்கை பிட், மாங்கல்ய சரடு மற்றும் சோபன திரவியங்கள் வழங்கப்படும்

ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷண மஹா யக்ஞம்

குறிப்பு: கீழ்கண்ட அனைத்து கட்டணங்களுக்கும் யாக பூஜையில் விசேஷ சங்கல்பம் செய்து கையில் ரக்ஷை அணிவித்து மஞ்சள் குங்குமம், அட்சதை பிரசாதங்களும், ஸ்ரீ லக்ஷ்மி குபேர படம், **நித்யம் மஹாலக்ஷ்மி கடாச்சத்தை அளிக்கும் ஸ்ரீ மஹாலக்ஷ்மி விசேஷ ஸ்தோத்ரம்** அடங்கிய சேட் (சிடி) ஆகியவைகள் வழங்கப்படும்.

கட்டண விபரம்

ஸ்ரீ லக்ஷ்மி குபேர செப்பு டாலர்	ரூ. 100
ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனா கர்ஷண யந்திரம்	ரூ. 250
ஸ்ரீ லக்ஷ்மி குபேர வெள்ளி தாயத்து, ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனா கர்ஷண யந்திரம்	ரூ. 500
ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனா கர்ஷண வெள்ளி டாலர் ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனா கர்ஷண யந்திரம்	ரூ. 1000
ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனா கர்ஷண வெள்ளி டாலர் தாயத்து, தனா கர்ஷண யந்திரம்	ரூ. 2500
ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனா யந்திரம், தனா கர்ஷண வெள்ளி தாயத்து, ஸ்ரீ லக்ஷ்மி குபேர வெள்ளி டாலர், கலச தீர்த்தம் வழங்கப்படும்.	ரூ. 5000

ஸ்ரீ தன்வந்தரி மஹா யக்ஞம்

குறிப்பு: கீழ்கண்ட அனைத்து கட்டணங்களும் யாக பூஜையில் விசேஷ சங்கல்பம் செய்து கையில் ரக்ஷை அணிவித்து, **ஸ்ரீ தன்வந்தரி மூல மந்திரம், 1 லட்சம் ஆவர்த்தி ஜபம் செய்யப்பட்ட கல்கண்டு பிரசாதம்** மஞ்சள் குங்குமம் அட்சதை பிரசாதங்களும், மஹா தன்வந்தரி பகவான் விசேஷ படம் ஆகியவைகள் விசேஷ பூஜை செய்து கீழ்கண்ட பொருட்களும் வழங்கப்படும்.

கட்டண விபரம்

ஸ்ரீ தன்வந்தரி செப்பு டாலர்	ரூ. 100
ஸ்ரீ தன்வந்தரி செப்பு யந்திரம்	ரூ. 250
ஸ்ரீ தன்வந்தரி செப்பு தாயத்து	ரூ. 500
ஸ்ரீ தன்வந்தரி வெள்ளி டாலர் ஸ்ரீ தன்வந்தரி யந்திரம்	ரூ. 1000
ஸ்ரீ தன்வந்தரி வெள்ளி டாலர், ஸ்ரீ தன்வந்தரி செப்பு தாயத்து, ஸ்ரீ தன்வந்தரி யந்திரம்	ரூ. 2500
ஸ்ரீ தன்வந்தரி வெள்ளி டாலர், ஸ்ரீ தன்வந்தரி செப்பு தாயத்து, ஸ்ரீ தன்வந்தரி யந்திரம் மற்றும் கலச தீர்த்தம் வழங்கப்படும்.	ரூ. 5000

குறிப்பு: திருகல்யாண உத்ஸவம் மற்றும் லக்ஷ்மி குபேர / தன்வந்தரி யாகத்திற்கு M.O. / D.D காசோலை அனுப்பும் பக்தர்கள் தங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரம், ராசி, முதலியவற்றோடு தங்களின் முழு விலாசத்தையும் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும். (பிரசாதங்கள் விரைவு தபாலில் அனுப்பிவைக்கப்படும்)

ஸ்ரீ ரங்கராஜ பட்டாசாரியார்

பழைய எண். 5, புதிய எண். 32, கேசவ பெருமாள் சன்னதி தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004. 044-24951513, 9444080130, 9840400781

டிக்கட்டுகள் மாம்பலம் ஷோபனா கல்யாண மண்டபத்திலும் மற்றும் மைலாப்பூர் முகவரியிலும் நேரில் பெறலாம்.

கேள்விகள் - இண்டக்கு மண்டக்கு! பதில்கள் - நண்டக்கு நண்டக்கு!



நல்லி குப்புசாமியிடம்:

கே: எல்லா சபாக்கள்லயும் நுழைஞ்சு என்ன சாதிக்கலாம்னு நினைக்கறீங்க?

பதில்: 'சபாக்களில் எப்படி சாதிக்கலாம்'னு புக் எழுதியாச்சே!

சுதா ரகுநாதனிடம்:

கே: உங்களுக்குத் தெரிஞ்ச பாட்டை விட உங்ககிட்டேயிருக்கற பட்டுப் புடைவையோட எண்ணிக்கை அதிகமோ...?

பதில்: எண்ணிப் பார்க்கற நேரத்துல ஏழு கச்சேரி பண்ணிடலாம் விடுங்க.

திருவாரூர் பக்தவத்ஸலத்திடம்:

கே: உங்க மிருதங்கத்துக்குள்ளேயே ரகசிய மைக் வைச்சிருக்கீங்களா?

பதில்: வெளில சொல்லிடாதீங்க, அப்புறம் நான் சபா மைக்மேன்கிட்டே எப்படி 'ஏத்து! ஏத்து'னு கேட்பேன்!





—தும்புரு—



அருணா சாய்ராமிடம்:

கே: அடுத்த கச்சேரியில 'அம்மா இங்கே வா வா' பாடுவீங்களா?

பதில்: அதை நேத்தைய கச்சேரிலயே பாடியாச்சு. அடுத்த கச்சேரிக்கு 'ஏ பி ஸி டி'யை ராகமாலிகைல செட் பண்ணி வைச்சிருக்கேன்.



நித்யஸ்ரீயிடம்:

கே: குசேல கான சபா கச்சேரியில நீங்க மேல் ஸ்தாயி பாடினப்போ கூரை பிஞ்சுபோச்சாமே...?

பதில்: எவ்வளவு நல்லது பாருங்க. அதனாலதான் அறுபது வருஷம் கழிச்சு கூரையை மாத்திருக்காங்க!



டி.எம்.கிருஷ்ணாவிடம்:

கே: உங்க கையைக் கட்டிப்போட்டா கச்சேரி பண்ண முடியுமா?

பதில்: ஹை! புது ஐடியாவா இருக்கே... அடுத்த சீசன்ல எல்லா கச்சேரியும் கைகட்டோடதான்.

காங்கிரஸ்

பொது வாழ்வில் தூய்மை, நேர்மை வேண்டுமென இளைஞர்கள் மத்தியில் காந்திய பிரசாரம் செய்து வருகிறார் காந்திய மக்கள் இயக்கத்தின் நிறு வனர் - தலைவர் தமிழருவி மணியன். ''இரண்டு வருடங்களில் தமிழகத்தில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரு வோம்'' என்கிறார்.

தமிழ்நாட்டில், காங்கிரஸுடன் கூட்டணி அமைத்தால்தான் வெற்றி நிச்சயம் என்று தி.மு.க. - அ.தி.மு.க.



ஆகிய இரண்டு கட்சிகளும் கருது கின்றன. ஸ்பெக்ட்ரம் மற்றும் வேறு பல ஊழல்கள், பீகார் தோல்வி ஆகியவற்றுக்குப் பிறகும் காங்கிரஸ், திராவிடக் கட்சிகளுக்கு *சுகமா? சுமையா?*

தமிழருவி மணியன்: ''1971ல் காமராஜரை அரசியலை விட்டு ஒழிக்க வேண்டும் என்பதற்காக இந்திரா காந்தியுடன் கூட்டணி அமைத்தார் கருணாநிதி. காமராஜ் கடைசியாகச் சந்தித்த தேர்தல் அது. அப்போது காமராஜ் தலைமையில் இருந்த ஸ்தாபன காங்கிரஸ் பெற்ற வோட்டு 35 சதவிகிதம். அப்போது 35 சதவிகிதமாக இருந்த காங்கிரஸ் வோட்டு, இன்று ஏழு சதவிகிதத்துக்கும் கீழே அதாவது விஜயகாந்துக்கும் குறைவாகப் போய் விட்டது என்பதுதான் உண்மை. காங்கிரஸுக்கு மரபு சார்ந்த வாக்காளர்கள்தான் உண்டே தவிர, ஸ்தாபன ரீதியான பலம் கிடையாது. அது ஆழ வேரூன்றி நிற்கும் அசையாத ஆலமரம் அல்ல; வேரில்லாத நீர்ச்செடிதான். பீகாரில் இளைஞர்களை காங் கிரஸுக்கு இழுத்து ஒரு மாற்றத்தைக் கொண்டு வர ராகுல் முயன்றார். ஆனால், அமைப்பு இல்லாததால் தோல்வியடைந்தார். தமிழ்நாட்டின் தென் மாவட்டங் களில் வேண்டுமானால் தொகுதிக்கு 5000 வோட்டு காங்கிரஸுக்கு இருக்கக்கூடும். காங்கிரஸ் இனி தமிழ்நாட்டில் சுமைதான். அதுவும் தே.மு.தி.க. ஓரளவு செல்வாக்கு பெற்று வரும் நிலையில் 'காங் கிரஸ் கூட்டணிதான் வெற்றிக் கூட்டணி!' என்ற மாயை விலகிவிட்டது. அ.தி.மு.க., தே.மு.தி.க., கம்யூனிஸ்டுகள், ம.தி.மு.க., புதிய தமிழகம், த.மு.மு.க., என அணி அமைந்தால் அதுவே வெற்றிக் கூட்டணி. தமிழ்நாட்டு மக்கள் இதுபோன்ற ஓர் அணிக்கு வோட்டு போடும் மனநிலைக்கு வந்து விட்டார்கள் என்பதே என் கணிப்பு.''

மாறி வரும் அரசியல் சூழலில் தி.மு.க., காங் *கிரஸைக் கை கழுவுமா?*

''சான்ஸே இல்லை. காரணம் மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியை எதிர்த்து அரசியல் செய்யும் துணிவு தி.மு.க.வுக்குக் கிடையாது. அந்த அளவு பலவீனங்கள் அந்தக் கட்சிக்கும் அதன் தலைமைக்கும் உண்டு. காங்கிரஸ் துரத்தி விட் டால்தான் உண்டு. பீகார் தேர்தலுக்குப் பிறகு தமிழ் நாட்டில் மூன்றாவது அணி சிந்தனை ராகுலுக்குச்

கூட இருக்குமா என்பது சந்தேகமே. விஜயகாந்தும் பா.ம.க.வும் காங்கிரஸ் தலைமையில் தனி அணி என்ற கருத்தோட்டத்தில் இருந்தன. இப்போது அந்தச் சிந்தனை இல்லை. தி.மு.க.வும் காங்கிரஸும் ஓரணியில் இருப்பதே நல்லது. அப்போதுதான் 'ஊழல் அணி' என்ற ஒட்டுமொத்த பிரசாரமும் எடுபடும்.''







விஜயகாந்த் தனியே நிற்கத் துணிவாரா?

''இந்தமுறை அந்தத் தவறைச் செய்ய மாட்டார் என்று கருதுகிறேன். காரணம் 'தி.மு.க.வை ஆட்சியை விட்டு இறக்குவதே என் இப்போதைய அஜண்டா' என்று பலமுறை சொல்லியிருக்கிறார். எனவே வெற்றிக்கு வழிகாட்டும் அ.தி.மு.க அணியுடன் அவர் தோழமை கொள்வார். மக்கள் மனத்தைப் புரிந்து கொள்ளாமல் தனித்துச் செயல்பட்டால் மக்கள் மத்தியில் இருக்கிற மரியாதை போய்விடும். காலப்போக்கில் கட்சியும் காணாமல்...''

இனி சுமையே!

- தமிழருவி மணியன்

வரும் காலத்தில் தி.மு.க. - அ.தி.மு.க.வுக்கு மாற்று?

''இன்றுவரை தெரியவில்லை. காலம் வெற்றிடத்தை நிரப்பும். ஆனால், திராவிட இயக்கக் கட்சிகளின் குணாம்சங்கள் கொண்ட விஜயகாந்த் நிச்சயம் அந்த மாற்று சக்தி அல்ல.''

'கருணாநிதிக்கு உள்ள ஜனநாயக முறையிலான அணுகுமுறை ஜெ.வுக்கு இல்லை. அவர் சர்வாதிகார மனப்பான்மையோடு செயல்படுவார்' என்ற கருத்து இருக்கிறதே?

''இன்றைய சமூகம் ஆணாதிக்க சமூகம்தான். எனவே ஆணாதிக்க அச்சுறுத்தல் காரணமாகத்தான் சர்வாதிகாரி போல் நடக்க முற்படுகிறார் ஜெயலலிதா. இந்திரா காந்தி, மாயாவதி, மம்தா பானர்ஜி என்று அரசியல் தலைமையேற்று நடத்தும் பெண்களிடம் உள்ள பொதுத் தன்மை இது. இப்படிப்பட்ட ரிங் மாஸ்டர் தன்மை இல்லாவிட்டால் தலையில் மிளகாய் அரைத்து விடுவார்கள். நீங்கள் சொல்வது போல் கலைஞரை எளிதில் அணுகலாம் என்பது சரியல்ல; சந்திக்க நேரம் கேட்டு மாதக் கணக்கில் காத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். கலைஞரிடம் வெளித்தோற்றம் மட்டுமே ஜனநாயகம். மறைந்து நிற்பது சர்வாதிகாரம்.''

'செய்த சாதனைகள் காரணமாக மீண்டும் தி.மு.க. ஆட்சியே' என்கிறாரே கருணாநிதி?

''இலவசத் திட்டங்கள் மூலம் மக்கள் பயனடைந்தார்கள் என்பது ஒரு மாயை; இன்று சகல மட்டங்களிலும் ஊழல்; விலைவாசி உயர்வு, தமிழகத்தைப் பட்டா போடும் கலைஞர் குடும்பம் என்று மக்கள் வெறுப்பில் இருக்கிறார்கள். கருணாநிதிக்கு ஓய்வு கொடுத்து அனுப்பப்போவது நிச்சயம்.''

- ப்ரியன்



''கபாலிக்கு வந்த தமிழ் ஆர்வத்தைப் பார்த்தியா?!''

''என்ன?''

''மாமூலுக்குச் சரியான தமிழ் வார்த்தை சொன்னாத்தான், இந்த மாச மாமூலைத் தள்ளுவானாம்!''

- பி.ஜி.பி.இசக்கி, அம்பாசமுத்திரம்

பிஸினஸ் பேச்சு!



''மண் வளமும் மலை வளமும் சிறந்த நம் நாட்டிலே...''

''தலைவர் மேடையிலே பேசும் போதுகூட, கிரானைட் பிஸினஸையும்... மணல் பிஸினஸையும் மறக்க மாட்டார்போல?''

- சீதாதம்பி, சென்னை-91

''கள்ள நோட்டு ஏன் அடிச்சே?''

''தெரியாத மாதிரி கேட்கறீங்களே எசமான். செலவழிக்கத்தான் அடிச்சேன்!''

- அனன்யா, திருச்சி





''நான் மெனக்கெட்டுச் செஞ்ச சமையலைச் சாப்பிட்டுட்டு ஒரே வார்த்தையில சுமார்னு சொல்லிட்டீங்களே!''

''நானும் சும்மா சொல்லலே. மெனக்கெட்டுச் சாப்பிட்ட பிறகுதான் சொல்றேன்.''

- எல்.கோபால கிருஷ்ணன், கும்பகோணம்



''நேத்திக்கு அஞ்சு ரூபாய்க்குப் பூண்டு கேட்டேன்!''

''மளிகைக் கடைக்காரர் கொடுத்தாரா?''

''அஞ்சு ரூபாய வாங்கி கல்லாவிலே போட்டுட்டு, பூண்டு எண்ணெய எடுத்து என் மூக்குப் பக்கம் வாசனை காட்டிட்டு எடுத்துக்கிட்டார்!''

- சீதாதம்பி,
சென்னை-91



கல்கி



2010 டிசம்பர் 19
விக்ருதி மார்கழி 4
மலர் : 69
இதழ் : 21

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

அபகீர்த்தி மன்னர் 2010


ஸ்பெக்ட்ரம் ஊழல் குற்றச்சாட்டிலும் சரி, தற்போது வெடித்துள்ள சந்திரமோகன் தொடர்பான விவகாரத்திலும் சரி, ஆ.ராசா தாம் நிரபராதி என்று நிரூபிக்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் பரிதாபகரமாக இருக்கின்றன. அதைவிட பரிதாபகரமானது ஒன்று உண்டு எனில், ராசாவைப் 'பாதுகாக்கும்' முயற்சியில் அவரது கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி சந்தித்துவரும் தோல்விகள்தான்!

ராசாவின் ராஜினாமா விவகாரத்துக்கு தலித் சாயம் பூசி பச்சாதாபம் சம்பாதிக்க முயன்ற கருணாநிதியின் அணுகுமுறையை, தலித் தலைவர்களே கண்டனம் செய்திருப்பது தி.மு.க. தலைவருக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பின்னடைவு. அந்த ஊழல் விவகாரமே புராணக் கதைபோன்ற கற்பனை என்பதாக அவர் சித்திரிக்க முயல்வதோ, பரிதாபகரமான நகைச்சுவையாகிவிட்டது! 'தனி ஒருவராக ராசா இவ்வளவு பெரிய ஊழலைச் செய்திருக்க முடியாது' என்ற முதல்வரின் வாதம், 'அப்படியானால் இன்னும் பலர் இதற்கு உடந்தை என்று அர்த்தமா?' என்கிற எதிர்கேள்வியையும் எழுப்பியிருக்கிறது.

ஊழலின் பரிமாணமே ராசாவின் ஒரு மிகப்பெரிய சாதனை எனில், தமது தலைவரின் தர்மசங்கடத்துக்குக் காரணமானது மற்றொரு சாதனை! அதனையும் மிஞ்சும் பிரம்மாண்ட சாதனையாக, நாடாளுமன்ற நடவடிக்கைகள் வரலாறு காணாத வகையில் ஸ்தம்பித்துப் போகும் நிலைமைக்கும் மூல காரணகர்த்தாவாக விளங்குகிறார் ராசா! இந்தப் பெருமைகளை விஞ்ச இன்னோர் அரசியல்வாதி இன்று இல்லை என்றே கூறவேண்டும்!

மார்க் ஷீட் ஃபோர்ஜரி வழக்கில் பார் கவுன்சில் தலைவர் சந்திர





மோகன், ஆ. ராசாவின் பெயரைப் பயன்படுத்தி, நீதிபதி ரகுபதியை நிர்ப்பந்திக்க முயன்றதாகக் குற்றச்சாட்டு தற்போது வெளிப்படையாகியுள்ளது. சந்திரமோகனைத் தாற்காலிகப் பணி நீக்கம் செய்து ஆணை பிறப்பித்துள்ளது உயர்நீதிமன்றம். ஆக, நீதித் துறைக்குச் சவால் விடுவதிலும் சங்கடம் விளைவிப்பதிலும்கூட ராசா சாதனை சிகரம் தொட்டுள்ளார்!

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில், அதிகாரிகளின் அறிவுரைகளை ராசா அலட்சியம் செய்த சாதனை ஒரு புறம் எனில், அவரைத் தட்டிக்கேட்டு விசாரிக்கவில்லை என்பதால் சி.பி.ஐ.க்கு உச்சநீதி மன்றத்தின் கண்டனத்தையே பெற்றுத்தந்துள்ளார் ராசா! "பிரதமருக்கு ராசா எழுதிய கடிதம் அவமரியாதையானது" என்று உச்சநீதிமன்றம் கண்டனம் செய்யும் அளவுக்கு 2ஜி ஸ்பெக்ட்ரம் விற்பனை முறையில் முரண்டுபிடித்துள்ளார். பிரதமரைக் கிள்ளுகீரையாக நினைக்கும் துணிவும், அதை எழுத்தில் காட்டும் தீரமும் வேறு ஓர் அரசியல்வாதிக்கு வந்துவிடுமா?! இந்த விவகாரங்களெல்லாம் வெளிப்படுகிறபோது, பிரதமருக்கு ஏற்படும் தர்மசங்கடத்தின் அளவு, 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலைவிடப் பெரிதல்லவா!

சந்திரமோகன் விவகாரத்திலும் சரி, ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்திலும் சரி, நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளைச் சந்தித்து, தாம் நிரபராதி என்று நிரூபிக்கப் போவதாக அடித்துச் சொல்கிறார் ராசா. 'அப்படியானால் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் என்ற பேச்சு எழுந்த உடனேயே பதவி விலகி, நீதி விசாரணைக்கு உடன்பட்டிருக்கலாமே?' என்று நாம் முட்டாள்தனமாகக் கேட்டுவிடக் கூடாது... அப்படிச் செய்திருந்தால், இத்தனை தர்மசங்கடங்களை தமிழக முதல்வருக்கும் இந்தியப் பிரதமருக்கும் நீதித்துறைக்கும் அவர் உருவாக்கியிருக்க முடியுமா! அல்லது, அவரைப் போலவே குற்றம்சாட்டப்பட்ட பிறகும் பதவியில் தொங்கிக்கொண்டிருக்கும் கண்காணிப்புத் துறைத் தலைவர் தாமஸுக்கு ராசா, ஒரு முன்னுதாரணமாக இருக்கத்தான் முடியுமா!

தமக்கு மட்டுமின்றி, தம் பேரில் நம்பிக்கை வைத்தோருக்கும் அபகீர்த்தி ஏற்படும் வகையில், சாதனை மேல் சாதனை புரிந்து 'அபகீர்த்தி மன்னன் 2010' என்ற பட்டத்தைப் பெற, எல்லாவிதத்திலும் தகுதியுடையவராகிறார் ராசா!

பரமாச்சாரியார் பாராட்டிய நாவல்!

அஞ்சலி



பத்மநாபனை 12 வயதிலேயே கைப் பிடித்து புகுந்த வீடு வந்துவிட்டவர் ராஜேஸ்வரி. மாமனாருக்கு அவர் மகள் மாதிரி. மாமனாரிடம் முதல் சிறுகதையைப் படிக்கக் கொடுத்தார். தலைப்பு: 'ஒரே ஒரு வார்த்தை'. கதையைப் படித்த மாமனார் சொன்ன ஒரே வார்த்தை: 'பலே!' லலிதா சஹஸ்ரநாமத்திலிருந்து அநுத்தமா என்ற பெயரைச் செல்ல மருமகளுக்குப் புனைபெயராகச் சூட்டினார். அதன்பின் அநுத்தமா எழுதிக் குவிக்கலானார்.

அநுத்தமாவின் ஆங்கிலப் புலமை அபாரமானது. கற்பித்தவர் கணவர் பத்மநாபன். தி. ஜானகிராமன் காலமானபின் சென்னையில் நடந்த தமிழ் எழுத்தாளர் சங்க இரங்கல் கூட்டத்தில், பல வெளிநாட்டினர் வந்திருந்தார்கள். அப்போது சி.சு.செல்லப்பா, க.நா.சு., நா.பா. முன்னிலையில் தி.ஜா. பற்றி அரைமணி நேரம் ஆங்கிலத்தில் உரையாற்றினார் அநுத்தமா.

தன் எழுத்தை வளர்த்த கி.வா.ஜ. மேல் அநுத்தமாவுக்கு, அளவற்ற பக்தி. கி.வா.ஜ. அநுத்தமாவைத் தங்கை என்றே அறிமுகப்படுத்துவார். ஒருமுறை, கலைமகளுக்கு ஒரு நாவல் தரமுடியுமா என்று கேட்டார் கி.வா.ஜ. அநுத்தமா ஒப்புக்கொண்டார். 'எத்தனை நாட்களில் தரமுடியும்?' என்று கி.வா.ஜ. கேட்டதற்கு, 'பத்து நாட்களில்!' என்று வாய்தவறிச் சொல்லிவிட்டார்! பத்மநாபன் 'அது என்னமாக ஒரு முழு நாவலைப் பத்துநாளில் உன்னால் எழுத முடியும்? பெரியவரிடம் வாக்குக் கொடுத்து விட்டாயே?' என்று அங்கலாய்த்தார்.

அன்றிரவே எழுத ஆரம்பித்தார் அநுத்தமா. எழுத எழுத அந்தக் காகிதங்களிலேயே திருத்தி, கணவரிடம் கொடுப்பார். மனைவி புதிய பக்கங்களை எழுதிக் கொண்டிருக்கும் போதே, ஏற்கெனவே எழுதித் திருத்திய பக்கங்களைக் கணவர் பிரதியெடுப்பார். சொன்னசொல் தவறாமல் பத்தே நாளில் நாவலைக் கொடுத்தபோது கி.வா.ஜ. அசந்து போனாராம். கி.வா.ஜ. பற்றிப் பேசும்போது அநுத்தமாவின் விழிகள் பாசத்தால் மின்னும். 'மணல்வீடு, நைந்த உள்ளம், தவம், நல்லதோர் வீணை, வேப்பமரத்து பங்களா, அங்கயற்கண்ணி' என அநுத்தமா எழுதிய எல்லாம் குடும்பக் கதைகளே. 'சமையலுக்கும் நாவல்களுக்கும் அடுக்களையிலிருந்தே பாத்திரங்களை எடுக்கிறீர்களே?' என்று பாராட்டுவாராம் அகிலன்.

பரமாச்சாரியார் பாராட்டிய நாவல் அவரது 'கேட்ட வரம்'. கேட்டவரம் பாளையம் என்ற ஊரில் நடைபெறும் பஜனை சம்பிரதாய நெறி பற்றிப் பேசும் நாவல்.

சோர்வு வரும்போதெல்லாம் தம்மை உற்சாகப் படுத்திய ஆர்.சூடாமணி அண்மையில் காலமானபோது, அநுத்தமா மனம் தளர்ந்தார். அநாயாச மரணம் கிட்டவேண்டும் என்பது அவர் பிரார்த்தனை. டிசம்பர் 3 இரவு 8.44 வரை நன்றாகப் பேசிக்கொண்டிருந்தவர், 8.45 க்குக் காலமாகிவிட்டார். கேட்டவரம் எழுதியவருக்குக் கேட்ட வரம் கிடைத்துவிட்டது.

திருப்பூர் கிருஷ்ணன்

உங்கள் மங்கையர் மலரில்...

பிப்ரவரி 2011

30 வது

ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்!

புரட்டப் புரட்டப் புதையல்!

தங்க மீனுக்கு 360!

விவரங்களும், போட்டிக் கூப்பனும்

மங்கையர் மலர் டிசம்பர் இதழில்...

அருமையான பம்பர் பரிசு! மிஸ் பண்ணிடாதீங்க!

- போட்டிகள் ஏராளம்!
- பரிசுகள் தாராளம்!
- புத்தம் புதிய வடிவு!
- பளிச் பொலிவு!

அதிக.. அதிக..
அதிகப் பக்கங்கள்

மேலும் விவரங்கள்...?

காத்திருங்கள்...

அடுத்த இதழ் இதே பக்கம்





சீஸன் ஸ்பெஷல்

கஞ்சிரா to கபடிக்குழு!

இன்றைய தலைமுறை இசைக் கலைஞர்கள் ஃப்யூஷன், இசை ஆல்பம், சினிமா இசையமைப்பாளர் என்று தங்கள் எல்லைகளை விஸ்தரித்துக்கொண்டே போகிறார்கள். இதற்கு ஒரு நல்ல உதாரணம் கஞ்சிரா கலைஞரான செல்வ கணேஷ். விக்கு விநாயகராமின் மகனான இவர் இசையமைத்த 'வெண்ணிலா கபடிக்குழு' படத்தின் பாடல்கள் பெரிய அளவில் வெற்றி பெற்றன. இன்று இவர் ஐந்து படங்களுக்கு இசை அமைத்துக் கொண்டிருக்கிறார் என்பது மட்டுமில்லை; ஏழு படங்களுக்கு இசையமைக்க வந்த வாய்ப்பை 'நேரமில்லை' என்று சொல்லி மறுத்துவிட்டார்! சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள செல்வ கணேஷின் ரெக்கார்டிங் தியேட்டரில் அவரை சந்தித்துப் பேசினோம். முக்கிய பகுதிகள்:

"முன் காலத்தில் குரு-சிஷ்ய பாரம்பரியத்தில் குருவுடன் கூடவே இருந்து சங்கீதம் கற்றுக்கொண்டார்கள். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது; வாரத்துக்கு மூன்று நாள் இசை கற்றுக்கொள்கிறார்கள். அந்தக் காலத்தில் ரேடியோவில் மட்டுமே இசையைக் கேட்க முடியும். ஆனால் இன்று தீப்பெட்டி அளவு உள்ள எம்பி3 பிளேயரில் பலமணி நேர இசையைப் பதிவு செய்து கேட்க முடியும். இளம் இசைக் கலைஞர்களுக்குப் உலகளாவிய இசை பரிச்சயமாகி இருக்கிறது. புதுமையான முயற்சிகளுக்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பும் இருக்கிறது. இது தான் கர்நாடக இசைக் கலைஞர்கள் புது முயற்சிகளில் இறங்குவதற்கான தூண்டுதல்.

சுமார் 25 வருடங்களுக்கு முன்னால், எல். சுப்ரமணியம், ஜான் மெக்ளாலின், ஜாகிர் உசைன், என் அப்பா போன்றவர்கள் இணைந்து உருவாக்கி மேற்கத்திய நாடுகளில் பெரும் வரவேற்பினைப் பெற்ற சக்தி ஃப்யூஷன் மியூசிக் குழுவின் இசையால் கவரப்பட்ட ரிச்சி ரே என்ற கிடார் கலைஞர், சென்னையில் வந்து இறங்கி நேரே எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டார். இங்கே சில மாதங்கள் தங்கி இந்திய இசையைக் கற்றுக் கொண்டார். மாலை நேரங்களில் ஒரு



பக்கம் அவர் தம் கிடாரில் பிராக்டீஸ் செய்து கொண்டிருக்கும்போது, இன்னொரு பக்கம் நான் என் கஞ்சிராவிலோ, மிருதங்கத்திலோ, கடத்திலோ பிராக்டீஸ் செய்து கொண்டிருப் பேன். ஒருநாள் விளையாட்டாக நானும் அவரும் சேர்ந்து வாசித்தபோது, அந்த ஃப்யூ ஷன் இசை மிகவும் நன்றாக அமைந்தது. புது மையான முயற்சிகளில் எங்கள் இரண்டுபேருக் குமே ஆர்வம் இருந்ததால்தான் இது சாத்திய மாயிற்று.

அதைத் தொடர்ந்து ஆரோவில்லைச் சேர்ந்த கிடாரிஸ்ட் நாடகா, வயலின் கணேஷ் - குமரேஷ், கிடாரிஸ்ட் ப்ரசன்னா ஆகியோ ருடன் இணைந்து லைவ் ஃப்யூஷன் மேடை நிகழ்ச்சிகள் வழங்கினேன். 1990ல், ஜாகிர் உசைன் மீண்டும் தங்களுடைய சக்தி ஃப்யூ ஷன் இசைக் குழுவுக்கு உயிரூட்டியபோது எனக்கும் அங்கே இடம் கிடைத்தது. உலகம் முழுவதும் பயணம் செய்தேன். ஜாஸ், லத்தீன் இசை, இத்தாலிய இசை, ஜெர்மானிய இசை எனப் பலவும் எனக்கு அறிமுகமாயின.

பிள்ளையார், ஐயப்பன், காஞ்சி மகா சுவாமி கள் பேரில் பக்திப் பாடல்களுக்கும் இசை அமைத்தேன். இடையில் நான் சந்தித்த ஒரு விஷயம் சினிமா. சினிமாவுக்குரிய வீச்சைப் புரிந்து கொண்ட எனக்கு, அதையும் ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை வந்தது. ஆனாலும் அதற்காக யாரிடமும் சென்று வாய்ப்பு கேட்க எனக்குக் கூச்சமாக இருந்தது.

சொன்னால் நம்ப மாட்டீர்கள். சினிமாவில் முதலில் எனக்குக் கசப்பான அனு பவங்களே ஏற்பட்டன. இசையமைக்க நான் ஒப்புக்கொண்டாலும், படமே டிராப் ஆனது; ஒரு படத்துக்காக ஒரு சில பாடல்களுக்கு டியூன் போட்டுக் கொடுத்து, அவை 'சூப்பர்' என்று பாராட்டப்பட்ட நிலையிலும், இன் னொரு படத்துக்கு மொத்தமாக ஐந்து பாடல்கள் எழுதி, டியூன் போட்டு, பாடல் பதிவு செய்த பிறகும் அவை நின்று போயின. இந்த அனுபவங்கள் எனக்கு மனச் சோர்வை ஏற்படுத்தி னாலும், இசை மீதான என் ஆர்வத் தைக் குறைக்கவில்லை'' என்கிறார் செல்வகணேஷ்.

''வெண்ணிலா கபடிக் குழு படத்தின் இசை சினிமாவில் எனக்கு நல்ல அறிமுகத்தைக் கொடுத்தது.

கர்நாடக இசை என்ற வட்டத் துக்கு வெளியே நான் எவ்வளவு பய ணம் செய்து, பேரும், புகழும் பெற் றாலும், கர்நாடக இசைக் கச்சேரிக் காகமேடையில் உட்கார்ந்துவிட்டால், நான் ஒரு பக்கவாத்தியக்காரன். அதற்கான பாரம்பரியத்தை விட்டு அகலமாட்டேன்'' என்று தம் பாதை யில் தெளிவாக இருக்கிறார் செல்வ கணேஷ்.

- எஸ். சந்திரமௌலி

அம்மாவின் கை ஸ்பரிசம்



நேற்று நடந்ததுபோல நினைவிருக்கிறது. நியூயார்க்கிலிருந்து இந்தியாவுக்கு நிரந்தரமாகத் திரும்ப ஏற்பாடுகள் எல்லாம் செய்து நண்பர்களிடம் விடைபெறும்பொழுது கேத்தீ என்னிடம் கேட்டாள், ''ஐந்து வருஷங்களுக்குப்பின் பார்க்கப் போகும் உன் அம்மாவிடம் நீ என்ன கேட்பாய் ராகினி? உனக்குப் பிடித்த டிஷ் ஏதாவது பண்ணித் தரச் சொல்லுவாயா?'' யோசித்தேன். 'என் தலைமுடியை அழுந்த வாரிப் பின்னி விடச் சொல்லுவேன்' என்று எண்ணிக்கொண்டேன். அவளிடம் சொல்லவில்லை. என் கணவர் அருணிடம் மட்டும் சொன்னேன். ''அட அசட்டு அம்மாக் கோண்டுவே'' என்று அவர் என் காதைச் செல்லமாகத் திருகினார்.

மீனாக்ஷி பாலகணேஷ்

''**ரா**கினி, ஸ்கூலுக்கு நேரமாகவில்லையா, தலை பின்னிக்க வா..., '' அம்மாவின் குரல். சீப்பு, எண்ணெய், ரிப்பன் இத்யாதிகளுடன் அம்மாவின் முன் அமர்ந்தாள் ராகினி. தங்கை கல்யாணி, அம்மா பின்னி மடித்துக் கட்டிவிட்ட இரட்டைப் பின்னல்களைத் தடவிக் கொண்டு எழுந்திருந்தாள். ராகினியின் முறை இது. அவளுக்கு அடர்த்தியான சுருட்டை முடி. கல்யாணிக்கு அப்பாவுடையதைப் போல சுருட்டையில்லாத நீண்ட முடி. பின்னுவதும் வாருவதும் வெகு சுலபம். ராகினியின் முடியை அம்மா சிக்கெடுத்து அழுந்த வாரிப் பின்னுவதற்குள் அவளுக்குப் பொறுமையே இருக்காது. ''சீக்கிரம், சீக்கிரம்'' என்று அவசரப்படுவாள். அம்மா விட்டுவிடுவாரா, ஒருவழியாகப் பின்னி, ரிப்பனை வைத்து முடிச்சுப் போட்டதும், பட





ரென்று பின்னலை இழுத்துக் கொண்டு அன்றைய பாடு முடிந்தது என்று எழுந்துவிடுவாள் ராகினி.

சாயங்காலம் திரும்பத் தலை பின்னிக்கொள்ள வரவேமாட்டாள். அம்மாதான், ''முன் நெற்றி முடியை யாவது ஒதுக்கி வாரிக்கோ,'' என வாரிவிடுவார். முகம் கழுவிப் பொட்டு வைத்துக்கொள்வது சாயங்கால வழக்கம். இது எங்கிருந்து முளைத்த வழக்கம், யார் எழுதி வைத்தது என்றுகூடத் தோன்றும் ராகினிக்கு!

வாரத்தில் மூன்று நாட்கள் சாயங்கால வேளையில் பாட்டுக் கிளாசுக்குப் போக வேண்டும். பள்ளிக்கூடப் பாட்டு டீச்சரே, தனியாகவும் பாட்டுச் சொல்லித் தருவார். ராகினிக்கு இனிமையான கணீரென்ற குரல். எல்லாப் பாட்டுப் போட்டிகளிலும் அவளுக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும்.

பாட்டு டீச்சர் சுந்தராம்பாள் கேட்டார் என்று தம் தந்தையிடம், ''எனக்கு ஏன் அப்பா ராகினி என்று பேர் வெச்சீங்க? ரொம்ப 'ஸ்டைலாக இருக்கு'ன்னு எல்லோரும் கேலி செய்யறா,'' என்று ராகினி கூறினாள்.

''ராகினி என்றால் ராக தேவதை என்று அர்த்தம் அம்மா. அப்பாவுக்கு எல்லா ராகமும் பிடிக்கும். கல்யாணி, ஸாவேரி, மத்யமாவதி, தோடி - எதைப் பெயராக வைப்பது? ராகினி ரொம்ப அழகான பெயராகப் பட்டது. அதனால் அதையே உன் பெயராக வைத்தேன். பாட்டி பெயர் மீனாக்ஷியையும்தான் சேர்த்து வைத்திருக்கே... உன் தங்கை பிறந்தப்போ சட்டென்று கல்யாணிதான் ஞாபகம் வந்தது.

அதையே வைத்தாயிற்று,'' அப்பா சொன்னதும் ராகினியின் முகம் விகசித்தது. இத்தனை அழகான பெயருக்கு தான் சொந்தக்காரியா என உள்ளம் பெருமிதத்தில் விம்மியது.

பாட்டுப் போட்டிப் பரிசுகளை அப்பா அம்மாவிடம் கொண்டு வந்து காட்டும்போது அவர்கள் முகத்தில் மலரும் அந்தப் புன்னகையை என்னவென்பது? அதற்கு ஈடே கிடையாது. சந்தோஷம், பெருமை, வாத்ஸல்யம் இன்னும் என்னவெல்லாமோ கலந்த கலவை அது.

பல நேரங்களில் பாட்டு கிளாஸுக்குத் தயாராகும்போது முந்தின தினம் கற்றுக்கொண்ட வர்ணத்தையோ, கீர்த்தனையையோ பாடிப் பார்த்துக்கொண்டிருப்பாள். அப்போது அம்மா தலைவாரி விட்டால் நேரமும் காலமும் தெரியாது. அம்மாவின் விரல்கள் முடியினுள் அழுந்தத் தேய்த்து சீப்பால் வாரும்போது ராகினிக்கு உடம்பே சிலிர்க்கும். இது அம்மாவின் கை ஸ்பரிசத்தாலும் இருக்கலாம் அல்லது அப்பாவுக்குப் பிடித்த 'வனஜாக்ஷி' அட தாள வர்ணத்தின் ஸ்வரங்களை இரண்டாம் காலத்தில் பாடுவதாலும் இருக்கலாம். ராகினிக்கு அது ஒரு அற்புதமான அனுபவம்.

தானாகத் தலைவாரிப் பின்னிக் கொள்ளத் தெரியாமலே பதினைந்து வயதுவரை வளர்ந்துவிட்டாள் ராகினி. மேல்படிப்புக்காக ஹாஸ்டலுக்குப் போனபோதுதான் அது எவ்வளவு 'சிக்கலா'ன சமாசாரம் என்று புரிந்தது. விடுமுறைக்கு வீட்டுக்கு வரும்போதெல்லாம் தானே சீப்பும் கையுமாக ஓடிப்போய் அம்மாவிடம் தலை வாரிப் பின்னிவிட வேண்டிக்கொள்வாள். அப்போது அம்மாவின் 'ட்ரேட் மார்க்'கான குறும்புப் புன்னகையைக் காணக் கண் கோடி வேண்டும்!

ராகினியின் முடியை அம்மா சிக்கெடுத்து அழுந்த வாரிப் பின்னுவதற்குள் அவளுக்குப் பொறுமையே இருக்காது.

அம்மாவின் கையால் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது இன்னொரு சுகானுபவம். அழுந்த அழுந்த எண்ணெயை விரல்களால் அம்மா மண்டையில் தேய்த்துவிடும்போது தூக்கமே வந்துவிடும். தலையை எண்ணெய் போகச் சீயக்காய், ஷாம்பூ போட்டுத் தேய்த்துவிட்டு, 'பாக்கிக் குளியலை நீயே முடிச்சுக்கோ,' என அம்மா விட்டுவிட்டு வந்ததும் ஆரம்பிக்கும் ராகினியின் சங்கீத சாம்ராஜ்யம். ஏதாவது ஒரு வர்ணத்தின் ஸ்வரங்களை இரண்டு காலங்களில் பாடிக் கொண்டு நீரை ஊற்றிக் கொண்டே இருப்பாள். 'பெரிய பாடகி என்ற எண்ணம்! இரண்டாம் கால ஸ்வரங்கள் வெகு அமர்க்களமாக வந்து விழும். அப்புறம் பாரதியார் பாட்டு, திருப்புகழ், தேசபக்திப் பாடல்கள் எல்லாம்



அம்மாவின் கை ஸ்பரிசம்

பாடி முடித்த பிறகு ஒரு வழியாகக் களைத்து வெளியே வருவாள்.

அது அந்தக் காலம்...

இன்று...அற்புதமான கச்சேரி. வித்வான் கல்யாணியை அருவியாகப் பொழிந்து கொண்டிருந்தார். 'பஜரேரேச்சித பாலாம்பிகாம்.' அப்பாவுக்கு மிகவும் பிடித்த பாட்டு என்ற நினைவு வந்தபோது கண்கள் பனித்தன.

''ராகினிக் குட்டீ, தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்று அவ்வைப் பாட்டி சொல்லியிருக்கார் தெரியுமா? உனக்கு இன்றைக்கு கணக்குப் பரீட்சையில்லையா வாய்ப்பாடு மறந்து போயிடுத்தென்றால் அம்மாவை நினைத்துக்கொள்,'' ஆறு வயது ராகினி தலையை சீரியஸாக அசைத்து ஆமோதிக்கிறாள். எவ்வளவு சுலபமான வழி! ஞாபக சக்திக்கான மருந்து.

ம்...

''தேவீம் சக்தி பீஜோத்பவ மாத்ருகார்ண சரீரிணீம்,'' பாடகர் நிரவலை ஆரம்பித்துவிட்டார். 'தேவீம்' என ஒவ்வொரு முறையும் அவர் திரும்பப் பாடும்போது, உடலின் நாளங்களில் எல்லாம் அந்தத் தேவியே வந்து அமர்ந்துகொண்டு அரவணைப்பது போல என்ன புளகாங்கிதம்? அம்மாவின் விரல்கள் தலையைத் தடவிக் கோதி வருடி வாருவது போன்ற உணர்வு. மெல்ல மெல்ல என் விம்மல்கள் சமனப்படுகின்றன. தேவியை அர்ச்சிக்கும் மல்லிகை மலர்களாக ஸ்வரக் கோர்வைகள் மெல்ல ஆரம்பித்துப் பின் கொத்துக் கொத்தாக அவளடியில் விழுகின்றன. அப்பா என் பக்கத்தில் அமர்ந்து புன்னகையுடன், பரவசத்துடன் கல்யாணியை ரசிப்பது போன்ற உணர்வு. கண்களில் சந்தோஷம் வழிய, ''கல்யாணி இஸ் எ கிரேட் ராகம்,'' என்றபடி என்னைப் பார்த்துப் புளகாங்கிக்கும் அப்பா; சில ஆண்டுகளுக்கு முன்பு தீக்ஷிதர் பாடின கோயில்களுக்கெல்லாம் போய் வந்தபோது வைத்தீஸ்வரன் கோயில் பாலாம்பா சன்னிதியில், என்னை 'பஜரே' பாடச் சொல்லிச் சந்தோஷப்பட்டுக் கொண்ட அப்பா; சக்தி வழிபாட்டின் பெருமையை விளக்கி, என்னை தேவி கிருதிகளாகக் கற்றுக்கொள்ள வைத்த அப்பா; இப்பொழுது என்னருகே இல்லாத அப்பா; தெய்வமாகிவிட்ட அப்பா. இதயம் கல்போல கனக்கிறது.

ராகினி என்றால் ராகதேவதை என்று அர்த்தம். கூடவே அழகான பெயரும். அதனால்தான் உனக்கு வைத்தேன்.



அம்மாவுக்குப் பக்கவாதம் வந்து நாற்காலியுடன் ஐக்கியமாகிவிட்டார். ஆசைப்பட்டால்கூட இப்போதெல்லாம் என் தலையை வாரிவிட முடியாது. ம்... எண்ணங்கள் தறிகெட்டு ஓடுகின்றன.

புரியாத சிறு வயதில்,

எல்லாம் புரிந்துவிட்டது போன்ற பெரிய மனுஷத் தனத்தில், அப்பாவிடம் ஒருநாள் கேட்டேன், ''அப்பா, மறுபடியும் கருவடையும் குழியில் தள்ளி என்னை வருத் தப் படுத்த வேண் டாம்,'' என்று பாடி யிருக்கிறார்களே, வாழ்க்கை அவ்வளவு கஷ்டமானதா?''



அப்பாவின் புன்னகை பூத்த முகம் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தது.

''நீ பொடிசும்மா ராகினி. உனக்கு இப்போ இதைப் புரியும்படி சொல்றது கொஞ்சம் சிரமம். உலகத்தில் எல்லோருக்கும் ஏதாவது கஷ்டம் இருந்தே தீரும். தெய்வ சிந்தனைதான் அதைத் தாங்கி வாழத் துணை இருக்கும். சங்கீதம் ஒரு பெரிய விஷயம். ஆனால் ஒன்று சொல்றேன், நீ மணிக்கணக்காக உட்கார்ந்து பூஜை பண்ண வேண்டாம், மனப்பூர்வமாக இரண்டு க்ருதிகளைப் பாடினாலே போதும். அதுவே உனக்கு என்றைக்கும் வாழ்க்கையை வெற்றி கொள்ளும் தெம்பு தரும்.''

சங்கீத ரசனை தெய்வ உபாசனை இரண்டையும் கல்யாணியில் கலந்து உணர்ந்ததில் அப்பாவிடம் கேட்ட கேள்விக்கு பதில் கிடைத்தது.

பலத்த கைதட்டல் பாடல் முடிவுற்றதை அறிவித்தது. மயங்கிய கண்களைத் திறக்கிறேன். சிந்தை தெளிவுற்றிருந்தது. பளிச்சென்று ஒன்று புரிந்தது. அப்பா எனக்குக் கொடுத்துச் சென்றிருக்கும் எவ்வளவு பெரிய பொக்கிஷம் இது! சங்கீத ரசனை, தெய்வ உபாசனை இன்றைய கல்யாணியில் இரண்டையும் கலந்துணர்ந்ததில், அப்பாவிடம் அன்று கேட்ட கேள்விக்குப் பதில் பிறந்திருக்கிறது.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வமாக இருந்த அப்பாவின் பலத்தையும் தைரியத்தையும் என்னுள் உணர்கிறேன். வீடு சென்றதும் அம்மாவிடம் ஓடுகிறேன். எனக்காகக் காத்துக் கொண்டு இருக்கிறார். என்னைக் கண்டதும் ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் குழந்தைபோல அவர் முகத்தில் மலரும் சிறு முறுவல். அவர் கை ஸ்பரிசம் புத்துணர்வை அளிக்கின்றது. 'தேவீம் சக்தி பீஜோத்பவ மாத்ருகார்ண சரீரிணீம்.' - கல்யாணி கன கம்பீரமாக என்னுள் இசைத்தது. என் அம்மாவை இறுக அணைத்துக் கொள்கிறேன். இப்போது அவரும் எனக்கு ஒரு குழந்தை. என் கை ஸ்பரிசத்தில் ஆறுதல் அடையும் குழந்தை. தலையை நிமிர்த்தினால், அம்மா பின்னால் உள்ள ஃபோட்டோவிலிருந்து அப்பா என்னைப் பார்த்து அன்பு வழிய புன்னகைக்கிறார். ●

அம்மாவின் கை ஸ்பரிசம்

சீர்நாடிக் களத்தில் ஸ்டெடியாக நிலை கொண்டு இசை மழையைப் பரவலாகப் பொழிந்துவரும் இளம்புயல் சிக்கில் குருசரண் குடும்பத்தினர் குழலிசையிலும் (சிக்கில் சகோதரிகள், சிக்கில் மாலா) நாடகத் துறையிலும் (இவரது தந்தை சந்துரு சிறந்த நடிகர்) இருக்க, இவர் வாய்ப்பாட்டு மூலம் வசீகரித்து வருபவர். கடந்த மே மாதம் இவர் மணந்த ஜனனி, ஜர்னலிஸம் படித்தவர். இருவரும் இணைந்து வழங்கும் ஈஸி பேட்டி:

கனவு

குருசரண்: நல்ல இசைக் கலைஞனாக



ஜனனியை உருக்கிய கர்ணரஞ்சனி!

நான் வரணும் என்பதுதான் என் பாட்டியோட கனவு. அதுதான் இப்போ என்னோட கனவும். நான் செய்யற ஒவ்வொரு கச்சேரியும் கேட்கிறவங்க ஞாபகத்துல நிற்கிறா மாதிரி இருக்கணும்.



கடவுள்

குருசரண்: கடவுள் நம்பிக்கையோடு நிறைய சென்டிமெண்ட்ஸும் உண்டு. சில முக்கிய சமயங்களில் எனக்கு உகந்த சாமி படங்கள் ஏதாவது கண்ணுக்குத் தெரியறதான்னு பார்த்துப்பேன். என் அப்பா கூட அடிக்கடி 'இவன் ஏன் இவ்வளவு செண்டிமெண்ட் பார்க்கிறான்?'னு சலிச்சுப் பார். அப்புறம்தான் தெரிஞ்சது, என் அப்பாவுக்கே இதுபோல நிறைய செண்டிமெண்ட்ஸ் உண்டு! சிக்கல் சிங்காரவேலரும் பெருமாள்மலை பிரசன்ன வெங்கடேசரும் குல தெய்வங்கள்.

கடவுள் நம்பிக்கையோடு நிறைய செண்டிமெண்ட்ஸும் உண்டு.

ஜனனி: நோ செண்டிமெண்ட்ஸ்! கடவுள் நமக்கு உள்ளேயே இருக்கார்னு நம்புகிறவள் நான். நாம எது செஞ்சாலும், நமக்குள்ளே இருந்துகொண்டு அவர்தான் செய்யறார்.

காதல்

ஜனனி: ஒவ்வொரு நாளும் எங்களுக்கு இடையிலான அண்டர்ஸ்டாண்டிங் அதிகமாகிண்டே வருதே. அதைத்தான் நான் காதல்னு நினைக்கிறேன்.

கணவன்-மனைவி

குருசரண்: கல்யாணத்துக்கு அப்புறம் வாழ்க்கை மாறிடும், பொறுப்பு கூடிடும்னு பயமுறுத்தினாங்க. ஆனா நான் ஒண்ணும் பெரிசா மாற்றத்தை உணரலை. வாழ்க்கை ரொம்ப லைட்டாதான் இருக்கு. எல்லா விஷயங்களையும் ஷேர் பண்ணிக்க நம்ம கூட இன்னொருவர் இருப்பது மனத்துக்குத் தெம்பாவும், சந்தோஷமாவும் இருக்கு.

களிப்பு

இருவரும்: கச்சேரிகளுக்காக வெளியூர் போகிறபோது நிகழ்ச்சி முடிந்தபிறகு இரண்டு நாட்கள் டென்ஷன் ஏதுமில்லாமல் ரிலாக்ஸ்டாக ஊர் சுற்றிப் பார்ப்பது!

கற்பனை

குருசரண்: கலைஞர்களின் உயிர்மூச்சு. மேடையில் கச்சேரி பண்ணுகிறபோது, ஏராளமான ரசிகர்களைப் பார்த்ததும் கற்பனை பெருகி நல்ல முறையிலே வெளிப்படுவதும் உண்டு; கற்பனை வராமல் தவித்ததும் உண்டு.

கற்றது

குருசரண்: பாட்டிக்கிட்டேதான் வாழ்க்கையில் நான் ரொம்ப முக்கியமான ஒரு விஷயத்தைக் கத்துக்கிட்டேன். கச்சேரி பண்ண ஆரம்பித்த புதுசில், வீட்டுக்கு வந்ததும் கச்சேரி பற்றி யார் கேட்டாலும் ரொம்ப நன்னா பாடினேன்னு சொல்லுவேன். அதைக் கவனித்த பாட்டி (சிக்கில் குஞ்சுமணி), ''அப்படிச் சொல்லாதே! நன்னா அமைஞ்சதுன்னு சொல்லும்; ஏன்னா, உன் முயற்சி, திறமைக்கு அப்பால் கச்சேரி நன்றாக அமைய இன்னும் நிறைய விஷயங்கள் ஒன்று

சேரணும். எல்லாத்துக்கும் நீயே கிரெடிட் எடுத்துக்க முடியாது!" என்றார்.

ஜனனி: அன்பு, வாழ்க்கையில் எவ்வளவு முக்கியம்னு நான் ஒவ்வொரு நாளும் கத்துக்கறேன். கோபம், கண்டிப்பு சாதிக்காததை அன்பு சுலபமாகச் செய்துவிடும். நிரந்தரமான தீர்வு தரும். பிறந்த வீட்டிலிருந்து, புகுந்த வீட்டுக்கு வரும் ஒரு பெண்ணுக்கு இந்த நம்பிக்கை உறுதியா இருக்கிறது ரொம்ப உதவும்.

கேட்டது

குருசரண்: செம்மங்குடி மாமா பாடின ஒரு கச்சேரிக்கு 'ஏர்போர்ட் கச்சேரி'ன்னே பேரு. காரணம் அது ஒரு திறந்த வெளியில் நடந்த கச்சேரி. நடு நடுவுல நிறைய ஏரோபிளேன்கள் பறந்து போகிற சப்தம் கேட்கும். கச்சேரிக்கு சப்தம் இடைஞ்சலாக இருந்தாலும், அவர் அவ்வப்போது ஹாஸ்யமாக கமெண்ட் அடித்துக்கொண்டே பாடுவார். அதேபோல கிருஷ்ண கான சபாவுல பாடின கீரவாணி. அதுல ஹிந்துஸ்தானி சாயலையும் புகுத்தி இருப்பார். கூட வாசிச்ச எம்.எஸ்.கோபால கிருஷ்ணனை அவ்வப்போது 'அச்சா! அச்சா!' என்று உற்சாகப்படுத்துவார். கேட்க ரொம்ப நன்னா இருக்கும், பயணங்களின் போது ஐபாடில் அடிக்கடி கேட்டு ரசிப்பேன்.

ஜனனி: ஒரு கச்சேரியில சரண், கர்ண ரஞ்சனி பாடினபோது, ரொம்ப உருக்கமாக இருந்தது. எனக்குத்தான் அப்படி இருக்குன்னு நினைத்துக் கொண்டு திரும்பி சரணுடைய அம்மாவைப் பார்த்தால் அவரும் எமோஷனலாக இருந்தார். சுற்றும் முற்றும் பார்த்தால் எல்லோருக்குமே அதே போன்ற உணர்வுதான். அண்மையில் மறைந்த அவரோட பாட்டியின் ஸ்பெஷாலிட்டி ராகம் கர்ணரஞ்சனி.

கண்டது

ஜனனி: மிஷ்கினோட நந்தலாலா படம். அவரோட முந்தைய படங்களைப் போலவே இதுவும் எங்களுக்கு ரொம்ப பிடிச்சது. அன்பின் வலிமையை, ரிலேஷன்ஷிப்பை ரொம்ப அழகா சொல்லி இருக்கார்.

குரு

குருசரண்: நான் படிச்ச வித்யா மந்திர் ஸ்கூல்ல ஒரு கல்சுரல் ஷோவுக்கு ஜட்ஜ் ஆக என்னைக் கூப்பிட்டிருந்தாங்க. எனக்கு உதவிசெய்துகொண்டிருந்த பையனின் தடுமாற்றத்தால் நிகழ்ச்சிக்கு நடுவில் சின்னத் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. உடனே நான் மைக்கை வாங்கி அந்தப் பையனின் தவறு காரணமா, தடங்கல் ஏற்பட்டுவிட்டது; கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று அறிவித்துவிட்டேன். நிகழ்ச்சி முடிந்து, விடைபெறும்போது பிரின்சிபால் பவானி ரகுநந்தன் மேடம், 'நிகழ்ச்சியில் தடங்கல் ஏற்பட்டபோது, பொதுவாக அதற்காக வருத்தம் தெரி



மிஷ்கினோட 'நந்தலாலா' எங்களுக்கு ரொம்ப பிடிச்சது.

விச்சிருக்கணும்; அப்படி இல்லாம உன்னுடைய டீமில் இருந்த பையனை நீ விட்டுக்கொடுத்தது தப்பு. நீ மேடையில் பாடும்போது ஒரு டீம் லீடர். உன் கூட இருக்கிற யாரையும் ஒரு போதும் பப்ளிக்கா விட்டுக் கொடுக்கக் கூடாது. எந்தத் தவறுக்கும் நீயும் சேர்ந்துதான் பொறுப்பேத்துக்கணும்'னு சொன்னார். அது நான் கற்றுக்கொண்ட ரொம்ப முக்கியமான பாடம்.



கமலைத் தொட்ட கையை யாரும் தொட விடமாட்டேன்

ஜனனி: என் அம்மாவும், அப்பாவும்தான் எனக்கு குரு. அம்மா ஒவ்வொரு விஷயத்துலயும் முக்கியமான முன்னுதாரணம்கூட. சரணைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட பிறகு அம்மா சொல்லித் தந்தது எல்லாம் எனக்கு ரொம்ப உதவியா இருக்கு. தேங்க் யூ அம்மா!

கன்னத்துக் குழி

குருசரண்: என்னை ரொம்ப நெளிய வைக்கிற விஷயம். சின்னக் குழந்தையா இருந்தப்போ என் முகத்துல அஞ்சு குழிகள் இருந்ததாம்!

ஜனனி: இவரோட அம்மா வழி வந்த பரம்பரைச் சொத்து அது! எங்க கல்யாணம் நிச்சயமானதும், எங்க வீட்டுல 'சரணோட கன்னத்துக் குழியில நீ விழுந்துட்ட!' என்று கிண்டல் பண்ணினார்கள். (ஜனனி சிரிக்க, குருசரணும் சிரிக்க, கன்னத்துக்குழி இன்னும் ஆழமாகிறது!)

கவனம்

குருசரண்: ஆரம்பத்துல கச்சேரி பண்ணும்போது, மெய்மறந்து இஷ்டம் போல பாடினதுண்டு. பாட்டி சொல்லிச் சொல்லி இப்போ ரொம்ப பரிச்சயமான ராகம்னா கூட தெரிஞ்சதையெல்லாம் கொட்டிடாம, கவனமாப் பார்த் துக்கறேன்.

கடத்தல்

ஜனனி: செல்ஃபோன், கம்ப்யூட்டர், இன்டர்னெட், வீடியோ கேம்ஸ் எதுவுமே இல்லாத, வெளி உலகத்தோட தொடர்பு கொள்ளவே முடியாத இடத்துக்கு சரணை ரெண்டு நாள் கடத்திண்டு போகணும்னு ஆசை. தேன் நிலவுக்குப் போனபோது கூட, ஹோட்டல் ரூமுக்குப் போனதும் இவர் முதலில் சொன்ன வார்த்தை, 'ஹை இங்கே வைஃபை (இன்டர்னெட்) இருக்கு' என்பதுதான்! வைஃபை ஒழிக!

கட்டுப்பாடு

குருசரண்: அடுத்த ஏழு நாட்களுக்கு கச்சேரி ஏதும் இல்லைன்னாதான் ஐஸ்க்ரீமோ, குளிர் பண்டங்களோ சாப்பிடுவேன்.

ஜனனி: சமீபத்துல அமெரிக்கா போன போது, ரெண்டு கச்சேரிகளையும் முடிச்ச பிறகு, 'ஹையா! இனிமே கச்சேரி இல்லைன்னு சொல்லிட்டு ஐஸ்க்ரீமை வெட்டி அனுபவிச்சாச்சு!'

கமல்

ஜனனி: சரண் பயங்கரமான கமல் ரசிகர். ஒருநாள் கமலுடன் கை குலுக்கிவிட்டு, 'இந்தக் கையை யாரும் தொட விடமாட்டேன்'னு சொல்லிண்டு இருந்தார்!

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

அட்டை, படங்கள்: ஸ்ரீஹரி



* ஜி.ராமநாதன்



சாக்ஸுக்குள் சிக்காத கமகங்கள்!

மேடையில் இருந்த கலைஞர்களையும் சேர்த்து, அரங்கத்தில் ஒரு டஜன் ஆட்கள்தான். ஆனால், கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸில் காலை நேரக் கச்சேரி செய்த ஜி.ராமநாதன் வாசித்த சாக்ஸஃபோன், அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் இசையைப் பொழிந்தது. மேற்கத்திய வாத்தியம். அதில் கர்நாடக இசைக்கே உரிய கமகங்கள் (வளைவுகள், நெளிவு, சுளிவுகள்) வாசிப்பது வைக்கோல் போரில் ஊசி தேடும் சவால்! துணிந்து ஸாவேரி வர்ணத்துடன் கச்சேரியை ஆரம்பித்தார் ராமநாதன். சாக்ஸுக்குள் சிக்காத கமகங்களை வயலின் வலையில் சுரேஷ் பாபு பிடித்துப்போட, கச்சேரி 'ஞான விநாயகனே'வுக்கு நகர்ந்தது. அட சீர்காழி கோவிந்தராஜன் பிரபலப்படுத்திய பாட்டல்லவா! கம்பீர நாட்டையில் கமக சவால் இல்லாததால் ஜம்மென்று முன்னேறி, ஆபோகி ராகத்தின் படிக்கட்டு அமைப்புகளில் ஏறி, இறங்கி - 'சபாபதிக்கு வேறு



தெய்வம்' என்ற கோபால கிருஷ்ண பாரதி பாடலை உணர்ச்சிபூர்வமாக வாசித்தார். அங்கிருந்து கற்பனை ஸ்வர காத்தாடியைக் கொஞ்சம் பறக்கவிட்ட பிறகு லதாங்கி ராகத்துக்குப் பாதை போட்டார் ராமநாதன். மழையில் பாழான சென்னை சாலைகள் மாதிரி அவருக்குக் கொஞ்சம்



சுஷ்மா சோமசேகர்

கஷ்டம் கொடுத்தது அந்தப் பாதை. ஆனால் சுரேஷ் பாபு அதையே ராஜ பாட்டையாக மாற்றிக் கொண்டு வெளுத்துக் கட்டினார். (வயலின் கோவிந்தசாமி நாயகரின் பேரனாம்!)

சங்கராபரணம், சாக்ஸபோனில் சங்கடங்கள் தராமல் ஒலிக்கக்கூடிய ராகம். அதனை முக்கிய ராகமாக வாசித்து, சரோஜதள நேத்ரி கீர்த்தனை, நிரவல், ஸ்வரம் என்று கச்சேரியை ஒரு வடிவத்துக்குக் கொண்டு வந்துவிட்ட ராமநாதனுக்கு ஒரு சபாஷ்! அவருக்கு இடையூறில்லாமல் கை கொடுத்து, பரஸ்பரம் சந்தோஷத்துடன் கை கோத்து கலகலப்பூட்டிய மிருதங்கம் ஆம்பூர் பத்மநாபனுக்கும் கஞ்சிரா சுனில் குமாருக்கும் டபுள் சபாஷ்!

சுவாதியின் சுவடி சொல்வது: *வாத்தியத்தின் லிமிடேஷன் உணர்ந்து சாதகத்தைக் கூட்டினால் ராமநாதனுக்கு ஊசி கிடைக்கிறதோ இல்லையோ, வைக்கோல் போரின் அடர்த்தி நிச்சயம் குறையும்!*

மத்தியானமும் ஆபோகிதான் -அதே சபாவின் அதே அரங்கில். (நாரத கான சபாவின் மினி ஹால்.) இம்முறை சுஷ்மா சோமசேகரின் தேனான குரலில். 'குருவருளும் திருவருளும்' தர கணபதியைத் துதித்துவிட்டு கமாஸ் ராகத்தை அவுட்வான ஆலாபனை செய்தார் சுஷ்மா. சந்தானகோபால கிருஷ்ணம் என்ற தீக்ஷிதரின் குட்டி கீர்த்தனை, ஒன்றரை மணி நேரக் கச்சேரிக்கு ஏற்ற தேர்வு. அதன் பிறகு மலையமாருத ராக ஆலாபனை - வீசிடும் இளந்தென்றலாகப் புறப்பட்டு, வேகத்தில் சற்றே தடம் மாறினாலும் நல்ல இசை வடிவம்தான்.

'தன்யுடெவ்வடோ தாசரதி' என்ற பட்டணம் சுப்ரமண்ய அய்யர் பாடல் இந்த ராகத்தில். 'வரமத்தள தாளாதி' என்ற வரியில் சுஷ்மா செய்த நிரவலும் பளிச்சென்று செகண்ட் ஸ்பீடில் ஸ்வரங்களும் நல்ல கட்டுப்பாடுடன் மிளிர்ந்தன. 'சுருதி சுத்தமுதோ

சுகமு கான' என்பது இப்பாடலின் வரி. சுஷ்மாவின் பாட்டுக்கும் இது பொருந்தும்படி அவரைத் தயார் செய்துள்ள குரு லலிதா சிவகுமாருக்கு முதல் பூச்செண்டு. டி.கே.பட்டம்மாளின் மருமகள் தான் குரு என்பதால் சிஷ்யையான சுஷ்மாவின் உச்சரிப்பிலும் சங்கீதத்திலும் ஸ்பஷ்டம்.

டி.கே.பி. பாணியின் தெளிவோடு பைரவி ராகத்தை அழுத்தமாய் வடிவமைத்து, வந்தது வராமல் சுஷ்மா பாட, ராகுல் சீனிவாசன் வயலினில் அடிக்கோடிட்டுக் கொண்டே வந்து, தனியே ஒரு பைரவி கோலமும் போட, ரக்ஷ பெட்டரே கீர்த்தனை அடுக்கடுக்கான சங்கதிகளுடன் அமைதியாய் விரிந்தது.

மிருதங்கத்தால் போஷித்த அம்மங்குடி நாராயணன் அடக்கமாகத் தனி வாசித்தார். அதற்காக ஒரு முடிவு கொடுக்காமலே விட்டு விடுவதா அம்மங்குடியாரே!

சுவாதியின் சுவடி சொல்வது: *நிதானம் கூட்டினால், சுஷ்மா விரைந்து வெற்றிக் கொடியை நாட்டலாம்.*

ராம்ஜியின் இசை மழலை அறிமுகப்படுத்திய பிருந்தா மாணிக்கவாசகம், மழலைக் கட்டமெல்லாம் தாண்டி முதிர்ச்சி கட்டத்துக்கு வந்துவிட்டார்! பிரம்ம கான சபாவில் அவர் பாடிய ஒரு மணி கச்சேரி இதனைத் தீர்மானமாக உணர்த்தியது. இயற்கையான குரல் வளம், கூடுதலாகக் கற்பனை வளம், ஆரோக்கியமான தன்னம்பிக்கை, அபார உழைப்பு என்ற வெற்றி சூத்திரம் பிருந்தாவுக்கு வசப்பட்டிருப்பது தெரிந்தது.



* பிருந்தா மாணிக்கவாசகம்

ஆரபி ராகத்தில் 'பிரணவாகாரம்' என்ற கீர்த்தனையுடன் ஆரம்பித்தது கச்சேரி. வளமான கற்பனை ஸ்வரங்கள் பாடகியின் திறமையைப் பறை சாற்றின. சிம்மேந்திர மத்யமம் ஆலாபனையில் கம்பீரம், முழுமை, 'பாமர ஜன பாலினி' கீர்த்தனைக்கான நிரவல் ஸ்வரத்தில் தெள்ளிய பாவம் என்று முன்னேறி, தியாகராஜரின் 'நன்னு விடசி'யின் தீர்க்கமான நிதானத்தில் நின்று நிர்வாகம் செய்து, அடுத்து விறுவிறுப்புக்கு 'ஆடிக்கொண்டாரை'க் கையாண்டு மத்யமாவதியை மெயினுக்கு எடுத்துக் கொண்டார் பிருந்தா. 'சரவணபவ குஹனே' - பாபனாசம் சிவனின் கீர்த்தனை. வார்த்தை சிதறாத நிரவல், தீர்மானமாக வந்து விழுந்த கற்பனை ஸ்வரம். ஆஹிர் பைரவியில் லால்குடி ஜெயராமன் இயற்றிய 'ஸ்ரீஜகதீஸ்வரி'யுடன் நிறைந்தது கச்சேரி. கச்சேரி முழுவதும் போஷித்து வாசித்தனர் ஸ்ரீவாஞ்சியம் ஸ்ரீராம் (வயலின்), சுதர்சன் (மிருதங்கம்). தனி ஆலாபனை, தனியாவர்த்தனத்திலும் வெளுத்துக் கட்டினர்.

பலவிதமான ராக-தாள அமைப்புகளில், பல்வேறு மொழிப் பாடல்களைத் தேர்வு செய்ததிலும் சரி, நேர நிர்வாகத்திலும் சரி, பிருந்தா மாணிக்கவாசகத்திடம் ஒரு மெருகு தெரிகிறது.

சுவாதியின் சுவடி சொல்வது: *பிருந்தா விடாமல் உழைத்தால் விண்ணளவு உயரலாம்!*

படங்கள்: **ஸ்ரீஹரி, சுவாதி**

அருள்வாக்கு

ஸங்கீதம் உருவாக்கும் ப்ரேமை!

வேதாந்தத்திலே எல்லாம் உள்ளத்துக்குள்ளே ஹ்ருதய குஹையில் சாந்தத்தில் ஒடுங்கிவிடுவதாகச் சொல்லியிருக்கிறது. அந்தச் சாந்தத்திலே சேர்க்கத்தான் ஸங்கீதம் ஏற்பட்டிருக்கிறது. சியாமளா என்று ஸங்கீத மூர்த்தியாகப் பராசக்தி இருக்கிறபோது அவளுடைய உள்ளம் அப்படியே குழைந்திருக்கிறது (ம்ருதுள ஸ்வாந்தாம்); அவள் பரம சாந்தையாக இருக்கிறாள் (சாந்தாம்) என்று காளிதாஸன் 'நவரத்னமாலா'வில் சொல்கிறார். உள்ளக் குழைவு என்பது ப்ரேமை, கருணை ஸங்கீதத்தினாலே ஆத்ம சாந்தம் உண்டான பிறகு, ஸகலமும் அந்த ஆத்மாவே என்பதால் எல்லாவற்றிடமும் அன்பு பொங்குவதைத்தான் சாந்தாம், ம்ருதுள ஸ்வாந்தாம் என்று கவி சொல்கிறார். இந்த்ரிய இன்பமாயில்லாமல் ஆத்மானந்தத்தில் சேர்ப்பதாலேயே ஸங்கீதம் இப்படிப்பட்ட ப்ரேமை உள்ளத்தை உண்டாக்குகிறது. நினைத்துப் பார்த்தாலே மனம் குளிர்கிறது. அம்பிகை வீணையில் சப்த ஸ்வரங்களையும் மீட்டியபடி, அந்த ரீங்காரத்திலேயே சொக்கிப் பரம சாந்தையாக இருக்கிறாள்; அவளுடைய ஹ்ருதயம் புஷ்பம் மாதிரி மிருதுளமாக ஆகி கருணை மது வைப் பொழிகிறது. இதை நினைக்கும்போது பக்தர்களுக்கும் மனம் குழைகிறது.



பக்தியும், அன்பும், சாந்தமும் தன்னால் ஏற்படுகின்றன. வர்ணனாதீதமான சாந்தத்தில், ஆனந்தத்தில் முழுகியிருக்கிற ஸங்கீத அம்பிகை நமக்கும் சாந்தம், ஆனந்தம், அன்பினால் குழைந்த மனம் முதலியவற்றை அநுக்ரஹிக்கிறாள். 'ஸங்கீத மூர்த்தி' என்கிறபோது அவள் உத்தேசம் பண்ணி, அதாவது deliberate-ஆக இப்படிச் செய்கிறாளென்று தோன்றவில்லை. ஸப்த ஸ்வரங்களில் ரமிக்கவேண்டுமென்பதற்காகத்தான் அவள் வீணையை மீட்டுவதாகத் தெரிகிறது.

''ஸரிகமபதநி ரதாம்'' என்று ஸப்தஸ்வரானந்தப்படுபவளாகவே ச்லோகத்தில் ஆரம்பித்திருக்கிறது. அவள் அப்படி ஆனந்தப்பட்டால், லோகம் பூரா அவளுக்குள் இருப்பதால் லோகமும் ஆனந்தப்படுகிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

காதல் கேம்பஸ்

வே.எழிலரசு



இதுவரை...

கல்லூரி மாணவர் அமைப்புத் தேர்தலில் போட்டியிடும் உதய குமாரை - ஆனந்த், எட்வின், அகிலா, வசுமதி ஆகியோர் ஆதரிக்கின்றனர். அகிலா, உதயகுமாரைத் தீவிரமாகக் காதலிக்கிறாள். ஆனால் அவள் தம் காதலை வெளிப்படுத்தாமல் தயங்குகிறாள். காதலை உதயகுமாரிடம் சொல்வதற்குத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் பொழுதுகளில் ஏதாவது தடை ஏற்பட்டுச் சொல்ல முடியாமல் ஆகிவிடுகிறது. எதிர்த்துப் போட்டியிடும் சதீஷ் அரசியல் செல்வாக்குள்ள குடும்பத்திலிருந்து வந்தவன் என்பதாலும், இயல்பாகவே அவன் 'கலாட்டா' பேர்வழி என்பதாலும் தேர்தலுக்கு அதிரடி வியூகங்களை அமைக்கிறான். ஆனால் அகிலா, தேசிய தொலைக் காட்சி சேனல் ஒன்றை கல்லூரித் தேர்தலன்று வரவழைக்க, சதீஷின் திட்டங்கள் செயல்வடிவம் பெறாமல் போவதோடு, தேர்தலும் அமைதியாக நடக்கிறது. தேர்தலில் உதயகுமார் வெற்றி பெறுகிறான். தோற்றுவிட்ட சதீஷின் எதிர்வினை, எதிர்பார்த்ததற்கு மாறாகக் கண்ணியமாக இருப்பதைக் கண்டு அனைவரும் ஆச்சர்யப் படுகின்றனர்.

கல்லூரியின் தென்றல் இலக்கிய விழாவுக்குத் தொடக்க விழாவாக 'காதல் வளாகம்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடத்த திட்டமிடுகின்ற தினத்தில் சதீஷ், அகிலாவைத் தனியாக அழைத்துச் சென்று தம் காதலைச் சொல்கிறான். அகிலா, உதயகுமாரைக் காதலிப்பதால் சதீஷின் காதலை ஏற்க மறுத்துவிடுகிறாள்.

கவியரங்கத்தில் கவிதையின் மூலம் தமது காதலைச் சொல்ல அகிலா யோசிக்க, கவியரங்கத்தில் அகிலா கவிதை வாசிக்கும் முன்பாகவே மாணவர்களுக்குள் அடிதடி ஏற்பட்டு கவியரங்கம் பாதியில் நின்றுவிடுகிறது.

விழா பாதியில் நின்றுவிட்ட கோபத்தில், உதயகுமார் தேநீர் கடையொன்றில், தமது தோழனான ஆனந்தை அடித்துவிடுகிறான். பின்பு அதை எண்ணி வருந்துகிறான். குமரிக் கடற்கரையோரம் உள்ள கிராமம் ஒன்றிலிருந்து தான் அழைத்து வந்த ஆனந்தின் பின்புலம் - அவனுக்கும் தமக்கும் உள்ள உறவு இவைகளை எண்ணும் - உதயகுமார் ஆத்திரத்தில் உணர்வு வயப்பட்டுத் தவறு செய்து விட்டதாக மனம் குமைகிறான். தமது சொந்த கிராமத்தில் தமது தாயார் சிவகாமி அம்மையார் தம்மிடம் சொன்னதை எண்ணிப் பார்க்கிறான்.



காதல் + கலாட்டா + கலக்கல் தொடர்கதை



13

இனி

'அவள் ஒரு நவரச நாடகத்துக்கு', 'தேன் சிந்துதே வானம்' என்று தொடங்கிய கடிதத்தைக் குழப்பத்துடன் பார்த்தான் உதயகுமார். அடுத்த வரிகளைப் படிக்கும் முன்பாக அடுத்த கடிதத்தைப் பிரித்தான். 'அன்புள்ள பூங்குழலிக்கு குந்தவை எழுதும் மடல்' என்று ஆரம்பமானது கடிதம்.

குழப்பத்துடன் அம்மாவைப் பார்த்தான்.

''என்னம்மா இதெல்லாம்?''

''இதெல்லாம் பாலாமணி எனக்கு எழுதுன லெட்டர்ஸ்.''

''பாலாமணியா?'' உதயகுமார், நினைவு கிடங்கில் துழாவினான். அண்மையில் இந்தப் பெயரை யாரோ எதற்கோ உச்சரிக்கக் கேட்டேனே. உள்ளே சின்னதாக விளக்கு எரிந்தது.

''அம்மா நான் சென்னைக்கு அழைச்சுட்டுப் போய் படிக்க வெக்கப்போறேன்னு சொன்னேனே... ஆனந்த், ம்மா... அவனுடைய அம்மா பேருகூட பாலாமணி தாம்மா.''

''ஆமா. அதே பாலாமணிதான். அவ என்னோட சினேகிதி.'' உதயகுமார் அம்மாவின் முகத்தில் புதிய உற்சாகத்தைப் பார்த்தான். இருபது வருடம் பின்னோக்கிய நினைவுகளால் அம்மாவின் முகத்தில் ஆனந்தத்தைக் காண முடிந்தது.

''நாங்க சின்ன வயசுல இருந்து ஒண்ணாத்தான் படிச்சோம். நான் ஸ்கூலுக்கு கார்ல போவேன்... அவ குப்பத்துல இருந்து நடந்தே வருவா... உங்க தாத்தா... அதான் எங்க அப்பா ரொம்ப 'ப்ரஸ்டீஜ்' பாக்குறவரு. 'ப்ரஸ்டீஜ்' என்ன 'ப்ரஸ்டீஜ்...' 'பெரிய ஜாதி' திமிரு. எங்க 'ஃப்ரண்ட்ஷிப்'க்குத் தடை போட்டாரு. அதனாலேயே எங்க நட்பு ரொம்ப நெருக்கமா ஆயிடுச்சு.''

''யாரும் என்னை ஏமாத்த முடியாதுலேய்-ன்னு நிமிஷத்துக்கொரு தரம் மார் தட்டிச் சொல்ற தாத்தா. கண்ணுல மண்ணைத் தூவுற த்ரில் வேற சேந்துகிட்டிருக்குமே...''

''ஆமாம்... கரெக்டா புடிச்சுட்ட பாயிண்ட்டை. ஸ்கூல் காம்பவுண்ட்டுக்குள்ள நுழைஞ்சதும் பாலாமணியும் நானும் ஒருத்தருக்கொருத்தர் தாவணியை மாத்திக்கிடுவோம். லஞ்ச் பாக்ஸை மாத்திக்கிடுவோம்... ஸ்கூல் காம்பவுண்டை விட்டு வெளிய வந்ததும் நான் யாரோ அவ யாரோங்கற மாதிரி டிராமா பண்ணுவோம்.''

'ஐ' - உதயகுமார் குழந்தையாய் இருந்த போது தம் அம்மா சொன்ன கதைகளுக்கு எதிர்வினை செய்வதைப் போலவே, இப்பொழுதும் கைகளைத் தட்டினான்; நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''ஆனா ஸ்கூல் லீவ் விட்டுட்டா, என்னைப் பாக்காம அவ துடிச்சுப் போயிடுவா, நானும் அவளை நினைச்சு ஏங்குவேன். அப்பல்லாம் எப்படியாவது லெட்டர் எழுதி என் கைக்குக் கிடைக்கிற

மாதிரி செஞ்சிடுவா... உன் கையில இருக்குற லெட்டர்ஸெல்லாம் அவ அப்போ எழுதுன லெட்டர்ஸ்தான்.''

உதயகுமார் பழைய டிரங்க் பெட்டியி லிருந்து அம்மா எடுத்துப் படிக்கச் சொன்ன கடிதங்களைப் பார்த்தான். தாய் வீட்டுச் சீர்வரிசையைக் கொண்டு வரும்போது, அம்மா மறக்காமல் தம் தோழியின் கடிதங் களையும் கடத்தி வந்திருக்கிறாள்.

''நாங்க ரெண்டுபேரும் சினிமா பைத் தியமா இருந்தபோது எனக்குப் புடிச்ச பாட்டையே என் பேரா எழுதுவா... நாங்க ரெண்டு பேரும் நாவல் பைத்தியமா இருந்தபோது எனக்குப் புடிச்ச கேரக் டரையே என் பேரா மாத்திடுவா.''


உதயகுமாரின் கையிலிருந்த கடிதங்க ளில் ஒன்றை உருவி ''இதைப்பாரேன்'' என்று உற்சாகத்தோடு ஆரம்பித்தார் சிவகாமி.

உதயகுமார் கடிதங் களை ஒவ்வொன்றாகப் படித்தான்.

அம்மாவும் அம்மாவின் தோழியும் பார்த்து ரசித்த சினிமாக்கள், படித்து லயித்த நாவல்கள் அவன் முன்னே விரிந்தன. 'அவர் கன்னியராகி நிலவினிலாடி களித்ததும் இந்நாடே' என்ற தொடர் மின்னலாய் நினைவில் மின் னியது. ''பாலாமணிக்கு கல் யாணம் ஆன மறுமாசமே எனக்கும் கல்யாணமாகி... இந்த ஊருக்கு வந்துட்டேன். நாங்க ரெண்டு பேரும் ஒரே மாசத்துலதான் உண்டா னோம். நீ பொறந்த பெறவு எனக்கு உடம்பு சீக்காகி டாக்டர் தாய்ப் பால் கொடுக் கக்கூடாதுன்னு சொல்லிட் டாரு. இதைக் கேள்விப் பட்டு என் பாலாமணி தூத்துக்குடியில இருந்து பஸ் ஏறி கைப்புள்ளையோட வருவா... தினமும் வருவா... பழைய சினேகிதியாச்சே படுத்த படுக்கையா யிருக்கிற எனக்குப் பேச்சுத் துணைக்காக வர்றா, கூடமாட ஒத்தாசையா இருக்க வர்றான்னுதான் உங்க அப்பாவும் மத்த வங்களும் நினைச்சாங்க. ஆனா அவ தின மும் வந்தது உனக்குப் பால் குடுக்கத் தாண்டா... அவளோட முலைப் பாலைக் குடிச்சுத்தாண்டா நீ வளந்த...''

உதயகுமாருக்கு அடிவயிற்றிலிருந்து புறப்பட்ட ஏதோ ஒரு இனந்தெரியாத உணர்வு மேலெழும்பி நெஞ்சை அடைத்தது.

ஆனந்தின் அம்மா தம்மை கருணை பொங்கும் விழிகளோடு பார்த்ததற்கும், அன்போடு தம் கன்னத்தை வருடியதற்கு மான அர்த்தங்கள் உதயகுமாருக்கு வெளிச்ச மாயின. எதனாலும் யாராலும் அழித்து



விட முடியாததான அரூப பந்தம் ஆனந்தின் அம்மாவுக்கும் தமது அம்மாவுக்கும் இருந்ததைப் புரிந்துகொள்ள முடிந்தது. இந்த இரண்டு அன்னையரின் அன்பெனும் சுடர்மிகு தவ வலிமையினாலேயே தமக்கும் ஆனந்துக்கும் நட்பு தானாகவே மலர்கிறது போலும் என்று எண்ணினான்.

''உன் ஃப்ரெண்ட் எம்மா உன்னை வந்து பாக்கறதே இல்லை. எனக்கு அந்த அம்மாவைப் பார்த்த மாதிரியே நினைப்பு இல்லையே.'' சிவகாமியின் கண்கள் துடித்தன. உள்ளத்தில் மூண்ட பெரும் சோகம் பெருமூச்சாய் வெளிப்பட்டது.

''தலைப்புள்ளைய கடலு பலி வாங்கிடுச்சே... அதுக்கப்புறம் அவ என்னைப் பாக்க வரவே இல்லை. வருவா... அவளைப் பாக்காம நான் கண்ணை மூடிடுவேனா.. என்ன?'' உதயகுமார், அம்மாவின் வாயைப் பொத்தினான்.



''அம்மா இப்படியெல்லாம் பேசாத எனக்குக் கோபம் வரும்.''

''உதய்... உதய்... உதய்... எழுந்திரு.''

உதயகுமாரை உலுக்கி எழுப்பினான் அறைத்தோழன் இம்மானுவேல்.

வியர்வையில் நனைந்திருந்த உதயகுமார் கண்விழித்துப் பார்த்தான்.

''என்ன தூக்கத்துல பெனாத்துற? கனவா?''

உதயகுமார் மறுமொழி எதுவும் சொல்லாமல் எழுந்து மேசை மேலிருந்த தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டுப் படுத்தான்.

பால் கடையின் பெஞ்ச் பலகையின் மேல் கொட்டி... சிதறிக் கிடந்த பாலை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்த ஆனந்தை உலுக்கினான் எட்வின்.

''டேய் ஓர்ரி பண்ணிக்காதடா. நம்ம அண்ணன்தானடா ஏதோ கோபத்துல பேசிட்டாரு'' என்றான்.

ஆனந்த், கதிரை பார்த்துக் கேட்டான். ''கதிர் எனக்கு பார்ட் டைமா ஏதாவது வேலை கிடைக்குமா?''

ஆனந்த் தமது சுயமரியாதை தாக்கப்பட்டதால் ஏற்பட்ட ஆத்திரத்தில் ஏதோ முடிவெடுத்துவிட்டான் என்பதை எட்வினும் கதிரும் புரிந்துகொண்டனர்.


கதிர் கேட்டான். ''என்ன தோழர் வலிக்குதா?''

ஆனந்த் தம் கன்னத்தைத் தடவியபடி சொன்னான்.

''அவர் அடிச்சது கூட எனக்கு வலிக்கலை.''

''ஆமா தோழர்... இந்தப் பணக்காரனுங்களே அப்படித்தான். எங்க வலிக்குமோ அங்கதான் அடிப்பானுங்க.''

எட்வின், கதிரை முறைத்தான்... ''டேய் செங்கொடி, சும்மா மூடிக்கிட்டுப் போடா... வந்துட்டான் வர்க்கப் போராட்டத்துக்கு நாள் குறிக்க பஞ்சாங்கத்தைத்



தூக்கிக்கிட்டு'' எட்வின் எழுந்து வந்து ஆனந்தை ஆதரவாக அணைத்தான்.

''மச்சி அண்ணன் உன்மேல எவ்ளோ பாசம் வெச்சிருக்காரு. அந்தப் பாசத்துல தானடா உன்னை அடிச்சாரு. இதுகூட புரியலையாடா உனக்கு?''

ஆனந்த் புரியாமல் எட்வினைப் பார்த்தான்.

''மச்சி உன்னை அண்ணன் அடிச்சதுக்குக் காரணம் இதுதாண்டா.'' எட்வின் தம் விரலிடுக்கில் புகைந்த சிகரெட்டைக் காண்பித்தான்.

''சிகரெட்டா?''

''ப்ச்'' எட்வின் உதட்டைப் பிதுக்கினான்.

''நீ சென்னைக்குப் புதுசு. அதனால உனக்குப் புரியலை.''

ஆனந்த் புரியாமல் பார்த்தான்.

''இது சாதாரண சிகரெட் இல்லை. உள்ள சரக்கு வெச்சிருக்கிற ஸ்பெஷல் சிகரெட்டுன்னு நினைச்சுட்டாரு... அதான் நீயும் ஜமாவுல சேந்துட்டியோன்னு கோபப்பட்டு அடிச்சிருக்காரு...''

''நீ சிகரெட் புகைச்சதுக்கு என்னை ஏன் அடிக்கணும்?''

''மச்சி கஞ்சாவும் கவாலி சாங்கும் ஒண்ணு மச்சி. ஒருத்தன் பாடி முடிச்சதும் இன்னொருத்தன் பாட்டைத் தொடங்குறான் இல்லையா. அது மாதிரிதான் ஒருத்தன் இழுத்து முடிச்சா...இன்னொருத்தன் கைக்கு சிம்லி போவும்.''

ஆனந்துக்கு மனம் தெளிவடைந்தது. எட்வின் இந்தக் கடைக்கு என்னுடன் வருவதற்கு முன்னால், அவனது பிரத்யேகக் கடைக்குச் சென்று கொண்டாடிவிட்டு வந்ததால், வந்ததிலிருந்து உளறிக்கொண்டிருந்தான். உதயகுமார் வரும்பொழுது அந்த உளறல் அப்பட்டமாகவே தெரிந்தது.

''அது சரி... இருந்தாலும் எனக்கு ஏதாவது பார்ட் டைம் ஜாப் வேண்டும். நீங்க ரெண்டு பேரும்தான் எனக்கு ஹெல்ப் பண்ணனும்.'' கதிரும், எட்வினும் தலையாட்டினார்கள்.

கடைக்காரர் ''கடையடைச்சாகனுங்க'' என்று குரல் கொடுத்தார்.

(தொடரும்)

''அடேய் கபாலீ... என்னடா ஒரு வாரமா எங்கேடா போனே?''

''சரிதான்! சாரே... மூணுநாள்தான் உன்னைப் பார்க்கலே. மூணு நாளு மாமூலை, கபால்னு ஒருவாரம் ஆக்கப் பார்க்கிறியே!''

- சீதாதம்பி, சென்னை-91



கல்வெட்டுகள்

இருந்து கொண்டிருக்கப்பட்டவரானவர்

மாங்குடி பாகவதர் இருக்கிறாரே, அவர் பெரிய மோசக்கார மனிதர் என்று சமீபத்தில் கண்டுபிடித்தேன். அவருடைய காலட்சேபம் ஒன்றைப் பற்றி எழுதுகையில் ''இருந்து கொண்டிருக்கப்பட்டவரானவர்!'' என்றெல்லாம் அவர் வாக்கியத்துக்கு வாக்கியம் அடுக்குவதைப் பற்றி வேடிக்கையாக எழுதியிருந்தேனல்லவா? பின்னர், சில வாரங்களுக்குப் பிறகு மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபையில் நடந்த ''லக்ஷ்மண சக்தி'' என்னும் காலட்சேபத்துக்குப் போயிருந்தேன். பாகவதர் ஒரே ஒரு தடவைகூட ''இருந்து கொண்டிருக்கப்பட்ட'' போடவில்லை. என்னுடைய விமரிசனத்தை முதலில் படித்துவிட்டு, அப்புறம் பாகவதரின் கதை கேட்கப் போனவர் யாராவது இருந்தால், நான் ஏதோ கற்பனை செய்து அவர் மீது குறை சொன்னதாகவே நினைப்பார்கள். அவ்வளவு நீண்ட நாள் பழக்கத்தை ஒருவர் இவ்வளவு சுலபத்தில் விட்டுவிடக் கூடுமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. நிற்க...

அன்றைய காலட்சேபத்தில் பாகவதர் வழக்கம் போல் அநேக ரஸமான விஷயங்களைப் பொழிந்தார். அவைகளுக்குள் எல்லாம் சிகரம் என்று சொல்லத் தகுந்த ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். ''சுக்ரீவ ஆக்ஞை'' என்னும் விஷயமாகப் பாகவதர் சொல்ல வேண்டி வந்தது. ''வெகு கண்டிப்பானவன் சுக்ரீவன்; சட்டதிட்டங்களை மிகக் கடுமையாய் ஏற்படுத்தியிருந்தான்; தண்டனைகளும் அப்படியே மிகக் கடுமையானவை...'' என்றார். இவ்விடத்தில் சற்று நின்று, ''ஆனால் வாலியின் காலத்தில் இவ்வளவு கடுமையான சட்டதிட்டங்கள் இல்லை'' என்று சொல்லி ஒரு புன்னகை செய்தார். ஏதோ ரஸமான விஷயம் வருகிறது என்று எண்ணிக் கொண்டேன்.

''ஏனென்றால் வாலி பலசாலி, பலசாலிக்குச் சட்ட திட்டம் கடுமையாய் வேண்டியதில்லை. பலமில்லாத இராஜாங்கத்துக்குத்தான் சட்டங்கள் கடுமையாய் வேண்டும். சுக்ரீவன் பலமில்லாதவன்; ஆகவே அவன் பட்டத்துக்கு வந்ததும் ஒரு 'கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் ஆக்ட்' நிறைவேற்றினான்!'' என்று பாகவதர் சொன்னபோது, என்னுடைய சந்தோஷத்தை எப்படித் தெரிவிப்பது என்று தெரியவேயில்லை. தலையில் குல்லா அல்லது தொப்பி இருந்திருந்தால், தூக்கி எறிந்து சந்தோஷத்தை வெளியிட்டிருப்பேன். அன்றைய தினம்தான், இந்திய சட்டசபையில் நிராகரிக்கப்பட்ட 'கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் ஆக்டை' வைஸ்ராய் தமது விசேஷ அதிகாரத்தினால் சட்டமாக்கினார் என்ற செய்தி வந்திருந்ததென்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும்.

- ஆனந்த விகடன், 7.4.1935

அமரர் கல்கி

மேஷம்

எதிலும் வெற்றிவாகை சூடுவீர்கள். உடல் நலம் நன்றாக இருக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். கடன் பிரச்னை தீரும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி உண்டாகும். சத்ரு தொல்லை நீங்கும். உறவினர்களால் நற்பலன் கிட்டும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். வழக்கு வெற்றி பெறும். குருவை வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

ரிஷபம்

சுபகாரியப் பேச்சு வார்த்தை பலன் அளிக்கும். கருத்து வேற்றுமை விலகும். விலகிப் போனவர்கள் திரும்பி வந்து சேர்வார்கள். கடன் தொல்லையிலிருந்து விடுதலை கிட்டும். கல்வியில் முன்னேற்றம் தெரிய ஆரம்பிக்கும். உடன் பிறந்தவர்களால் உதவி கிட்டும். ஆரோக்கியமற்று இருந்து வந்த பிரச்னை தீரும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் உண்டாகும். ராகு/கேதுவை வழிபட்டு வர நற்பலன் உண்டாகும்.

மிதுனம்

உத்தியோகத்தில் இட மாறுதல் உண்டாகும். மன உளைச்சல் தீரும். வீடு மாற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். கல்வி வளம் மேலோங்கும். கடல் கடந்த மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். செல்வ வளம் பெருகும். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டாகும். மனத்தில் நினைத்த காரியம் நிறைவேறும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். தீராத காரியம் நிறைவேறும். ராகு / கேது / குரு / சனியை வழிபாடு செய்து வர சங்கடங்கள் தீரும்.

கடகம்

வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். சிரமப்படாமலே பிரயாணம் வந்து சேரும். உறவினர் வருகை மனத்துக்கு சந்தோஷத்தை அளிக்கும். புண்ணிய மகான்களின் தரிசனம் கிட்டும். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆரோக்கியம் பாதிக்காது. உத்தியோகம் பதவி உயர்வு ஏற்படும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். வழக்கு வெற்றி அளிக்கும். கடன் பிரச்னை தீரும். பரிகாரம் தேவை இல்லை.

சிம்மம்

பூர்விக சொத்து முடிவுக்கு வரும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். நெருங்கிய நண்பர்களைப் பிரிய நேரிடும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். சுப காரியம் நடக்கும். வீடு மாற்றம் ஏற்படும். வழக்கு தாமதம் ஆகும். உறவினர்கள் வந்து தங்கிப் போவார்கள். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். குருவை வழிபட சங்கடங்கள் தீரும்.

கன்னி

மிகவும் உன்னதமான வாரம். சுப காரியம் தங்கு தடையின்றி நடக்கும். உறவினர்களால் சுகம் ஏற்படும். கடன் சுமை தீரும். நீண்ட காலமாக முடிவு பெறாமல் இருந்து வந்த வழக்கு வெற்றி பெறும். வர வேண்டிய நிலுவைகள் உடன் வந்து சேரும். தெய்வ தரிசனம் கிட்டும். குழந்தைகள் பற்றிய மனசஞ்சலம் தீரும். நீண்ட தூரப் பயணம் மேற்கொள்வீர். இல்லற வாழ்க்கை மகிழ்ச்சி தரும். ராகு/கேதுவை வழிபட்டு வர நற்பலன் உண்டாகும்.

நடக்குமென்பார்: நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

துலாம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். திடீர் பயணம் தவிர்க்க இயலாது. வேலைப்பளு அதிகரிக்கும். மறைமுகத் தொல்லைகள் அதிகமாகும். உடல் நிலையில் கவனம் தேவை. இல்லற வாழ்வில் அனுசரித்துப் போகவும். நண்பர்களிடம் அதிகப் பழக்கவழக்கம் வைத்துக் கொள்வதைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். சனி/குருவை வழிபட நற்பலன் உண்டாகும்.

மகரம் ரொம்பவும் அற்புதமான பலனை அடைவீர்கள். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். கடன் தொல்லை தீரும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்குகளில் வெற்றி கிட்டும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு, பணி உயர்வு கிட்டும். குழந்தைகளால் மனசஞ்சலம் உண்டாகும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். புதிய மனை வாங்க ஏற்ற தருணம். வெளிநாடு செல்லும் யோகம் கிட்டும்.

விருச்சிகம் தடை விலகி திருமணம் கைகூடும். உடல் ஆரோக்கியம் பூரண குணமாகும். இல்லற வாழ்வில் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. மன சஞ்சலம் தீரும். தொழில் வழியில் நல்ல ஆதாரம் கிட்டும். கடன் பிரச்னை தீரும். வரவேண்டிய நிலுவை வந்து சேரும். வழக்கு வெற்றி பெறும். விலகிப் போனவர்கள் விரும்பி வந்து சேருவார்கள். கடவுளின் அருள் கிட்டும். ராகு/கேதுவை வழிபட நற்பலன் உண்டாகும்.

கும்பம் சுப நிகழ்ச்சிகள் கைகூடும். ஆடை ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். கடன் பிரச்னை தீரும். உறவினர் வருகை மனத்துக்கு சந்தோஷம் அளிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். வரவேண்டிய நிலுவைகள் வந்துசேரும். விலகி இருந்தவர்கள் விரும்பி வந்து சேருவார்கள். குழந் தைகள் இடம் மாறிப் போவார்கள். பூர்விக சொத்து பாகப்பிரிவினை ஆகும். கடனிலிருந்து விடுதலை கிட்டும். சனி பகவானை வழிபட நற்பலன் உண்டாகும்.

தனுசு சொந்த வீட்டுக்குக் குடி பெயர்வீர்கள். ஆரோக்கியம் சீராகும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் நீங்கும். கடல் கடந்து செல்லும் யோகம் கிட்டும். வரவேண்டிய நிலுவைகள் வந்துசேரும். மன அமைதி ஏற்படும். கணவன், மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னை சுமுகமாக முடிவுக்கு வரும். குழந்தைகள் வழியில் சுபச்செலவு ஏற்படும். வம்பு வழக்கு முடிவுக்கு வரும். ராகு/கேதுவை வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

மீனம் பண வசதி பெருகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். கடன் சுமையிலிருந்து விடுதலை கிட்டும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உற்றார் உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். ஆரோக்கியம் சீராகும். வழக்கு வெற்றி பெறும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு/கேது/ சனியை வழிபட்டு வர நற்பலன் உண்டாகும்.

12.12.2010 முதல் 18.12.2010 வரை

சாமி பெயருக்கு

பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு வாசகர்,
சென்னை - 4

என் மகள் ஜாதகம் அனுப்பியுள்ளேன். 1979ல் பிறந்த அவளுக்குத் திருமணம் நடந்து ஒரு மாத காலம் மட்டுமே நீடித்தது. மறுமணம் உண்டா? எப்போது? என்ன பரிகாரம் செய்ய வேண்டும்? அவளுடைய நட்சத்திம் மூலமா, பூராடமா?

தங்கள் மகளுக்கு மூலம் நட்சத்திரம், பூராடம் அல்ல. மறுமணம் உண்டு. இனி நடைபெறும் திருமணம் நீடிக்கும். ஒரு திருமணம் முறிவு ஏற்பட்டால் மறுமணம் செய்யும் முன்பு, இராமேஸ்வரம் சென்று அனைத்து புனித தீர்த்தங் களிலும் நீராடிவிட்டு வர வேண்டும்.

மா.சரவணன், தூத்துக்குடி

நான் சி.ஏ. இறுதித் தேர்வு எழு தியுள்ளேன். எப்பொழுது ஆடிட்டர் ஆவேன். திருமணம் எப்பொழுது நடக்கும்? பெண் சொந்தத்திலா அசலிலா?

இந்தமுறை தேர்வில் பாஸ் ஆகி விடுவீர்கள். திருமணம் நடைபெற இன்னும் இரண்டு வருடம் ஆகும். பெண் சொந்தத்தில் இல்லை.




லோகநாதன்,
புதுதில்லி-63

என் தம்பியின் மகள் ஆர்த்தியின் ஜாதகம் அனுப்பியுள்ளேன். வழக்கறிஞராகப் பணியாற்றும் அவளுக்குத் திருமணம் தாமதமாகிக்கொண்டே போகிறது. 24.2.79ல் பிறந்த அப் பெண்ணுக்கு எப்பொழுது திருமணம் நடக்கும்? தாமதத்துக்குக் காரணம் என்ன?

இது ஒரு நல்ல யோக

பரிச் பரிகாரம்

ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



ஜாதகம். ஆர்த்தியின் எதிர்காலம் மிகவும் ஒளிமயமாக விளங்கும். செவ்வாயும் சூரியனும் ஒரே ராசியில் சேர்ந்து இருந்தால் திருமணம் தாமதமாகும். 12 வீடுகளில் எதில் இத்தகைய கிரக சேர்க்கை இருந்தாலும் அது தோஷமே. இத்தகைய கிரகச் சேர்க்கை உள்ளவர்கள் சில காலம் கணவரையும் பிரிந்து வாழவும் நேரிடும். அந்தப் பிரிவு தொழில் நிமித்தமாகவும் இருக்கலாம். அதேபோன்ற தோஷம் உள்ள ஆணுடன் திருமணம் நடந்தால் நல்லது. 2011ல் ஆர்த்திக்குத் திருமணம் முடிந்துவிடும்.

அர்ச்சனை சரியா?



ரமேஷ் முனுசாமி, சென்னை-7

கோயிலில் கடவுளுக்கு அர்ச்சனை அல்லது அபிஷேகம் செய்யும்போது நமது பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் ஆகியவற்றைச் சொல்லித்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமா? சாமி பெயருக்குப் பண்ணலாமா?

நமது பெயர், ராசி, நட்சத்திரம், கோத்திரம் சொல்லி எனது இன்ன இன்ன குறைகள் தீரவும், எல்லா விதமான நன்மைகளும் நடைபெறவும் நான் உன்னை வழிபடுகிறேன் என்று ஒரு மந்திரத்தைச் சொல்லி நமது சார்பாக அர்ச்சகர் பூஜை செய்வார். இதைச் சங்கல்ப்பம் செய்து அர்ச்சனை செய்தல் என்று சொல்வார்கள். இதை காம்யார்த்த பக்தி என்று கூறுவதுண்டு. எந்த வேண்டுகோளும் இன்றி உலக நன்மைக்காக ஆலய வழிபாடு செய்வதை நிஷ்காம்ய பக்தி என்பார்கள். இந்த இரண்டாவது வகையைத்தான் சாமி பேருக்கே அர்ச்சனை செய்துவிடுங்கள் என்று சொல்கிறோம். எப்படிச் செய்தாலும் சாமி பெயருக்குத்தான் அர்ச்சனை செய்வார்கள். ரமேஷ் முனுசாமியே நம என்று யாரும் உங்கள் பெயருக்குப் பூஜை செய்யப் போவதில்லை. தங்களின் ராசி நட்சத்திரம் போன்ற விவரங்கள் தெரியாதவர்களும் எந்த வேண்டுகோளும் இன்றி வழிபாடு செய்பவர்களும் சாமி பெயருக்கு என்று சொல்லிவிடுவது வழக்கம். உங்களின் பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் ஆகியவற்றைச் சொல்லி சங்கல்பம் செய்து உங்களுடைய தேவைகளை மனத்தில் பிரார்த்தனை செய்துகொண்டு கோயிலில் அர்ச்சனை செய்யலாம். அதில் தவறே இல்லை.

உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.



* மாரிமுத்தாப் பிள்ளை



* அருணாசல கவிராயர்



* முத்து தாண்டவர்

இப்போதெல்லாம் நேரம் கிடைக்கும்போது, செய்தித் துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி சீர்காழிக்குக் கிளம்பி விடுகிறார். அங்கே என்ன விசேஷம் என்கிறீர்களா? சீர்காழி நகரில், முக்கியச் சாலையை ஒட்டியே தமிழிசையின் ஆதி மும்மூர்த்திகள் என்றழைக்கப்படும் முத்துத் தாண்டவர், மாரி முத்தா பிள்ளை, அருணாசல கவிராயர்... ஆகியோருக்கு மணிமண்டபம் எழுப்பப்படுகிறது. அந்த மணிமண்டபத்தின் கட்டுமான வேலைகளை விரைவுபடுத்தவும், முதல்வர் அறிவுரையின்படி மண்டபம் எழுகிறதா என்பதைக் கண்காணிக்கவும்தான் அமைச்சர் அடிக்கடி சீர்காழி செல்கிறார்.

தமிழிசை மூவர்கள் சீர்காழி - சிதம்பரம் வட்டாரத்தில் 16 - 17ஆம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்த இசைமேதைகள்.

''மணிமண்டபத்துக்கான திட்ட மதிப்பீடு ஒன்றரைக் கோடி. 'மணி மண்டபத்தைப் பார்ப்பவர்களுக்கு இசை மற்றும் இசைக் கருவிகள் தொடர்பான சிந்தனைகள் தோன்றும்படி இருக்க வேண்டும் என்று முதல்வர் மிகத் தெளிவாகவே சொல்லிவிட்டார். எனவே இந்த மணி மண்டபத்தை ஒரு கலைக்கூடமாகவே உருவாக்குகிறோம்'' என்கிறார் பரிதி இளம்வழுதி.

இந்த மண்டப வேலைகள் தற்போது விரைவுபடுத்தப் பட்டாலும் இதற்கான பிள்ளையார் சுழி 1999லேயே போடப்

சீர்காழி மூவருக்குச்






பட்டதாம். அந்த வருடம் பட்ஜெட்டின்போதே சீர்காழியில் தமிழிசை மூவருக்கு மணி மண்டபம் கட்டப்படும் என்றும் அங்கே ஆண்டு தோறும் தமிழிசை விழா நடைபெறும் என்றும் முதல்வர் அறிவித்தார். ஆனால் வரைபடம் திட்ட மதிப்பீடு ஆகியவை போடுவதற்கு ஏற்பட்ட காலதாமதத்தின் போது, 2001ல் ஆட்சிக்கு வந்தது அ.தி.மு.க.

''ஜெயலலிதா ஆட்சியில் தொடர்ந்து வேலைகள் நடக்கவில்லை. மீண்டும் 2006ல்

சிற்ப மண்டபம்!

தி.மு.க ஆட்சிக்கு வந்தபோதுதான், புதிய திட்ட மதிப்பீடு, நில ஆர்ஜிதம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணி நடக்கிறது'' என்கிறார் அமைச்சர்.



மணி மண்டபம், 16ஆம் நூற்றாண்டு விஜயநகர சாம்ராஜ்ய காலத்து திராவிடக் கட்டடக் கலை அடிப்படையில் எழுகிறது. சாலையிலிருந்து பார்க்கும்போதே ஏழு படிகளையும் தாண்டி, 16 அடி உயர, சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய மண்டபத்தில், தமிழிசை மூவரின் வெண்கலச் சிலைகளைக் காணும் வகையில் அமைக்கப் போகிறார்கள். சிலைகள் உள்ள மண்டபத்தின் பின்னே 200 பேர் அமரக்கூடிய அரங்கம் கட்டப்படுகிறது. அங்கே, கூட்டங்கள், இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். ஸ்தபதி ஜி.கே.மணி தலைமையில் பணிகள் விறு விறு என்று நடக்கின்றன.


அரங்கத்தின் பக்கவாட்டுச் சுவர்களில் மும்மூர்த்திகளின் பிரபலமான சில கீர்த்தனைகளை எழுதி வைக்கலாம் என்ற யோசனையும் பரிசீலனையில் இருக்கிறது. உதாரணமாக முத்துத் தாண்டவரின் **'அரு மருந்தொரு தனி மருந்திது'**, மாரிமுத்தா பிள்ளையின் **'காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே'**, கவிராயரின் **'ஏன் பள்ளி கொண்டீரையா'** போன்ற சாகித்தியங்களை வைக்கலாம்'' என்கிறார் பரிதி. சீர்காழி மூவரின் புகைப்படங்களுக்கு வாய்ப்பில்லாததால் அவர்கள் வாழ்ந்த காலங்களில் இசைவாணர்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்ற கற்பனையில் வரைந்த படங்களை அடையாறு இசைக் கல்லூரிடமிருந்து பெற்று, அந்த அடிப்படையில்தான் சிலைகளும் எழுகின்றனவாம்.

''ஜனவரியில் திறந்துவிட வேண்டும் என்று ஃபாஸ்ட் ட்ராக்கில் வேலைகள் நடக்கின்றன'' என்கிறார் பரிதி.

- ப்ரியன்

கனவு பல காட்டல்!

பூனையின் பாதங்கள் அளக்கும் உலகம்





ஞானக்கூத்தன்

7

ஒரு இலக்கியக் கூட்டத்தில் இயக்குனர் பாலுமகேந்திரா சொன்னார்: 'ஒரு கிழவி வடை சுட்டுக்கொண்டிருந்தாள் என்று எழுத்தாளர் எழுதிவிடுவார். ஆனால் அந்தச் செய்தியை வைத்துக்கொண்டு திரைப்படம் எடுக்கும் இயக்குனர் பல விஷயங்களை, தானே உருவாக்கிக்கொள்ள வேண்டும். கிழவி என்றால் எத்தனை வயது உடையவளாக அவளைக் காட்டலாம். எந்த இடத்தில் அவள் தம் தொழிலைச் செய்துகொண்டிருந்தாள். எல்லாவற்றையும்விட அவள் வடை சுட்டுக்கொண்டிருக்கும்போது அது காலையா? மாலையா? இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு வந்துதான் அந்த நிகழ்ச்சியைத் திரைப்படமாக்க முடியும். இது ஓர் இயக்குனர் வேலையாகிறது.'

இயக்குனர் பாலுமகேந்திரா சொன்னது உண்மைதான். ஆனால் எழுத்தாளர்கள் பொதுவாகக் காலம், இடம் மற்றும் நிகழ்ச்சியில் பங்கு கொள்பவர்கள் போன்ற செய்திகளைக் குறிப்பிட்டுத்தான் தங்கள் கதைகளை அமைக்கிறார்கள். கவிதையைப் பற்றி அப்படிக் கூற முடியாது. அது பெரும்பாலும் கூற்றுகளால் அமைவதால் நேரடியாகச் சில செய்திகளைத் தருவதில்லை. இருந்தாலும் இவை உப லட்சணமாகக் கூறப்பட்டவற்றுள் அடங்கியதாகக் கொள்வதே பொருள் கொள்ளும் மரபாகும்.

தொல்காப்பியம் அகத்திணை இயலில் பெரும் பொழுது, சிறு பொழுது, பருவம் பற்றிப் பேசுகிறது. ருது தவிர திணைக்கும்







இன்னின்ன காலம் சிறப்புடையது என்கிறது தொல்காப்பியம். கார் காலம், கூதிர் காலம், பனி எதிர் பருவம், வைகறை, விடியல், நண்பகல், வேனில், பின்பனி முதலியவற்றைத் தொல்காப்பியம் சொல்கிறது. எனவே ஒரு திணையைப் பற்றிப் பேசும் செய்யுள் தம்முடைய பொழுதை வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும் அதற்குரிய காலத்தில் பெரும் பொழுது, சிறு பொழுதில் நடக்கிறதென்று கொள்ள வேண்டும்.

நவீன கவிதை, காலம் பற்றிய உணர்வைப் பெரிதும் போற்றிக்கொள்கிறது என்பது உண்மை. காலங்களில் கோடை காலம், பனிக் காலம் மழைக் காலம், முதலியவை கவனத்தைப் பெறுகின்றன. மழைக் காலம் அதிகக் கவனத்தை ஈர்ப்பதாகக்கூடக் கூறலாம். கோடையைக் க.நா.சு. மனப் புழுக்கத்தைத் தெரிவிக்கும் புறவயப் பொருளாகக் கையாண்டிருக்கிறார். சுகுமாரனின் கவிதைத் தொகுப்பு 'கோடை காலக் குறிப்புகள்' என்று பெயர் பெற்றுள்ளது.

யவனிகா ஸ்ரீராம் கவிதை 'வெப்ப கால உறக்கம்', 'வேனிற்கால மழைத் தூறல்கள்', 'மழைக் காலம்', 'குளிர் காலம்', 'கூதிர் காலம்' என்று பருவ காலங்களைக் குறிப்பிடுகிறது.

நிஜமேதான் ஒரு சமயம்
இரகசியமாய் இருந்தது

வேனிற் காலங்களில்
மழை தூறுவது போல

என்றும்,

மழைக் காலத்தில்
சிறு மீன்கள் அசையும் பளிங்கு நீரில்

என்றும்,

காட்டு மொச்சைகள்
குதிரும் பருவத்தில்

என்றும், யவனிகா ஸ்ரீராமின் கவிதைகள் அழகாகப் பேசுகின்றன. ஸ்ரீராம் 'பருவம் தவறுவது' என்று அற்புதமான கவிதை எழுதியிருக்கிறார். கவிதையின் நடுவில்...

இல்லையெனில்,
மழைக் காலத்தில்
தானியங்களின் விலை
ஏன் கூடுகிறது?
நம்மில் பலர் இறந்து
போனவர்கள் போல
ஏன் காணாமல் போய்விடுகிறார்கள்?

என்று கேட்டு,

தயவுசெய்து
பக்கவாட்டில் இருந்து எப்போதும்
அழைக்காதே
அது மரணத்தை ஞாபகப்படுத்துகிறது
அம்புக் குறி போல் முன்னோக்கிச்
சென்றுகொண்டிருந்த
பறவைக் கூட்டத்தை ஏதோ ஒன்று
சரேலென இழுத்து மறைந்ததை
இன்று நான் வானத்தில் பார்த்தேன்...

என்று முடிகிறது கவிதை. சாதுரியமாக அமைக்கப்பட்ட இக்கவிதையில் ஒரு நொடிப் பொழுதில் பயத்தில் மனிதன் தம் பிறப்பையே மறந்து ஆபத்துக்குள்ளாகிப் பறக்கும் ஒரு பறவைக்கு நிகராகிறான். பருவம் தவறியது... உயிரும் தவறுகிறது.

(அடுத்த வாரம் பார்ப்போம்...)

கவிதை கஃபே

'கவிதை கஃபே' பகுதியில் இடம்பெறும் கவிதைகளுக்கு சன்மானம் உண்டு.



வெள்ளரி விதைகளென
விதைத்துச் சென்றாள்
என்னுள் சில சொற்களை.
அவை முளைத்துப்
படர்ந்த கொடிகளில்
ஏராள பிஞ்சுகள்.
சகாக்களின்
தாகம் தணிக்க
பறித்துத் தருகிறேன்
தாராளமாய்
விளைந்து கிடக்கின்றன
வெயில் தணிக்கும்
வெள்ளரிச் சொற்கள்
வேண்டுமெனில்
வரலாம் நீங்களும்.

- செழியரசு

அப்பாவுக்கு என்னைப் பிடிக்குமா? -
இன்றுவரை எனக்குத் தெரியாது.
எப்பொழுதும் வீட்டுக்குள் -
வாலில் வெடிவைத்த இராமதூதனாய்
குதித்துக் கொண்டிருப்பார்.
பள்ளியில் படிக்கையில் -
எத்தனை மதிப்பெண் எடுத்தாலும்
நூற்றுக்கு மிச்சமானதை -
எந்தக் கழுதைத் தின்றது என்று
திட்டிக் கொண்டேயிருப்பார்.
அம்மாவிடம் குறை சொன்னால் -
போடா! போ! என்பாள் - அதிகபட்சமாய்
வேலை கிடைத்து -
வாங்கிய முதல் மாதச் சம்பளத்தை
ஒரு சம்பிரதாயமாய் -
அப்பாவின் காலில் விழுந்து தந்தபோது-
அடடே! எதற்கு இதெல்லாம்?
அம்மாவிடம் கொடு!
அன்று இரவு விழிக்கையில் -
என் சட்டை அவர் நெஞ்சோடு.

- ரமேஷ் அனந்த பத்மநாபன்

பஞ்சுப்புலியின் வாலைப் பிடித்து
வீடெங்கும் இழுத்துக்கொண்டு
திரிகிறாள் அம்மு.
காட்டு நியாயங்களை
அசைபோட்டபடி
சிரித்துக்கொண்டே பின்னால் போகிறது
பஞ்சுப்புலி.

*

'ஏழுபேர் ஒரே மாதிரி
இருப்பாங்கன்னு சொன்னல்ல
மத்த ஆறு பேருக்கு
எப்ப ஆப்பி பர்த்டே?' என்றாள்
ரஞ்சனிக்குட்டி.
குழந்தைகளின் கேள்விகள்
கடவுள்களிடம் கேட்கப்பட வேண்டி



காலைக் குளிர்
காது குடைய
கம்பளித் துண்டை
இழுத்துப் போர்த்தி...
வாழ்க்கையைப் போல
பாதி விடிந்ததும் விடியாத
பனிக் காலைப் பொழுதில்...
அதிசயமாய்
ஆப்பம் சுடும் அன்னம்மா கடையில்
கடனுக்கு பீடி வாங்கி...
கைப்புள்ளைக்குப் பால் வாங்கி...
டீ கடைக்காரி எப்ப பாக்கி கேட்டு
பாதியில் நிறுத்துவாளோவெனப்
புலம்பும்
எங்களூர் பெருசுக்கு
வாய்க்குள் நுழையவே
பத்து நிமிடமாகிவிட்டது
ஸ்...பெ...க்...ட்...ர...ம்

- துளிர்

வெள்ளரி விதை வார்த்தைகள்...

...வாரம் பாடி
...ந்து கொண்டிருந்தவர் பின்னால்
...ஞா ஞ்ஞா என சத்தமிட்டு
ஓடிக் கொண்டிருந்தது ஒரு குழந்தை.
குழந்தையின் பின்னால்
நடந்து போய்க் கொண்டிருந்தார்
கடவுள்.

*

எந்த நேரமும்
கோவிலில் விளையாடிக் கொண்டிருக்கும்
குழந்தையிடம் கேட்டேன்,
என் இங்கேயே இருக்கிறாய் என.
சாமி இங்குதான் இருப்பார்
என்றது சம்பந்தமில்லாமல்.
சம்பந்தம் இருக்கவும் வாய்ப்பிருக்கிறது.

- லதாமகன்

வாசகர்களே!
உங்க க்யூட கவிதைகளைச்
சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு
குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும்
அனுப்பலாம்.

21 ஓ.கே... 12 நோ.கே..?

மீனாட்சி சதாசிவம், அரியலூர்

என் மகளுக்கு 12 வயதாகிறது. அவள் மூக்கு கண்ணாடி அணிந்து கொண்டிருக்கிறாள். லேசர் ட்ரீட்மெண்ட் செய்வதன் மூலம் அவள் கண்களை சரி செய்துவிடலாம், மூக்கு கண்ணாடி அணிய வேண்டிய அவசியம் இல்லை என்கிறார்கள். கூடவே லேசர் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ள வயது வரம்பு இருக்கிறது என்றும் சொல்கிறார்களே கொஞ்சம் விளக்கவும்?

கண் மருத்துவர் வசுமதி வேதாந்தம்:



✱வசுமதி வேதாந்தம்



✱ஆனந்தன்



✱ மனோஹரன்

''லேசர் ட்ரீட்மென்ட் என்பது கண்களில் கூடிப் போய் விட்ட பவரை எடுக்க செய்யும் சிகிச்சை முறை. இந்த முறையை 21 வயதை எட்டிய பிறகு தான் செய்ய முடியும். கண்களின் முழுமையான வளர்ச்சி என்பது 21 வயது வரை நடக்கும் என்பதால் அதற்கு முன்பாக லேசர் சிகிச்சை செய்யப்படுவதில்லை. கண்ணாடி போட்டுக் கொள்வது அசௌகரியம் என உங்கள் மகளோ நீங்களோ எண்ணினால், கான்டாக்ட் லென்ஸ் போட்டுக் கொள்ளலாம். கான்டாக்ட் லென்ஸ் பொருத்திய வுடன், ஆண்டுக்கு ஒரு முறை கண் பரிசோதனை செய்து கொள்வதை மட்டும் நிறுத்தி விடக் கூடாது.''

கிருஷ்ணகுமார், கிழக்குத் தாம்பரம்

என் நண்பனுக்கு 23 வயதாகிறது. தினமும் வேலைக்கு வரும் பொழுது மிகவும் சோர்ந்து காணப்படுவான். கேட்டால், இரவு என்னவோ தூக்கமே வருவதில்லை என சர்வ சாதாரணமாகப் பதில் சொல்வான். அவன் ஏதாவது மன நோயின் பிடியில் இருக்கிறானா?''

மனநலமருத்துவர் ஆனந்தன்:

''தூக்கமின்மை என்பது மாதத்தில் ஒரு நாள் இருக்கிறது என்றால் அதைக் கண்டு பயப்படத் தேவையில்லை. ஆனால், இரண்டு வாரங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து இருந்தால் கட்டாயம் நீங்கள் உங்கள் நண்பரை மன நல ஆலோசகரிடம் கூட்டிக் கொண்டு போவது நலம். சிலர் தூங்க ஆரம்பிப்பதற்கு ரொம்ப கஷ்டப்படுகிறேன் டாக்டர், தூங்கி எழுந்த பின்னரும், தூங்கிய திருப்தியே இல்லை எனச் சொல்வார்கள். அது மனப் பதற்ற

உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.co
ஒரு ஸ்பேஸ் விட்



நோயின் அறிகுறி. சிலர் தூங்குவதற்கு எந்தப் பிரச்னையுமே இல்லை. ஆனால், விடியற்காலை 2 அல்லது 3 மணிக்கெல்லாம் விழிப்பு வந்து விடுகிறது என்பார்கள், அவர்களுக்கு இருப்பது மனச்சோர்வு நோய். இஷ்டத்துக்குத் தூங்குவது, சரியாக உடை அணியாமல் இருப்பது, சரியாகச் சாப்பிடாமல் இருப்பது என்றெல்லாம் இருந்தால், அது தீவிர மன நோயின் அறிகுறி.''

ராஜி சாமிநாதன், திருநின்றவூர்

எனக்கு 30 வயதாகிறது. சமீப காலமாக எனது கைகளில் தோல் உரிந்து வருகிறது. ஏன் இவ்வாறு ஆகிறது?

சரும நோய் நிபுணர் மனோஹரன்:

பாத்திரம் கழுவ பயன்படுத்தும் சோப்புக்களோ அல்லது துணி துவைக்க பயன்படுத்தப்படும் சோப்புக்களோ ஒத்துக்கொள்ளாவிட்டால், சிலருக்குத் தோல் உரியும். மேலும், சில வகை காய்களான, வெங்காயம், பூண்டு, இஞ்சி வகைகளை நறுக்கும்பொழுதும் சிலருக்கு இப்படித் தோல் உரியும். ஒரு குறிப்பிட்ட சில வகை மாத்திரைகளை உட்கொள்வதாலும், மேலும், அதிக காய்ச்சலில் அவதிப்பட்டு குணம் கண்டவர்களுக்கும் தோல் உரியும். மற்ற காலங்களை விட, குளிர் காலங்களில் இந்தத் தாக்கம் பரவலாக வரக்கூடும். நல்ல தரமான மாய்ஸ்டுரைஸிங் க்ரீமையோ அல்லது தேங்காய் எண்ணெயையோ தோல் உரியும் இடத்தில் தேய்த்து வந்தால் நிவாரணம் கிடைக்கும். அப்படியும் நிவாரணம் கிடைக்கவில்லை என்றால், சரும நோய் நிபுணரை அணுகி இதற்கான மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ளலாம். ஏதாவது ஒரு தோல் வியாதியின் வெளிப்பாடாகக் கூட இந்தச் சரும உரிதல் இருக்கலாம்.''

தொகுப்பு: **நளினி சம்பத்குமார்**

ம் அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli என்று டைப் செய்து
ங்கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.



வயலின் கலைஞர் கமல்!

அண்மையில் நடிகர் கமல்ஹாசனுக்கு இந்த ஓவியத்தைப் பரிசளித்தவர் சென்னையைச் சேர்ந்த ஓவியர் ஏ.பி.ஸ்ரீதர். அவர் சொல்கிறார்:

'கமலை ஒரு வயலின் கலைஞராக ஓவியம் தீட்டுவதற்கு எனக்கு இன்ஸ்பிரேஷன், மொர்டிஸ் வான் விண்ட் என்ற புகழ் பெற்ற ஆஸ்திரிய நாட்டு ஓவியரது ஓவியம்தான். மும்பையின் ஜகாங்கீர் ஆர்ட் கேலரி அருகில் பிளாட் ஃபாரத்தில் ஒரு பழைய காலண்டர் ஒன்றைப் பார்த்தேன். அதில் உலகப் புகழ் பெற்ற ஓவியர்கள் வரைந்த ஆறு பழங்கால ஓவியங்கள் அச்சிடப்பட்டிருந்தன. அவற்றுள் 'ஜன்னலில் ஒரு வயலின் கலைஞர்' என்ற ஓவியம் என்னை மிகவும் கவர்ந்தது. அதை வரைந்தவர் மொர்டிஸ் வான் விண்ட். அந்த ஓவியத்தைப் பார்த்தபோது எனக்கு ராஜபார்வை படத்தின் கமல்தான் நினைவுக்கு வந்தார். அடுத்த சில நாட்களுக்கு என் நெஞ்சை விட்டு அந்த ஓவியம் அகலவே இல்லை.

ஓவியர் மொர்டிஸ் வானின் ஓவியத்தில் இடம் பெற்றுள்ள வயலின் கலைஞரை கமலாக மாற்றி வரைந்தால் என்ன? என்று தோன்றியது. உடனே அதற்குச் செயல் வடிவம் கொடுத்தேன். ஓவியத்தை வரைந்து முடிக்க சுமார் ஒரு மாதத்துக்கு மேல் ஆனது. கமலிடம் அந்த ஓவியத்தை அளித்தபோது, அவர் மகிழ்ந்து பாராட்டினார்.''

- மௌலி

வாசகர் தலையங்கம்



அடிக்கிற மாதிரி... அழுற மாதிரி...

"நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன். நீ அழுகிற மாதிரி அழு" எனச் சொல்வதுண்டு. இன்றைய மத்திய, மாநில ஆட்சியாளர்களின் போக்கு இந்த மாதிரிதான் இருக்கிறது. மக்களின் அன்றாட இன்றியமையாத தேவையான பால் விலையை அரசே நிர்ணயம் செய்தது. ஆனால், யார் அரசு நிர்ணயித்த விலையில் பால் விற்கிறார்கள்? அடுத்து, ஆட்டோக்களுக்குக் கட்டணம் எப்படி வசூலிக்க வேண்டும் எனச் சொன்னார்கள். அரசு சொற்படி எந்த ஆட்டோ ஓட்டுனர் கட்டணம் வசூலிக்கிறார்? அரசின் சட்ட, திட்டங்களை எவரும் மதிப்பதில்லை. பொருட்படுத்துவதுமில்லை. காரணம் எந்த ஒரு சட்டத்தையும் அமல்படுத்துவதோடு சரி. சம்பந்தப்பட்டவர்கள் பின்பற்றுகிறார்களா என்பது குறித்து எவ்வித அக்கறையுமின்றி சட்டத்தை மதிக்காமல், உத்தரவுகளை உதாசினப்படுத்திச் செயல்படுபவர்களைக் கண்டு கொள்வதில்லை. எந்த ஒரு அரசும் மறைமுகமாக அப்படிப்பட்டவர்களை அரவணைப்பதாகத்தானே இதற்குப் பொருள்?

தங்கம் விலை வரலாறு காணாத அளவு போய்க் கொண்டிருக்கிறது. இதர அத்தியாவசியப் பொருட்களும் (சமையல் எரிவாயு உட்பட) வானமே எல்லை என்கிற ரீதியில் விலையேறிவிட்டது. மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி எந்த அரசும் மக்களின் நலனில் நிச்சயமாக அக்கறை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. தேர்தலில் மக்கள் வோட்டு ஆயுதத்தால் மரண அடி கொடுத்தாலும் எவருக்கும் உறைக்கப் போவதில்லை. எவரும் திருந்தவும் போவதில்லை.

மக்களாய் இனி அவரவர் தீர்வு காண வேண்டியதுதான் ஒரே வழி. தங்கத்தைப் புறக்கணிக்க வேண்டும். பண்டிகைகள், விழாக்கள், சடங்குகளை ஆடம்பரமாக நடத்தி ஜம்பமாக ஏற்படுத்திக் கொள்ளும் செலவுகளைக் கணிசமாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். உடுக்க உடை, உண்ண உணவு, இருப்பிடம் போன்றவற்றில் மட்டும் தீவிர கவனம் செலுத்தி, அத்தியாவசியத் தேவை ஒன்றையே தாரக மந்திரமாக்கி, சிக்கனமாக வாழ்ந்து வாழ்க்கையை முடித்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். போலித்தனங்கள் மிகுந்த ஜனநாயக நாடாக இந்தியா மாறிவிட்ட நிலையில் இனி மக்களுக்கு நிம்மதியோ, அமைதியோ, சந்தோஷமோ அரசுகளினால் நிச்சயம் ஏற்படப் போவதில்லை.

- ஜானகி எஸ்.ராஜ், திருச்சி

வாசகர்களே... உங்களைப் பாதித்த விஷயங்களை 'வாசகர் தலையங்கம்' பகுதியில், பாராட்டலாம்; குட்டலாம்; திட்டலாம்... உடனே எழுதுங்க!

தீராத விளையாட்டு விட்டலன்



மரக்கிளையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த அந்தணரைப் பார்த்து ராமதாஸர், 'நீ அந்தக் கிளையைப் பிடித் துக்கொண்டிருக்கிறாயா? அல்லது அந்தக் கிளை உன்னைப் பிடித்துக்கொண்டிருக் கிறதா?' என்றார்.

'நான்தான் கிளையைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்' என்றார்.

ராமதாஸர் புன்னகைத்தார். அந்தணர் புரிந்துகொண்டார். 'நாமல்லவா குடும் பத்தைப் பற்றிக்கொண்டு தொங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் குடும்பத் தொல்லைகள் நம்மைப் பற்றிக் கொண்ட தாக மாற்றிக் கூறுகிறோமே!' இப்படி எண்ணிய அந்தணர் அடுத்த கணமே தான் பற்றியிருந்த கிளையில் இருந்த கையை நீக்கினார். உடனே அவர் உடல் குளத்துக் குள் அமிழ்ந்தது. குளத்தின் அடித்தளத்தை அடைந்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவருக்கு எதிர்பாராத பரவசத்தை அளித் தது.

தங்கத்தால் ஆன அரண்மனை ஒன்று தகதகவென்று மின்னிக்கொண்டிருக்க, அதன் நடுவே சிம்மாசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தார் ராமதாஸர். அவரைச் சுற்றிலும் பக்தர்கள். அவர்களில் ஒருவர், ராமதாஸர் எழுதிய தாஸபோதம் எனும் நூலைப் படித்து அதற்கு விளக்கம் கூறிக் கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் குளக் கரையில் இருந்த ராமதாஸர் 'மேலே வருக' என்றார். கரைக்கு வந்து சேர்ந்தார் அந்தணர். ராமதாஸரை மெய்சிலிர்த்து வணங்கினார். அன்றிலிருந்து புதிய ஞான மும் பேரமைதியும் பெற்றார் அந்த அந்த ணர்.

ஒருநாள் சிவாஜி தமது அரண்மனை யின் உப்பரிகையில் நின்று கொண்டிருந்த போது தமது அரசியல் குருவாக அவர் எண்ணி வழிபட்ட ராமதாஸர் கையில் ஒரு கப்பரையோடு சாலையில் பிச்சை எடுத் துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திகைத்தார். தம்மையே அவரிடம் ஒப்படைத்து விட்டதாகக் கூறிய பிறகும் தம் குருவுக்கு யாசகம் செய்ய வேண்டிய அவசியம் ஏன் வந்தது?

தம் நண்பன் பாலாஜியை அழைத்தார். ஒரு தாளில் எதையோ எழுதி அவனிடம் கொடுத்து, ராமதாஸரிடம் அதை அளிக்கச் சொன்னார். இதற்குள் ராமதாஸர், சிவாஜியின் அரண்மனைக்கு வந்து விட்டிருந்தார். பாலாஜி அவரை வணங்கினான். சிவாஜி கூறியபடி அவர் கொடுத்தனுப்பிய தாளை ராமதாஸரின் கப்பரையில் போட்டான். அந்தத் தாளில் 'எனது ராஜ்ஜியம் முழுவதையும் உங்களுக்கு அளிக்கிறேன்' என்ற வாசகம் இருந் தது. ராமதாஸர் புன்னகைத்தார்.

இதற்குள் சிவாஜி அங்கு பவ்யமாக வந்து நின்றார்.

'உன் ராஜ்ஜியத்தையே எனக்குக் கொடுத்து விட்டாயே. இனி நீ என்ன செய்வாய்?' என்று கேட்டார்.

'உங்களுக்கு சேவை செய்து என் காலத்தை மகிழ்ச்சியுடன் கழிப்பேன்' என்றார் சிவாஜி.

'அதெல்லாம் இருக்கட்டும். என்னுடன் வா' என்றபடி மற்றொரு பிச்சைப் பாத்திரத்தை



அரியணையில் ராமதாஸர்!

அருண்சரண்யா

சிவாஜியின் கையில் திணித்தார் ராமதாஸர்!

சதாரா நகரின் சாலைகளில் ராமதாஸரும் சிவாஜியுமாக இணைந்து பிச்சை எடுத்தனர். மாறு வேடம் எதுவும் தரிக்காமல் தமது மக்களிடமே ஒரு மன்னன் பிச்சை எடுப்பது அவன் மன நிலையை எந்த அளவுக்குப் பக்குவப்படுத்தியிருக்கும்!

அன்று மாலை தான் தங்கியிருந்த நதிக் கரைக்குத் திரும்பினார் ராமதாஸர். கூடவே அங்கு சென்றார் சிவாஜி.

'நான் இனி என்ன செய்ய வேண்டும்?' எனக் கேட்டார் சிவாஜி.

ஒரு செழிப்பான ராமராஜ்ஜியம் உருவாகும் வாய்ப்பு தம் முன் உள்ளதை உணர்ந்துகொண்டார் ராமதாஸர். 'உனது ராஜ்ஜியத்தை நீயே ஆட்சி செய். ஆனால் அது உன்னுடையது அல்ல என்பதையும், முறையான நிர்வாகத்துக்காக உன்னிடம் இறைவன் அதைத் தாற்காலிகமாக ஒப்படைத்திருக்கிறார் என்பதையும் எப்போதும் நினைவில் கொள். உனது கொடியில் கருடன் இருக்கட்டும். அது காவிநிறக் கொடியாக இருக்கட்டும்' என்றார்.

ராமதாஸரை நமஸ்கரித்துவிட்டு அரண்மனை சென்ற சிவாஜி, அரியணையில் அமரவில்லை. அதில் ராமதாஸரின் உருவத்தை வைத்தார். அதற்குப் பிறகு ராமதாஸர் பெயரில்தான் ஆட்சி நடத்தினார் சிவாஜி.

''அதற்குப் பிறகு ராமதாஸர் என்ன செய்தார்?'' என்று கேட்டான்

ஜருகண்டி.

"அவர் தீர்த்த யாத்திரை சென்றார். மகாராஷ்டிரத்தில் உள்ள பல அனுமன் ஆலயங்கள் அவர் எழுப்பியவைதான். இதற்கு நடுவில் அவரைக் காணவேண்டும் என்று படுத்த படுக்கையாக இருந்த அவரது அன்னை துடிப்பதாகச் செய்தி வந்தது. அன்னையைக் காணச் சென்றார் ராமதாஸர்."

"என்னதான் துறவிகள் என்றாலும் தாய்ப் பாசம் விடாதே? ஆதி சங்கரர்கூட ராமதாஸரைப் போலவே தம் அன்னையின் கடைசி நாளில் அவரோடு இருந்தாரே" என்றான் ஜருகண்டி.

"ராமதாஸர் தம் அன்னையோடு அந்திம காலத்தில் இருந்ததாக நான் சொல்லவில்லையே. அவர் சென்றபோது ராணுபாய் ஒருபுறம் ஆனந்தமும் மறுபுறம் துக்கமும் அடைந்தார். பெரும் புகழோடு பல வருடங்களுக்குப் பிறகு தம்மிடம் வந்து சேர்ந்திருக்கும் மகனைக் காணமுடியவில்லையே என்கிற துக்கம் அவருக்கு. ஆம், இடைப்பட்ட காலத்தில் தமது பார்வையை இழந்திருந்தார் அவர்.

அன்னையின் கண்களைத் தொட்டார் ராமதாஸர். அடுத்த கணம் ராமதாஸரின் கரங்களில் இருந்த அற்புத சக்தி அவர் அன்னைக்குப் பார்வையை மீட்டுத் தந்தது.

சிவாஜி பலமுறை வற்புறுத்தியும் ராமதாஸர் அரண்மனையிலேயே தங்க மறுத்து விட்டார். வனம்தான் தியானத்துக்கு ஏற்ற இடம் என்று கருதினார். அவரும் ஒரு ராமாயணம் எழுதினார். அதில் யுத்த காண்டமும் ராவண வதமும் மட்டுமே இடம் பெற்றிருந்தன. சஜ்ஜன்கட் என்ற கோட்டைக்குள் தம் வசிப்பிடத்தைக் கொண்டிருந்த அவர் தமது இறுதி மூச்சை அங்கேயே விட்டார்!



சில கணங்கள் மௌனமாக இருந்தோம். அந்த மௌனத்தைக் கலைத்தது வேறு யார், ஜருகண்டிதான். "ராமதாஸருக்கு முன்னால் சமர்த்த என்கிற வார்த்தை எப்படி ஒட்டிக் கொண்டது?"

"சமர்த்த என்றால் மிகவும் சக்திவாய்ந்த என்று பொருள். மிகத் தீவிரமான யோகாசனப் பயிற்சி, ராமபிரானையே நேரில் கண்ட பாக்கியம், அவரது அரசியல் அறிவுரைகளுக்கு இருந்த செல்வாக்கு ஆகியவற்றைக் கண்டு மக்கள் சமர்த்த ராமதாஸர் என்றே குறிப்பிடத் தொடங்கிவிட்டார்கள்" என்று விளக்கமளித்தார் ராமநாதன்.

"அபங்கங்களை எழுதிய விட்டலன் பக்தர்களில் பலரும் சமகாலத்தில் வாழ்ந்திருக்கிறார்களே" என்றான் ஜருகண்டி.

"உண்மை. அப்படிப் பல அபங்கங்களில் கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஞானேஸ்வரர், நாமதேவர் ஆகிய இருவர் வாழ்ந்த காலத்தில்தான் கூர்மதாஸரும் ஸாவ்தா மாலியும் வாழ்ந்தனர்' என்றார் ராமநாதன்.

"அட, புதிதாக இரண்டு பெயர்களைக் கேட்கிறேனே! ஓஹோ, நீங்கள் சொல்வதிலிருந்து ஒன்று தெரிகிறது. இப்போது நாம் கூர்மதாஸர் வாழ்ந்த இடத்துக்கோ ஸாவ்தாமாலி வசித்த இடத்துக்கோ போகப் போகிறோம், இல்லையா?"

"உன் யூகம் சரிதான் ஜருகண்டி. ஆனால் அதில் ஒரு சின்னத் திருத்தம். அந்த இரண்டு பேரும் ஏதோ வெகு தொலைவில் வசித்துவிடவில்லை. அவர்கள் வாழ்ந்தது அருகருகில்தான். அங்கே போகப்போகிறோம்" என்றார் ராமநாதன்.

'அங்கே' என்பது அரண்

அபங்க அமுதம்

காந்தா முளா பாஜீ
அவகீ விடா பாயீ மாஜீ
லஸூண மிரசீ கோதி பீரீ
அவகா ஜாலா மாஜா ஹரீ
மோட நாடா விஹீர தோரீ
அவகீ வ்யாபிலீ பண்டரீ
ஸாவதா ம்ஹணே கேலா மளா
விட்டல பாயீ கோ விலா களா

- ஸாவ்தா மாலி

'ருக்மிணிதேவி எனக்கு வெங்காயம், முள்ளங்கி, காய்கறி ஆகியவற்றைப் போல. விட்டலன் எனக்கு வெள்ளைப்பூண்டு, பச்சை மிளகாய், கொத்தமல்லியைப் போல. என்னைச் சுற்றிலும் கிணறு, வாளி, கயிறு போன்றவை நாலாபக்கங்களிலும் நிறைந்திருப்பதுபோலவே பண்டரிபுரத்தில் விட்டலன் முழுமையாக நிறைந்திருக்கிறான். நான் என் கழுத்தில் விட்டலனின் பாதங்களை நட்டு தோட்டம் போட்டு விட்டேன்.'



என்ற இடம். பூனேவிலிருந்து பைட்டண் (மகான் ஏகநாதர் வாழ்ந்த இடம்) 193 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. அப்படிச் செல்லும் வழியில் சுமார் பாதி தூரத்தில் இருக்கிறது அரண்.

ஸாவ்தா மாலியின் தந்தை பலோபா. தாய் நங்கீதாபாய். இருவருமே ஆத்மார்த்தமான விட்டல பக்தர்கள். அடிக்கடி பண்டரிபுரம் செல்வார்கள். சந்திரபாகா நதியில் குளிப்பார்கள். விட்டலனைக் கண்குளிர தரிசனம் செய்வார்கள். இவர்களுக்கு மகனாகப் பிறந்து அந்த பக்திச் சூழலில் வளர்ந்த ஸாவ்தா மாலியும் விட்டலன் மீது பக்தியும் பாசமும் கொண்டதில் வியப்பில்லை.

பண்டரிபுரத்திலிருந்து சற்று தள்ளி அமைந்துள்ள பகுதி அரண். அங்குதான் ஸாவ்தா மாலியின் தோட்டம் அமைந்திருந்தது. கடுமையான உழைப்பாளி ஸாவ்தா மாலி. கிணற்றிலிருந்து தனி ஒருவராகவே தண்ணீர் எடுத்து தமது தோட்டம் முழுவதற்கும் தினமும் பாய்ச்சுவார். மொட்டுக்கள், மலர்கள் ஆகும்போது மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிடுவார். 'விட்டலா உன் மகிமையே மகிமை' என்று வியந்து பாராட்டுவார். பாண்டுரங்கனை பெரும்பாலான நேரங்களில் எண்ணுவார். அப்படி எண்ணும்போதெல்லாம் அவர் உள்ளம் நிறையும். கண்கள் தளும்பும்.

இறைவனிடம் அவர் எதுவுமே வேண்டவில்லை. 'உன்னைக் கண்ணார தரிசிக்க வேண்டும்' என்று கூட அவர் வேண்டியதில்லை. அவ்வளவு ஏன், பண்டரிபுரம் செல்வதுதான் தம் வாழ்நாளின் குறிக்கோள் என்றுகூட சிந்தித்ததில்லை. ஆனால் விட்டலன் மற்றும் தமது தோட்டம் ஆகியவைதான் அவரது முழுநேர லட்சியங்கள். தமது நந்தவனத்தில் உள்ள ஒவ்வொரு மலரிலும், ஒவ்வொரு இலையிலும், ஒவ்வொரு காயிலும், ஒவ்வொரு கனியிலும் விட்டலனின் ஒவ்வொரு தன்மையையும் ரசித்துக்கொண்டிருந்தார் அவர்.

''ருக்மிணிதேவியை காய்கறியோடு ஒப்பிட்டார். விட்டலனை பச்சைக் கொத்தமல்லியோடு ஒப்பிட்டார். ஆக தோட்ட வேலை செய்யும் ஒவ்வொரு கணமும் அவர் இறைவனின் நினைவாகவே இருந்தார்'' என்றார் ராமநாதன்.

யாத்திரை தொடரும்

ஆஹா ஆல்பம்

வாசகர்களே! நீங்கள் பெரிதும் ரசித்து, பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் 'ஆல்பம்'க்கு எழுதி அனுப்புங்க...



'பாலம்' பல்சுவை இதழ் நடத்திய 'வல்லிக் கண்ணன் சர்வதேச நினைவுச் சிறுகதைப் போட்டி - 2008ல் நான் எழுதிய 'நிலாச்சோறு' என்னும் சிறுகதைக்கு மூன்றாவது பரிசு கிடைத்தது. இதன் பரிசளிப்பு விழா 10.5.2008 அன்று எழுத்தாளர் ஜெயகாந்தன் வீட்டில், அவரது தலைமையில் நடைபெற்றது. விழாவில் நான் ஜெயகாந்தனிடமிருந்து பரிசும் பெற்றேன். விழா முடிந்ததும், அவருடன் புகைப்படம் எடுக்காமல் விட்டு விட்டோமே என்று எண்ணம் வர, ஜெயகாந்தனை தயங்கித் தயங்கிப் போய் எனது ஆசையைச் சொன்னேன்.

''எப்பவுமே ஒரு கலைஞன் எதற்கும் தயங்கக் கூடாது. ஃபோட்டோதானே எடுக்கலாம்'' என்றபடி, என்னை அருகில் நிறுத்தி ஃபோட்டோ எடுக்கச் சொன்னார். முடிந்ததும், இப்ப திருப்தியா? எனக் கேட்டது மறக்க முடி யாத அனுபவம்! என் வலது புறத்தில் இருப்பவர் பாலம் ஆசிரியர் கல்யாண சுந்தரம்.

- வெ.ராம்குமார், வேலூர்

நண்பர் ஒருவரின் மூலம் இன்ஃபோஸிஸ் சுதா மூர்த்தியைத் திருநள்ளாறு சனிஸ்வரன் கோயிலுக்கு அழைத்துச் செல்லும் வாய்ப்பு எனக்கும் என் கணவருக்கும் கிட்டியது. முன்பின் அறியாத எங்களுடன் அவர் பழகிய விதம், உரையாடியது எல்லாம் ''மேன்மக்கள் என்றும் மேன் மக்களே'' என்பதை உணர்த்தியதோடல்லாமல், நாம் எந்த நிலைக்கு உயர்ந்தபோதும் எளிமையாக இருக்க வேண்டும் என்ற பாடத்தையும் கற்பித்தது. அவருடன் பழகிய அந்த அரை நாள் அனுபவம் அரை நூற்றாண்டு ஆனாலும் மறக்க முடியாது என்பதற்கு இந்தப் புகைப்படமே ஒரு சான்று.

- இ.வள்ளிநாயகி இளங்கோவன்,
காரைக்கால்



என் கணவர் கரக்பூரில் (மேற்கு வங்காளம்) 1968ஆம் ஆண்டு ரயில்வேயில் உயர் அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம். அவ்வூரில் இயங்கிக் கொண்டிருந்த 'தென்னிந்திய சங்க'த்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கு ஒரு தமிழ் பள்ளியின் கட்டட நிதியுதவிக்காக எம்.எஸ்.சுப்புலக்ஷ்மியின் இசை நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்தார். அச்சமயம் எம்.எஸ்.அம்மா, அவர் கணவர், அவர் மகள் ராதா விஸ்வநாதன் ஆகியோரை எங்கள் வீட்டிலேயே தங்க வைத்து உபசரிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பிப்ரவரி, 28ம் தேதி நடந்த கச்சேரிக்கு 85 வயதான எனது பாட்டியால் வரமுடியவில்லை என்று தெரிந்தவுடன் மறுநாள் ஊருக்குக் கிளம்பு முன் 'நாராயண திவ்யநாமம்,' 'சம்போ மகாதேவா' பாடல்களைப் பாடி எங்களை மகிழ்வித்தார் எம்.எஸ். அம்மா அவருடைய எளிமையையும் இனிமையையும் பாராட்ட என்னிடம் வார்த்தைகளே இல்லை. அவரோடு எடுத்துக் கொண்ட இந்தப் புகைப்படம் ஒன்றே எனக்கு அரிய பொக்கிஷம்!

- லஷ்மி சேஷாத்ரி, சென்னை-4



சுவாமி மலையில் ஓர் உறவினர் வீட்டுத் திருமணத்தின்போது, சரித்திர நாடகங்களின் மூலம் புகழ் பெற்றவரும் சினிமா வில்லன் நடிகருமான ஆர்.எஸ்.மனோகர் கலந்துகொண்டார். அப்போது எடுக்கப்பட்ட இப்புகைப்படத்தின் நடுவில் அமர்ந்திருப்பது நானும், இடதுபுற ஓரம் அமர்ந்திருப்பது செளந்தரதியாகராஜன் என்பவரும். எங்கள் இருவர் மகன்களுக்கும், தம் இரு பெண்களைத் திருமணம் செய்து கொடுத்த சம்பந்தி பாலு தான் இந்தப் புகைப்படம் எடுத்தவர்.

புகைப்படம் எடுத்த எங்கள் அன்புக்குரிய சம்பந்தி, ''ஒரே புகைப்படத்தில் மூன்று வில்லன்களையும் கவர் செய்துவிட்டோம் என்று நினைத்திருப்பாரோ'' என நாங்கள் வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டோம்.


- வை. கோபாலகிருஷ்ணன், திருச்சி



மனத்தில் மகிழ்ச்சித்தூவலாய் இளம் பனி தொடங்கிவிட்ட டிசம்பர் காலத்தில் காலேஜ் ஏஞ்சல்ஸ் கலகலக்கும் ஒரு இடத்துக்கு ஜாலி விஸிட் போகலாம் என்று தோன்றியது. ஆனால் அது எதிர்காலக் கனவைச் செதுக்கும் கலைக்கூடமாகவும் பெண்களை உயர்த்திவிடும் குருகுலமாகவும் இருந்தால் நலமென்றுபட்டது. அப்போ சட்டென உதித்த பெயர், கோவை பீலமேடு பகுதியில் அவினாசி சாலையில் ஜி.ஆர்.ஜி. அறக்கட்டளையின் ஓர் அங்கமான P.S.G.R. கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி. ம்ம்... உள்ளே போனா... அசத்துறாங்கப்பா...!







''யாருடைய சிக்னேச்சர் இது?''


''இது என்னோட அப்பா சைன் சார்''

''உங்க அப்பா பேர் என்ன?''

''ஏழுமலை''







''குடியரசு தின விழாவின் முப்படை அணி வகுப்பில் நாங்க ஒவ்வொரு வருஷமும் இருப்போம். துப்பாக்கி சுட.... விமானம் ஓட்ட.... அட... பாதி ராணுவப் பயிற்சி இங்கு பாவைகளுக்கு உண்டுங்க!''



யாரும் வாலாட்ட முடியாது!

ஜோக் ஏரியா.....

''நம்ம பையன் எங்க பணம் வச்சாலும் எடுத்துக்குறான். அவன் எடுக்காத இடமா சொல்லுங்க.''

''அவனோட காலேஜ் புக்ல வைடி. ஜென்மத்துக்கும் எடுக்கமாட்டான்.''

''இந்த புக் ரொம்ப போர். நிறைய கேரக்டர்ஸ் இருக்கு. ஆனால் கதையே இல்ல.''

''வாடா... வா... நீதான் எண்ட்ரீ ரெஜிஸ்டர தூக்கிட்டுப் போனவனா?''

- பி.கே. கலைவாணி




கல்கியின் சீஸன் சிறப்பிதழில் நானும் மேடை ஏறிட்டேன்...



இமயத்தில் தடம்பதித்த கிருஷ்ணம்மாள்!

"இளைய இந்தியர் (Yi-Net) அமைப்பின் மூலம் 400 மரக்கன்றுகளை நட்டு வைத்து வருடம் முழுவதும் நேரடிப் பார்வையில் பராமரித்து வருகிறோம். அதற்கான உப பிரிவுதான் விருட்சபாலனம். அதுமட்டுமின்றி, Shiksha என்ற நிகழ்வின் மூலம் அறிவுத் திறனை வளர்க்கிறோம்."





நாமும் வளரணும், நம்மைச் சுற்றி உள்ளவங்களும் வளரணும் அப்பதானே ஒரு ஃபுல் சர்க்கில் கம்ப்ளீட் ஆகும். அதுக்காகத் தான் பெண்கள் கல்வி மையம் மூலம் சமூகப் பணி.



இலங்கையில்...

கடவுளின் ஆலயமும்
கல்லறை ஆனபின் - சுவரற்ற
சித்திரங்கள் சுருக்கெழுத்தானது.
நாளை சுவர்தேடும் சித்திரங்கள்
சுவடின்றிப் போகாமல்
சுவரேற்றலின் சாத்தியத்தை
அகிம்சையோடு அனைவரும்
யோசிப்பதே...
யோக்கியமான தமிழ்ப் பணி.

- சா.தீபா,
III BSc (Comp. Science)





வறுமையின் கொடுமை...

முன்பே தைத்த
காலணிகளை
மீண்டும் தைக்கிறபோது
உணர்கிறான்
வறுமையின் கிழிசல்களை!

- சி.காளீஸ்வரி, II BSc Maths

"பதக்கங்கள் எல்லாம் பஞ்சுமிட்டாய் சாப்பிடுற மாதிரி" என்கிறார் இண்டர்நேஷனல் அத்த லெட்டிக்கில் தங்கம் வென்ற கௌசல்யா.



சிகரத்தில் கொடியேற்றிய...

''சில்லறைத் தனமான ஜிகினா வேலை நமக்குச் சரிப்படாதுங்க. ரிஸ்க் எல்லாம் ரஸ்க் சாப்பிடற மாதிரி. இமயமலை சித்திதார் சிகரத்தில் ஏறி ஜிவ்வுன்னு கொடி நட்டோம் பாருங்க.''

''எந்தக் கல்லூரியிலும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு, இந்தக் கல்லூரியின் முதல் வரே இக்கல்லூரியின் முன்னாள் மாணவி தான். பேராசிரியையிடம் மாணவி படித்து, அவர் பேராசிரியை ஆகி, அவ ரிடம் இன்னொருவர் படித்து... இப்படி இங்கு தற்போது 9 தலைமுறைகளாக பேராசிரியைகள் பணி செய்து கொண் டிருப்பது பெருமையும் வியப் பும் மிக்க ஒன்று.''



தலைநிமிர்ந்த தலைமுறை!



கடவுளைப்போல அழகான காதல்!

அழகாய்...
ஆழ்ந்துவிட்டேன் உன் நினைவில்
இன்று என்னுள் மாற்றம் தந்த
ஈசனே!
உன்னத உன் நினைவால்
ஊதக்காற்றால் நான் மாற
என்னை எனக்குக் காட்டினாலும்
ஏனென்று தெரியவில்லை...
ஐயமுற்று யோசித்தாலும்
அகப்படவில்லை பதில் ஏதும்.
ஒன்றுமட்டும்
ஓரளவு புரிகிறது...
ஔடதமாய் உதவும் அது
ஃ-ஐ போலவே அழகாய்
இருக்கிறது...

- இ.ஸ்ரீவர்ஷினி, II B.B.M (IB)



கனவுகளை நேசிக்கிறேன்...

அவை நிறைவேறாது என்று அறிந்தும்
நிஜமற்றது என்று தெரிந்தும்
நிகழ் உலகுக்கு உதவாது என்று புரிந்தும்
அது தாகம் தீர்க்காத கானல்நீர் என்று
உணர்ந்தும்
அந்த சில கணங்களேனும் என்னை
ஆசுவாசப்படுத்தும் என்று...
கனவுகள் ஏகாந்தமானவை!

- த. சௌமியா, II BSc Maths

பொன்விழா நோக்கிய பயணம்!



கல்லூரி செயலர் திருமதி நந்தினி ரங்கசாமி:

''பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் - பாரதி சொன்னதை நிஜத்தில் நிறைவேற்ற திரு. ஜி.ஆர். கோவிந்தராஜுலு, திருமதி சந்திரகாந்தி கோவிந்தராஜுலு ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டு, கோவை மாநகரில் கல்வித் துறையில் கோலோச்சுகிறது பூ.சா.கோ.அர. கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி. இங்கு பன்மொழி ஆற்றலை வளர்க்கும் விதமாய் ஃபிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பான் மொழிகள் சிறப்புப் பாடங்களாக பயிற்றுவிக்கப்படுகிறது. IAS தேர்வுகளுக்குத் தயார்படுத்துகிறோம். அமெரிக்காவின் டொலிடோ மற்றும் சாண்டியாகோ பல்கலைக்கழகத்துடன் எங்கள் கல்லூரி இணைந்து கூட்டியக்கம் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து நிறைய காரியங்களை சாதித்துள்ளோம். ஆளுமைத் திறன் வளர்ச்சிப் பயிற்சியும், யோகா வகுப்புகளும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'ஈகோ வாட்ச்' கிளப்பும் எங்கள் ஸ்பெஷாலிட்டி. கல்விச் சேவையில் 50வது ஆண்டை நோக்கிப் பயணமாகிறோம். இது எங்கள் சாதனை.''


செய்தி சித்திரம்: கோவை ஆர்.பாலா

நிஜமான கனவு!

கல்லூரி முதல்வர்
முனைவர். நா. யசோதா தேவி:



''பாரபட்சமற்ற பெண் கல்வியும், சமூக முன்னேற்றமும்தான் எங்கள் கனவு. அந்தக் கனவை நிறைவேற்ற ஜி.ஆர்.ஜி. கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது. அதன் ஒரு அம்சம்தான் 1963ல் பூ.சா.கோ.அர. கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி உருவானது. 20 இளங்கலைப் படிப்புகளும் 11 முது கலைப் படிப்புகளும் ஆராய்ச்சிப் படிப்புகளும் கொண்ட ஆலமரம் எங்கள் கல்லூரி. அம்பேத்கர் கல்வி மையம், மகளிர் கல்வி மையம், காந்திய கல்வி மையங்களும் இங்கு அமைக்கப்பட்டு, சமூகப் பணியாற்றுகிறோம். வாங்க... வந்து ஒருமுறை விசிட் பண்ணிப் பாருங்க. எங்க சேவையின் செயல்பாடு புரியும்.''



அப்பா வேடத்தில் அஜ்மல்!



'**க**திர்வேல்' படத்தின் மூலம் தமிழ் உலகுக்கு அறிமுகமானவர் அஜ்மல். தமிழ்த் திரை உலகம் தமக்கு ஒரு நல்லதொரு இடத்தைத் தரும் என்ற நம்பிக்கையில் தமிழில் நடிக்க ஆரம்பித்தார். 'கதிர்வேல்' படத்தை அடுத்து அஜ்மல் நடிக்கும் படம் 'கருப்பம்பட்டி.' ''அப்பா, மகன் வேடம். இரு வேடங்களில் நடிப்பது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. அடுத்து 'கோ' படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறேன். கோ படம் வெளி வந்தபிறகு நன்றாகப் பேசப்படுவேன். நான் படித்த காலத்தில் சினிமாவுக்கு வந்தால் எந்த கேரக்டரும் எனக்குப் பொருந்துவதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அது 'கோ' படத்தின் மூலம் நிறைவேறிவிட்டது'' என்கிறார்.

அய்யனார் ஆன ஆதி

'**மி**ருகம்', 'ஈரம்' படக் கதாநாயகன் ஆதி நடிக்கும் படம் 'அய்யனார்.' படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது. இயக்குனர் பிரகாஷ் புதியவர். ''இவரது இயக்கத்தில் மாறுபட்ட வித்தியாசமான கதாநாயகனாக நடிக்கிறேன். அய்யனார் படத்தில் ஹீரோயினைப் பார்க்கும்வரை சாதாரணமாக இருக்கும் நான், ஒரு கிராமத்தைக் காவல் காக்கும் எல்லை தெய்வம் அய்யனாரைப் போல் ஹீரோயின் வீட்டைக் காவல் காத்து நிற்கிறேன். இதனால்தான் இந்தப் படத்துக்கு அய்யனார்.''

- விஜய்கோபால்

அகப் பகைகள் ஆறு!

டாக்டர். சுதா சேஷய்யன்



பக்தர் ஒருவருக்கு வந்த சிந்தனை: 'ரிஷிகள் முனிவர்களெல்லாம் தவம் செய்யப் போனார்கள் என்று படிக்கிறோமே, தங்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத்தானே தவம் செய்தார்கள். தவத்துக்கு மெச்சி பிரம்மாவோ விஷ்ணுவோ சிவனோ வந்தவுடன், ஆசைகளைத்தாம் வரங்களாக வாங்கிக்கொண்டார்கள். அதனால், ஆசைப்படுவதில் என்ன தவறு? வேண்டுமானால், நல்ல நல்ல ஆசைகளாக மாத்திரம் பட்டால் போயிற்று' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டவர், பூஜையறையில் போய் அமர்ந்தார்.

அலுவலக நண்பர் ஒருவர் ஐந்நூறு ரூபாய் கைமாற்றுக் கேட்டிருந்தார்; கூடுதலாக, சின்னச் சின்ன செலவுகளுக்காகத் தமக்கும் ஒரு ஐந்நூறு மொத்தம் ஆயிரம் ரூபாய். அன்றாடம் தாம் வழிபடும் அம்பிகையிடம் ஆயிரம் ரூபாயை உடனடியாகக் கொடுக்கும்படி கேட்டார். அம்பிகைக்கு என்ன தோன்றியதோ, சிறிய ஆசை, அதுவும் நியாயமான ஆசை, பிறருக்கு உதவுகிற ஆசை என்பதையெல்லாம் எடைபோட்டு, ஆயிரம் ரூபாய்த் தாளை அங்கே தோற்றுவித்தாள். அவ்வளவுதான், பக்தருக்கு மகிழ்ச்சியில் கைகால் நிலைக்கவில்லை! அன்றைக்குப் பார்த்து, அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் வந்திருந்தார்; பூஜைதானே என்று அவரும் அறைக்குள் அமர்ந்திருந்தார். அண்ணனுக்குக் கிடைத்த ஆயிரம் ரூபாய், அவரைச் சங்கடப்படுத்தியது. வெளியில் சிரித்தாலும், 'இவருடைய பக்திமட்டும் ரொம்ப உசந்ததோ, எனக்கு இந்தத் தகுதியில்லையோ' என்று உள்ளுக்குள் மறுகினார். அவசர அவசரமாகக் கைபேசியை எடுத்து, மனைவிக்கும் இன்னொரு உறவினருக்கும் தகவல் தெரிவித்தார். தொலைக்காட்சி அவசர ஒளிபரப்பைவிட வேகமாகச் செய்தி பரவியது. பரபரப்புக்கிடையில் தூரத்து தூரத்துச் சொந்தக்காரர் ஒருவரின் எச்சரிக்கை அழைப்பு: 'பாத்து. அவன் ஏதோ மாயாஜாலமெல்லாம் பண்ணுகிறான். உனக்கேதாவது சூனியம்கினியம் செய்துடப் போறான்!'

வந்தவர் பாடு இப்படியிருக்க, நம்முடைய பக்தர் பாடு வேறுவிதம். மனைவி முகம் சுளித்தாள்: 'கேட்டதுதான் கேட்டீர்கள், ஒரு பத்தாயிரம் இருபதாயிரம்னு கேட்கக்கூடாதோ?' கண்களில் ஆர்வம் மின்ன, மகள் அப்பாவின் தோள்தொட்டுத் தள்ளினாள்: 'இன்னொரு முறை கேளுங்களப்பா.' அவருக்கேகூட மனக்கிலேசம் -- 'இவ்வளவு சுலபமாக அம்பாள் தருவாளென்றால், இன்னும் அதிகமாகக் கேட்டிருக்கலாமே!' ஆசை அடங்கவில்லை; மாறாக, தொடர்ந்தது.

வேமனா என்னும் தெலுங்கு ஞானி கூறினார்:

ஆச விடக கானி பாசமுக்துடு காது
முக்துடைன கானி முனியு காது
முனிகி கானி ஸர்வ மோஹம்புலுண்டவு
விஸ்வ. . .

(ஆசைகளை விட்டாலொழிய பாசக் கட்டிலிருந்து விடுபடமுடியாது; விடுபட்டாலொழிய முனி ஆகமுடியாது; மோகத்திலிருந்து விடுபட்டவரே முனியா

வாரம் ஒரு மந்திரம் 7



வார்).

ஒரேயொரு சின்ன ஆசை; அதுவும் நியாயமான நல்ல ஆசை; அதையும் அம்பாள் நிறைவேற்றி வைத்தாள். ஆனால், பலன்? அடுத்த நாள்முதல், பூஜையறைக்குள் பக்தர் போகும்போதே, பெரிய பட்டாளமும் போனது. ஆவலைவிட, அதிகமான பொறாமையோடு வேடிக்கை பார்த்தது. பக்தரும், பக்தியை மறந்துவிட்டு, லட்சம் கோடி என்று ஜபித்துக்கொண்டே போனார். மனைவியும் மகளுமே, தமக்கு வாங்கிக் கொண்டவர் எங்களுக்கு வாங்கித்தரவில்லையே என்று மனம் பொருமினர். ஏதோ சித்துவேலை செய்கிறார் என்று காவல்துறை கண்காணிக்கத் தொடங்கியது.

அகப் பகைகள் ஆறு என்பது கணக்கு. அவற்றில் முதலாவது, காமம் (அதாவது விருப்பம்). காமம் (ஆசை) அடங்காவிட்டால், மற்றவையும் வந்துவிடும்; உறவுகளோடு குரோதம் (சினம்), அனுபவிப்பதில் லோபம் (பேராசை), இன்னும் இன்னும் என்று கீழே தள்ளுகிற மோஹம் (மயக்கம்), எனக்குத் தான் என்கிற மதம், பிறருடன் மாத்ஸர்யம் (பொறாமை) என்று அனைத்துக்கும் வழிகிடைக்கும். ஆசை அடங்கினாலோ, ஆனந்தம் கிட்டிவிடும்.

(மந்திரம் ஒலிக்கும்)



ஊத்திக் கொண்ட உயர்மட்டக் குழு!

★ கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக தமிழக அரசில் பல முக்கியமான முடிவுகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணி மாற்றம் போன்றவற்றில் 'கண்ணுக்குத் தெரியாத' உயர்மட்டக் குழுவின் பங்களிப்பு இருந்தது என்றும், ஸ்பெக்ட்ரம் விவகாரம் வெடித்த பிறகு (குறிப்பாக நிரா ராடியா டேப்), அந்தக் குழு செயலற்றுப் போய்விட்டது என்றும் சொல்கிறார்கள். ஆ.ராசா, முதல்வரின் செயலர் ராசமாணிக்கம், கனிமொழி, ஜாபர் சேட் (உளவு அதிகாரி) ஆகியோர்தான் அந்தக் குழுவில் இருந்தார்களாம். இந்த நிலையில் தமிழக முக்கிய காவல்துறை அதிகாரிகள் இருவர், சி.பி.ஐ.யின் கண்காணிப்பில் இருப்பதாக தில்லி தகவல் ஒன்று சொல்கிறது.

ஆய்வுக்குத் தேவை ஆய்வு?

★ மாவட்டங்களில் உள்ள கழகப் பிரமுகர்களைக் கூப்பிட்டு, ஆய்வுக்கூட்டம் நடத்தி வருகிறார் முதல்வர். ''ஆனால், அந்த ஆய்வுக் கூட்டங்கள், 'ஜால்ரா' கூட்டங்களாகவே பெரும்பாலும் மாறி வருகின்றனவே தவிர, அங்கே யாரும் உண்மை நிலையைப் பேசுவதில்லை'' என்கிறார் தூத்துக்குடி மாவட்ட பிரமுகர் ஒருவர். குறிப்பாக மாவட்டச் செயலாளர்களின் ஏதேச்சதிகாரத்தைப் பற்றி யாரும் எதுவும் சொல்வதில்லையாம். காரணம் தேர்தல் வருவதால் அவர்கள் மாற்றப்படும் வாய்ப்பு இல்லையென்பதால்தானாம். வேட்பாளர் செலக்ஷன், நிதி பங்கீடு ஆகியவற்றில் அவர்கள் பங்களிப்பு அதிகம் ஆயிற்றே. ''தலைவரும் தளபதியும் கூட்டமாக நடத்துவதற்குப் பதில் தனித்தனியாகக் கூப்பிட்டு விசாரித்தால் வில்லங்கங்கள் விவகாரமாகும்'' என்கிறார்கள் கழகப் பிரமுகர்கள்.



இலையோடு இளைய தளபதி?

★ திரையுலகப் பிரமுகர்கள் தி.மு.க. ஆளும் கட்சியாக இருப்பதால் பல வருத்தங்கள் இருப்பினும் முதல்வரோடு நெருக்கத்தை வளர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். ஆனால், தேர்தலின்போது அதிருப்திக் குரல்கள் பகிரங்கமாக வெளிப்படும் என்கிறார்கள். துறையின் மீது முதல்வரின் பேரன்கள் கொடுக்கும் அழுத்தம் காரணமாக

முணுமுணுக்கும் முஸ்லிம் இயக்கங்கள்!

★ தமிழக அரசின் மீது கடுப்பில் இருக்கின்றன தமிழக முஸ்லிம் இயக்கங்கள். சமீபத்தில் காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறையில் 'இளநிலை' அதிகாரிகளுக்கானத் தேர்வு நடந்தது. இதில் மொத்தம் உள்ள 10,060 பதவிகளில், முஸ்லிம்களுக்கு உள்ள 3.5 சதவிகித இட ஒதுக்கீடு அடிப்படையில் 350 பதவிகள் கிடைக்க வேண்டுமாம். ஆனால், 263தான் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இதனால்தான் கடுப்பாம். ''இதைச் சரி செய்யாவிடில் தேர்தலில் கடுப்பு கடுமையாக வெளிப்படும்'' என்கிறார்கள் இயக்கங்களின் பிரமுகர்கள். அதுபோலவே ஆசிரியர் நியமனத்தில் அருந்ததியர்களுக்கான 3 சதவிகித இட ஒதுக்கீடு சரியாகக் கடைபிடிக் கப்படவில்லை என்று ஆத்திரத்தில் இருக்கிறார் கள் அருந்ததியர்கள்.

பாலிடிக்ஸ் பஜார்







...லேட்டஸ்டாகப் பாதிக்கப்பட்டிருப்பவர் நடிகர் விஜய். அவரது 'காவலன்' படத்துக்கு நல்ல தியேட்டர்கள் கிடைக்கவில்லை. உதயநிதியின் 'மன்மதன் அம்பு' படத்துக்காக தியேட்டர்கள் ரிசர்வ் செய்யப்பட்டு விட்டனவாம். இது தவிர துரை தயாநிதியின் 'ரத்த சரித்திரம்', கலாநிதியின் 'எந்திரன்' ஆகியவை மிச்சம் இருக்கும் நல்ல தியேட்டர்களைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கின்றன. கடுப்பான விஜய் ஜெயலலிதாவோடு சேர்ந்து அரசியல் குடைச்சலுக்குத் தயாராகிவிட்டதாகத் தெரிகிறது. ஆனால், அவரை போயஸ்தோட்டக் காவலனாகப் போகாமல் தடுக்கும் முயற்சிகள் ஆளும் கட்சி சார்பில் எடுக்கப்பட்டிருக்கின்றன.

- சஞ்சயன்



வாய்மையே வெல்லும்!

★ 'மறைந்த தி.மு.க. முக்கியப் பிரமுகர் களின் படங்களை அவர்களது நினைவுநாளில் போட்டு சிறு குறிப்பு எழுதி சிறப்பு செய் வது 'முரசொலி' பத்திரிகை யின் வழக்கம். ஆனால், தா.கிருஷ்ணனுக்கு அந்த மரி யாதைகூட செய்யப்படு வதில்லை' என்று இந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந் தோம். இப்போது தா.கி.குடும் பத்தோடு நெருக்கத்தை வளர்த்துக் கொள்ள (சமா தானம்...?) சமீபத்தில் அவரது சகோதரர் ராமையாவைச் சந்தித்தார் முதல்வர். ராமையா முதல்வரைச் சந்தித்தது தா.கி. குடும்பத்தில் பலருக்குப் பிடிக்காமல் போனாலும் 'எல்லோரையும்' திருப்திபடுத் தும் முயற்சியும் நடக்கிறது. ராமையாவுக்கோ அல்லது தா.கி. குடும்பத்தில் வேறு ஒரு வருக்கோ சட்டமன்றத் தேர் தலில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்கலாம் என்கிறார்கள். எப்படியோ தா.கி. ஆன்மா சாந்தியடைந் தால் சரி!

நாதஸ்வர கிராமங்கள்!



திருப்பாபுரம் பிரதர்ஸ்

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டக் கிரா மங்கள், இசைக் கலைஞர்கள் பிறந்து வளர்ந்த தொட்டில்கள். இம்மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில், தங்கச் சங்கிலியின் இணைப்புக் கண்ணிகள் போல, தொடர்ந் தாற்போல் அமைந்துள்ளன நாதஸ்வர கலைஞர்களின் பூர்விக கிராமங்கள்.

திருவாரூரிலிருந்து இருபத்தைந்து கி.மீ. தூரத்தில் திருவீழிமிழலை கிராமம். தொண்ணூற்றியொரு வயது வரை வாழ்ந்த நாதஸ்வரக் கலைஞர், ஏ.ஆர்.எஸ்.சுப்பிர மணிய பிள்ளையின் ஊர். திருவையாறு தியாகராஜர் ஆராதனை விழாவினை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், தனிப்பட்ட முறையில் பொறுப் பேற்று நடத்தியவர் இவர். நாதஸ்வரக் கலைஞர்களிலேயே முதன்முதலாக (1974) பத்மஸ்ரீ விருது பெற் றவர். முப்பத்தி மூன்று ஆண்டுகள் கழித்து, அவரது மகன்களில் ஒருவரான தட்சிணா மூர்த்தி பிள்ளை (2007) பத்மஸ்ரீ விருது பெற்றுள்ளார். ஒரே குடும்பத்தில் அப்பா - மகன் என இருவருமே பத்மஸ்ரீ விருது பெற்றது, இவர்களாகத்தான் இருக்கும்.


திருவீழிமிழலை நாதஸ்வரக குடும் பத்தின் வாரிசுகள் தற்போது என்ன செய் கிறார்கள்? ''ஏ.ஆர்.எஸ். பேரன் நான். என் அப்பாவும் சித்தப்பாவும் வாய்ப்பாட்டுக் கலைஞர்கள். ஆனால், எனக்கு ஏனோ ஏதும் வாய்க்கவில்லை. திருவீழிமிழலை கிராமத்தில் கிளை அஞ்சலக அலுவலராக வேலை செய்யறேன்!'' என்கிறார் எஸ். ரகு நாதன். அந்தக் காலத்திலேயே வாய்ப்பாட் டில் கலியுக தியாகப்பிரம்மம் எனப் புகழப்பட்டவர் திருவீழிமிழலை ஏ.ஆர். எஸ்.கல்யாணசுந்தரம் பிள்ளை. அவ ரது மகன் வாய்ப்பாட்டுக் கலைஞரா? நாதஸ்வரக் கலைஞரா? இல்லை. உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய வரும், தற்போது தனியார் நர்சரி மெட்ரிக் பள்ளி களின் கட்டணச் சீரமைப் புக் கமிட்டியின் தலை வருமான நீதிபதி ரவி ராஜ பாண்டியன்தான் அவரது மகன்.



இஞ்சிக்குடி சுப்ரமணியன்

''எங்க முன்னோர்கள் யாருக்கும் நாதஸ்வரத் தொடர்பு கிடையாது. பதி மூணு வயசுல குருகுல வாசம் போனேன். உள் நாடு, வெளிநாடு என நாதஸ்வரம் வாசிக்கப் பறந்துகிட்டு இருக்கேன். மலேசியா, கனடா போன்ற நாடுகளில் மாறி மாறி தொடர்ந்து பத்தாண்டுகள்

தங்கியிருந்து நாதஸ்வரம் வாசித்துள்ளேன்!'' என்கிறார் திருவீழிமிழலை டி.எம். பார்த்திபன். பிறந்த மண்ணின் சங்கீத மணத்தை சுவாசித்து வளர்ந்த தன் பயன்.


* ஏ.ஆர்.எஸ்.

“திருப்பாம்புரம் சகோதரர்கள் என்கிற அடைமொழியோடு கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக நாதஸ்வரம் வாசித்து வர்றோம். 1800கள்ல எங்க முப்பாட்டனார் நடராஜ சுந்தரம் பிள்ளை, சிவசுப்பிரமணிய பிள்ளை (அவரது தம்பி) இருவரும் இணைந்து நாதஸ்வரம் வாசித்து வந்துள்ளனர். நாதஸ்வர உலகில் 'இரட்டை நாதஸ்வரம்' என்கிற பாணியைத் தொடங்கி வைத்தவர்கள் இவர்கள். எங்கள் பூர்வீகம் திருப்பாம்புரம், பூந்தோட்டம் பக்கத்துல திருமீயெச்சூர். லலிதா சகஸ்ர நாமம் அரங்கேற்றிய லலிதாம்பிகை க்ஷேத்திரம் இது. அதனாலேயே இந்த மண்ணை விட்டு வேறு ஊருக்குக் குடிபெயராமல் இருக்கிறோம்!'' என்கின்றனர் திருப்பாம்புரம் சகோதரர்களான டி.கே.எஸ்.சுவாமிநாதன், டி.கே.எஸ். மீனாட்சிசுந்தரம். நாதஸ்வரம் வாசிப்பில் இவர்கள் ஏழாவது தலைமுறை.



திருவீழிமிழலை, திருப்பாம்புரம், இஞ்சிக்குடி, கீரனூர், திருமருகல், குளிக்கரை, திருவாவடுதுறை இன்னும் பலப்பல நாதஸ்வர கிராமங்கள் ஒரே வரிசையில் அடுத்தடுத்து அமைந்திருப்பது உலக அளவிலான அதிசயமாகவே தோன்றுகிறது. இங்கிருந்து கிளம்பிச் சென்றுள்ள நாதஸ்வரக் கலைஞர்கள்தான் உலகம் முழுவதுமாக நாதஸ்வரக் கலைஞர்களை உருவாக்கி வருகின்றனர்.

“ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டக் கிராமங்களில் நாதஸ்வரக் கலைஞர்கள் அதிகமாக உருவாகக் காரணமே, இங்குதான் கோயில்கள் மிக மிக அதிகம். 'கோயில் சேவகம்' என்கிற பெயரில் ஒவ்வொரு கோயிலுக்கும் கட்டாயம் ஒரு நாதஸ்வரக் கலைஞர் அமர்த்தப்பட்டிருப்பார். என்னோட முன்னோர்கள் 'கோயில் சேவகம்' ஆக இருந்து, நாதஸ்வர இசை வளர்த்தவர்களே. அந்தக் காலத்தில் 'நாதஸ்வர கலையை' மட்டுமே 'பெரும் சொத்தாக' எண்ணியிருந்தனர். பிற்காலத்தில் வந்த வர்கள், முன்னோர்கள் சேர்த்து வைத்து விட்டுப்போன வயல் மற்றும் வீடு போன்றவற்றை 'பெரும் சொத்தாகக்' கருதி வாழத் தொடங்கினர். அதனாலேயே இடைப்பட்ட காலத்தில் வாரிசுகள் பலரும் வெவ்வேறு தொழில் மற்றும் பணி நிமித்தமாக தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர். இருந்த போதிலும் வழிவழி வாரிசுக் கலைஞர்களாலும், புதிதாகக் கற்றுக்கொள்ளும் கலைஞர்களாலும் நாதஸ்வரக் கிராமங்கள் இன்னமும் உயிர்ப்புடன்தான் இருக்கு'' என்கிற இஞ்சிக்குடி இ.எம்.சுப்பிரமணியன், நாதஸ்வர வாசிப்பில் இருபதாவது தலை முறை!


* டி.எம்.பார்த்திபன்

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



ஜே.எஸ். ராகவன்

- அந்தக் காலத்தில் பாடகர்கள் ராகத்தை அடகு வைப்பார்களாம்.

  மோகனத்தால் money கிடைத்திருக்காது. அதில் ம...நி... ஸ்வரம் கிடையாதே!

- கச்சேரி நடுவில் நீளமாகப் பேசும் பாடகருக்குத் தரவேண்டிய விருது?

  சப்த ஸ்வர பிரசங்க பூபதி

- அரியக்குடி, கச்சேரியின் இடையே ஏழெட்டு தடவை பொடி போடு வாராம்..

  அதைவிட அதிகமாக அதிரடித் தும்மல் போடும் ரசிகர்கள் பலர் உள்ளனர்.

- ஃப்ரூட் மாலிக்கு அல்ஜீப்ராவில் மிகுந்த ஈடுபாடு உண்டாம்.

  அட! அதையும் அநாயாசமாக ஊதித் தள்ளினாரா?

- சாகித்யங்களைப் பார்த்துப் பார்த்து

- டி.எம். கிருஷ்ணா இந்த சீஸனில் பாடப் போவதில்லையாம்.

  'கிருஷ்ணா!...இடம்தா!முராரே!' என்று ஜூனியர்கள் பாடி வேண்டினார்களா?

- சீஸனில் 100 சபாக்களில் 3000 கச்சேரிகள் நடைபெறுகிறதாம்.

  காலி இருக்கைகள் எவ்வளவு இடம்பெறும்?



டமால் டுமீல்

சீஸன் ஸ்பெஷல்



சிலர் பாடுவதால் சர்ச்சை.

இவர்களுக்கு சுருதி மாதா, மறதி பிதா போலிருக்கு.

- இசை மேதை பாலமுரளி வயலின், வியோலா கூட வாசிப்பாராம்.

  ஆனால் பள்ளியில்தான் வாசித்தது இல்லை.

- சீஸனில் பாட சிலர் சபாக்களுக்குப் பணம் தருகிறார்கள்.

  சபா மேடை அட்மிஷனுக்கும் காபி டேஷன் ஃபீ போலிருக்கு.

- கா...வா...வாவின் ராகமான வராளியைச் சொல்லிக் கொடுத்தால் குரு-சிஷ்ய உறவில் விரிசல் வருமாம்.

  'கா' விட்டுக்குவார்களா?

- நீண்ட கூந்தலை உடைய பாடகி வர்தினி, காமவர்தினி, சாருவர்தினிக்குப் பிறகு எந்த ராகம் பாடலாம்?

  கேசவர்தினி



உயிருக்கு இனிமையானவள்

பரேஷ், சிக்னலுக்காக இனோவா காரில் காத்துக்கொண்டிருந்தவன், கேட் திறந்ததும் டிரக்கைத் தாண்டி மெயின் ரோட்டின் மீது வண்டியைத் திருப்பினான். ரோட்டின் ஓரமாக நடந்து போய்க்கொண்டிருந்த வயதான பாட்டியின் மீது அவனோட கார் உரச, பாட்டி அலறலோடு கீழே விழுந்தாள். பரேஷ், அதனைப் பொருட்படுத்தாமல் காரின் வேகத்தை அதிகரித்தான். அப்போது அவனோட செல்ஃபோன் சிணுங்கியது. எடுத்துப் பேசினான்.

''ஹாய் பரேஷ் எப்படி இருக்கீங்க?''

மறுமுனையில் பரிச்சயமில்லாத பெண் குரல்.

''யார் பேசறது?''

''நான் யாருங்கிறதை அப்புறமா சொல்றேன். இன்னிக்கு நீங்க அணிந்திருக்கும் ட்ரஸ் சூப்பரா இருக்கு. கார் ஓட்டும் ஸ்டைல் அதைவிட சூப்பர்!'' என்று பாராட்டினாள்.

பரேஷுக்கு இனம்புரியாத சலனம்.

''தேங்க்யூ'' என்றான்.

''ஒரு சின்ன வருத்தம் பரேஷ்!''

''என்ன?''

''உங்க கார் உரசினதால் ஒரு வயதான பாட்டி கீழே விழுந்துட்டாங்க. அவங்க கிட்டே ஒரு ஸாரிகூட சொல்லாமல் போயிட்டீங்களே!''

பரேஷ், காரை சடன் பிரேக் போட்டு நிறுத்தினான். அந்தப் பெண் யாரென்று பார்க்கும் ஆர்வத்தில் காரைத் திருப்பிக் கொண்டு, அந்த இடத்துக்கு வந்தான். ஆனால், அங்கே அந்தப் பாட்டி மட்டும் தான் இருந்தாள்.

''பாட்டியம்மா என்னோட கார் உங்க மேல தெரியாமல் உரசிடுச்சு. மன்னிச்சுக் கோங்க. அடி எதுவும் படலையே?''

''இல்லை தம்பி. நீ மன்னிப்பு கேட்டதே எனக்குப் போதும்!''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இங்கே ஒரு பொண்ணு இருந்தாளா?''

''கீழே விழுந்துகிடந்த என்னை ஒரு பொண்ணுதான் தூக்கிவிட்டு உதவுச்சு!''

''யார் அந்தப் பொண்ணு? எப்படி இருந்தாள்?''

''அந்தப் பொண்ணு யாருங்கிறது எல்லாம் எனக்குத் தெரியாது. ஆனா மகா லெட்சுமி மாதிரி இருந்தாப்பா!''

மறுநாள் நண்பர்களின் கட்டாயத்தின் பெயரில் பரேஷ் எலெக்டிரிக் டிரெயினில் காலேஜுக்குச் சென்றான். கும்மாளம் அடித்துக்கொண்டு டிரெயினை ஒரு வழி பண்ணிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். ஸ்டேஷன் வந்ததும் பரேஷ் தம் கேசத்தைக் கோதிவிட்டபடி டிரெயினிலிருந்து குதித்தான்.

சட்டை போடாமல் அழுக்கேறிய சிறுவன் ஒருவன், பரேஷைத் தொட்டு, ''சார் எதாச்சும் போடுங்க சார்!'' என்று கேட்டான்.

அழுக்கேறிய பிச்சைக்காரன் தம்மைத் தொட்டுவிட்டானே என்ற ஆத்திரம் அவனுக்குத் தலைக்கேறியது. மூர்க்கமாக அந்தச் சிறுவனைப் பிடித்துக் கீழே தள்ளினான். கீழே விழுந்த சிறுவன் பயந்து போய் எழுந்து ஓடினான். அந்நேரம் பரேஷின் மொபைல் சிணுங்கியது. எடுத்து ''ஹலோ'' என்றான்.

''ஹாய் பரேஷ்! குட்மார்னிங்!''

அந்த முகம் தெரியாத பெண்தான் பேசினாள். அவளின் குரலைக் கேட்டதும், அவன் கோபமும் ஆவேசமும் அடங்கிப்போயின.

''பரேஷ், நீங்க டிரெயினை விட்டுக் கீழே இறங்கும்போது தலைகேசத்தைக் கோதி விட்டுக்கிட்டீங்களே அந்த ஸ்டைல்

அனிதா குமார்



நல்லாயிருந்தது.''

''ஏய்... ப்ளீஸ் யாரு நீ? நான் பண்ற விஷயத்தையெல்லாம் எங்கேயிருந்து கவனிச்சிகிட்டு வர்றே?''

'' இதே பிளாட்ஃபாரத்திலிருந்து! எனக்காக ஒண்ணு செய்வீங்களா''

''சொல்லுடா!''

''பிச்சைக்காரச் சிறுவனைப் பிடிச்சு கீழே தள்ளிவிட்டுட்டீங்களே. ஒரு பத்தோ இருபதோ கொடுத்தனுப்பியிருந்தால் அந்தப் பிஞ்சோட வயிறு நிரம்பியிருக்குமே!''

''பிச்சை எடுப்பதை என்கரேஜ் பண்ணக் கூடாது.''

''டிஃபன் வாங்கிக் கொடுத்து உதவியிருக்கலாமே. அந்தப் பிஞ்சோட வயிறு எத்தனை நாளா காய்ஞ்சுகப் போய்

கிடந்ததோ.''

அவள் கூறியது அவன் மனத்தைத் தொட்டது. தொலைவில் சென்று கொண்டிருந்த அந்தச் சிறுவனிடம் ஓடிவந்தான்.

''ஸாரிடா. அங்கிள் உன்னைத் தெரியாம அடிச்சுட்டேன்!'' என்று அவனது தலையை வருடிவிட்டான். நான்கு இட்லிகளையும் வாங்கிக் கொடுத்தான் பரேஷ். பிறகு அந்தப் பெண்ணின் நம்பருக்கு ட்ரை பண்ணினான். ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது.

கல்லூரியில் அன்று முழுவதும் அவன் கவனம் செல்லவில்லை. யார் அவள்? அவள் யார் என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் அதிகமானது. அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நான் அப்படி நடந்துகொண்டால் நிச்சயம் என் கண் முன்னால் வந்து நிற்பாள்.

மாலை அருகிருக்கும் அனாதை ஆசிரமத்துக்குச் சென்றான். காப்பகத்தின் தலைவி அவனை அடையாளம் கண்டு கொண்டு வரவேற்றார்.

''இங்கிருக்கும் குழந்தைகளின் படிப்புக்கான செலவுகளை என்னால் முடிஞ்ச வரைக்கும் உதவி செய்கிறேன்'' என்றான் பரேஷ்.

காப்பகத்தின் தலைவி சந்தோஷத்துடன் ''நன்றி தம்பி'' என்றார். பரேஷ் குழந்தைகள் காப்பகத்தை விட்டு வெளியே வந்தபோது அவனுடைய முதுகுக்குப் பின்னாலிருந்து ''எக்ஸ்யூஸ் மீ'' என்று ஒரு பெண்ணின் குரல் வந்தது. பரேஷ் திரும்பிப் பார்த்தான். ஒரு பெண் புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தாள்.

''நீ... நீ...''

''நான்தான் உங்க செல்ஃபோன் ஸ்நேகிதி. பெயர் எழில்!''

''உன்னைப் போலவே உன் பெயரும் ரொம்ப அழகாயிருக்கு. என்னோட நம்பர் உனக்கெப்படி?''

''ஒரே காலேஜில் படிக்கிற ஸ்டூடண்ட் நம்பரைக் கண்டுபிடிக்கிறது கஷ்டம் கிடையாது.''

''நீ என்னோட காலேஜிலா படிக்கிறே?'' ஆச்சரியமாகக் கேட்டான்.

''யெஸ். நான் ஃபர்ஸ்ட் இயர் ஸ்டூடண்ட். நீங்க ஃபைனல் இயர்!''

பரேஷுக்கு அவளை மிகவும் பிடித்துப்போனது.

''உன்னை மறுபடியும் எப்போ சந்திக்கிறது?''

''எங்க வீட்டில்!''

''உங்க வீட்டிலா''





''ம். பொண்ணு கேட்டு வாங்க. நாம ரெண்டு பேரும் புறாக்களைப் போல சந்தோஷமாக வாழணும் பரேஷ்!''

பரேஷ் அவளிடம் விடைபெற்றுவிட்டு சந்தோஷத்துடன் கிளம்பினான். அவன் சென்ற பிறகு அவள் உள்ளங்கையில் இறுக்கிப் பிடித்திருந்த கைக்குட்டையைப் பிரித்துப் பார்த்தாள். கர்ச்சீப் முழுவதும் ரத்தக் கறை படிந்திருந்தது.

அமைச்சர் செழியன் அவர் அலுவலகத்தில் பிஸியாக இருந்தார். அன்றைய தினத்தில் அவருக்கு வரிசையாக இருக்கும் வேலைகளைப் பற்றி அவர் பி.ஏ. சொல்லிக்கொண்டிருந்தார். பரேஷ், அவர் அலுவலகத்துக்குச் சென்று எழிலைப் பற்றிக் கூறினான். மறுநாள் எழிலின் வீட்டுக்குச் செழியன் அவரது மனைவி, பரேஷ் மூன்று பேரும் எழிலைப் பார்ப்பதற்காகச் சென்றார்கள்.

எழிலின் வீட்டின் முன்பு ஷாமியானா



பந்தல் போடப்பட்டிருந்தது. நிறைய பிளாஸ்டிக் சேர்கள் போடப்பட்டிருந்தன. அனைவரும் சோகம் அப்பிய முகத்தோடு அமர்ந்திருந்தார்கள். பெண்களின் அழுகுரல் சப்தம் உள்ளேயிருந்து வந்தது. யார் இறந்துவிட்டார்கள்? பரேஷ் தயக்கமாய் உள்ளே சென்றான்.

நடு ஹாலில் வைக்கப்பட்டிருந்த ஐஸ் பாக்ஸில் எழில் சடலமாகப் படுத்திருந்தாள். பரேஷ் பேரதிர்ச்சியுடன் அவள் சடலத்தையே வெறித்துப் பார்த்தான்.

நான்தான் உங்க செல்ஃபோன் ஸ்நேகிதி. பெயர் எழில்!

சப்தநாடி நரம்புகளும் சில்லிட்டுப் போனது.

"என்னாச்சு? எப்படி இறந்தாள்?"

"அவளுக்கு ப்ளட் கேன்சர். எத்தனையோ டாக்டரிடம் காண்பிச்சிட்டோம். அவளைக் குணப்படுத்த முடியலை." எழிலின் அம்மா ஓர் உறவுக்காரரிடம் சொல்லி அழுதுகொண்டிருந்தாள்.

அடுத்த பத்து நாட்கள் பரேஷ் கல்லூரிக்குச் செல்லவில்லை. எழிலின் நினைவால் வாடினான். அவன் அறையிலேயே முடங்கிக் கிடந்தவனிடம் அவன் அம்மாதான் ஆறுதல் சொன்னாள்.

"இப்படி அழுதுகிட்டே இருந்தால் போனவ திரும்பியா வரப்போறா. அவளை எப்படியாவது மறக்க முயற்சி பண்ணுப்பா!"

மறுநாள் பரேஷுக்கு ஒரு கடிதம் வந்தது. எழில் அவனுக்கு எழுதிய கடிதம்.

"டியர் பரேஷ்! எப்படி இருக்கீங்க? நீங்க இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது, நான் உயிரோடு இருக்கமாட்டேன். நான் இல்லாத இந்த வாழ்க்கை எப்படி இருக்கிறது பரேஷ்? என் குரலைக் கேட்டுவிட மாட்டோமா? என்கூட பேசிவிட மாட்டோமா? என்னை எப்படியாவது ஒருமுறை பார்த்துவிட மாட்டோமாங்கிற ஏக்கத்தில் பாதி பைத்தியக்காரனாகிவிட்டீர்கள். நெருக்கமான ஒருத்தரோட மரணம் ஏற்படுத்தும் வேதனையை இப்போது உணருகிறீர்களா? இந்த மரண வேதனையைத்தான் நானும் என் பெற்றோரும் என் அண்ணனை இழந்து தவித்தோம். குழப்பமாயிருக்கிறதா? இரண்டு வருடங்களுக்கு முன்பு என் அண்ணன் கார்த்திக்கை நீங்க கொன்றுவிட்டீர்கள். பேரதிர்ச்சியாக உள்ளதா? என் அண்ணன் கார்த்திக் ஆயிரம் கனவுகளோடு பொறியியல் கல்லூரியில் சேர்ந்தான். சீனியர் மாணவனான நீங்கள் என் அண்ணனை அரை நிர்வாணமாக நிற்கச் சொல்லி, ராகிங் பண்ணீங்க. என் அண்ணன் பண்ணமாட்டேனு பிடிவாதமாக மறுக்க, நீங்க ஆத்திரப்பட்டு தாறுமாறா அவனை அடிச்சிட்டீங்க. அவமானம் தாங்காமல் தூக்கில் தொங்கினான்.

அமைச்சரின் மகன் என்பதால் பவரை யூஸ் பண்ணி எந்தச் சிக்கலிலும் நீங்க மாட்டிக்கொள்ளவில்லை. ஓர் உயிரோட மதிப்பும், அதன் இழப்பின் வேதனையும் உங்களுக்குப் புரியவில்லை. நீங்க உணரணும். மனிதாபிமானமுள்ள மனுஷனாக மாறணும்னு நினைச்சேன். என் காதல் உண்மையானது. என்றும் உங்கள் இதயத்தில் குடியிருக்கும் எழில்."

இதயம் உடைந்து கண்ணீர்விட்டு கதறி அழுதான் பரேஷ்.

✱



என்னைப் புரட்டிப் போட்ட கச்சேரி!

"அண்மையில் நான் மாற்றுத் திறனாளியான வித்வான் கோவை கிருஷ்ணமூர்த்தியின் கச்சேரிக்குப் போயிருந்தேன்" என்கிறார் நடிகர் - இயக்குனர் பார்த்திபன். அபாரமான ஞானம் கொண்டவரான அவரது கச் சேரியை நான் ரசித்ததுடன், வரும்போது ஒரு டன் தன்னம்பிக்கையையும் சேர்த்து எடுத்துக்கொண்டு வந்தேன். கச்சேரிக்கு இடையில் அவர் ஒரு கப் காஃபி சாப்பிடவேண்டுமென்றாலும், காஃபி குடித்த வாயைத் துடைத்து விடவும் இன்னொருவரது உதவி வேண்டும்; ஆனால் அவர் இசை மழை பொழிவதற்கு யாருடைய உதவியும் அவசியமில்லை. அந்தக் கச்சேரிக்குப் போனது, பலவிதமான தோல்வி களைச் சந்தித்த எனது சிந் தனையைப் புரட்டிப் போட்டு விட்டது.

என் மகனையும், மக ளையும் இசை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஏ.ஆர்.ரஹ்மானின் இசைப்பள்ளியில் சேர்த்திருக்கிறேன். அங்கே அவர்கள் பல விதமான இசைகளைக் கற்றுக் கொள்கிறார்கள். இசை பற்றித் தெரியாத நான், இசையில் ஏதோ பெரிய ஆள் மாதிரி என் குழந்தைகளைக் கலாய்ப்பதும், அவர்கள் என்னைக்



கோவை கிருஷ்ணமூர்த்தி


கலாய்ப்பதும் நான் மிகவும் ரசிக்கும் காமெடி.

தொழில் நிமித்தமாக அமெரிக்கா சென்ற நம் ஊர்க்காரர்கள் ஏராளமாகச் சம்பாதித்தாலும், மனசுக்குப் பிடிச்ச விஷயத்தை (இசை) ரசிக்க டிசம்பரில் லீவு எடுத்துக் கொண்டு இங்கே வருகிறார்கள். அதைப் பார்க்கிறபோது எனக்குப் பிடிச்ச விஷயமே (சினிமா) என் தொழிலாக அமைவதற்கு நான் எவ்வளவு கொடுத்து வைத்தவனாக இருக்கணும்?'' என்று நெகிழ்கிறார் பார்த்திபன்.



''சமீபத்தில் ஜி.என்.பி. பாடிய சினிமா பாட்டு ஒன்றைக் கேட்டேன். அதை சினிமா பாட்டு என்றே சொல்ல முடியாது. பக்காவான கர்நாடக கிருதிக்கு இணையானது. அதைத் திரும்பத் திரும்பக் கேட்டு ரசித்தேன்'' என்று சொல்லிவிட்டு, ஐபாட்டில் அந்தப் பாட்டை ஒலிக்கச் செய்து, தானும் கூடவே ரசித்துப் பாடினார் ராஜீவ் மேனன்.

''நான் ஏராளமான கச்சேரிகளையும் கேட்டு ரசித்திருக்கிறேன் என்றாலும், மறக்க முடியாத கச்சேரிகள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனால் கச்சேரிகளில் என்னை மிகவும் மெய் மறக்க வைத்த, நெகிழச் செய்த தருணங்கள் பல உண்டு. ஒரு மழைக்கால மாலைப் பொழுதில், மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கச்சேரியில் பாலமுரளி கிருஷ்ணா பாடின ஜாவளியை என்னால் மறக்கவே முடியாது. அதற்கப்புறம் அதுபோல ஜாவளியை நான் கேட்கவில்லை. ஒரு மியூசிக் அகாடமி கச்சேரியில் செம்மங்குடி பாடின ஸ்வரம். வாவ்! ஃபென்டாஸ்டிக்! அன்றைக்குக் காதும், மனசும் நிறைஞ்சு இருந்தது! இவ்வளவு வயசில் அவருக்கு இத்தனை எனர்ஜியா? என்று வியந்து போனேன். அதேபோல சஞ்சய் பாடின நாட்டை குறிஞ்சி, கிருஷ்ண கான சபாவில் கே.வி.என். இப்படி ஒரு பட்டியலே சொல்லலாம்.''







உறவுகள் தொடர்கதை...
உணர்வுகள் சிறுகதை...
ஒரு கதை இங்கு
முடியலாம்,
முடிவிலும் ஒன்று
தொடங்கலாம்...
இனி எல்லாம் சுகமே..!

வசீகரத் காதோரக்

பாம்பே ஜெயஸ்ரீயின் 'வசீகரா'வின் வசீகரத் துடிப்பும் வசீகரிக்கும்; ஸ்ரீனிவாசின் 'அழகே சுகமா...?' என்ற காதோரக் குழைவும் பிடிக்கும்; டி.எம்.எஸ்ஸின் 'எங்கே நிம்மதி...?'யில் தவிக்கவும், பி.பி.எஸ்ஸின் 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்' என்ற சில்க் குரலில் சிலிர்க்கவும் பிடிக்கும்...!

ஆனால், 'வெண்ணிற ஆடை' படத்தில் வரும்... ''கண்ணன் என்னும் மன்னன் பேரைச் சொல்ல சொல்ல...'' பாடல் மட்டும் அன்றும் இன்றும் மனத்துக்குள் 'ஜோ' வெனக் கொட்டும் மலையருவியின் வீச்சுப் போல சலசலக்க வைக்கும்.

இந்தப் பாடல் முழுக்க, 'ளகர'மும், 'ல'கரமும், 'ன'கரமும்... துள்ளித் துள்ளி வரும்! பாடலின் சொற்கட்டு... 'ஜதி' வரிசை போல... தாளம் போட வைக்கும். இசையின் லயமோ... எழுந்தே ஆட்டம் போட வைக்கும்.

இந்தப் பாடலை வெறுமனே கண்ணை மூடிக்கொண்டு கேட்டாலும் குளுமை! பாடல் காட்சியைப் பார்த்துக் கொண்டே கேட்டாலும் குளுமை!

- ஜே.சி.ஜெரினா காந்த், சென்னை-16

எனக்குப் பிடித்த பாடல்!

படு பாஸிட்டிவ்வான, ஆழ்மனத்தைக் கொள்ளை கொள்ளும் அற்புதமான பாட்டு இது. ஏதாவது மனத்தில் வேதனைகள் எழுந்தால் இந்தப் பாட்டைக் கேட்க மனம் தம்மையறியாமல் ரிலாக்ஸ் ஆகிவிடும். உருகி உருகிப் பாடியிருப்பார் ஜேசுதாஸ். படத்தில் அதற்கு அருமையாய் வாயசைத்திருப்பார் சிவச்சந்திரன். படம்: 'அவள் அப்படித்தான்.'

- ஆதிரை வேணு கோபால், சென்னை - 94



'**எ**ந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று' என்ற பாடலை முதன் முறையாகக் கேட்கின்ற ஒருவருக்கு 'சீ' இந்தக் கவிஞன் ரொம்ப மோசமானவன் என்று தோன்றும்.

'அது ஏதோ உன்னிடம் இருக்கிறது - அதை அறியாமல் விடமாட்டேன்' என்ற அடுத்தடுத்த வரிகள் இன்னும் கோபமூட்டும். ஆனால் அடுத்த அடியில்

'அதுவரை உன்னைத் தொடமாட்டேன்' என்று கூறியிருப்பதில்தான் கவிஞன் நிற்கிறான்.

ஒவ்வொரு வார்த்தை
முடியும் போதும்
புன்னகை செய்வாய்
அதுவா? அதுவா? அதுவா?
ஓரிரு வார்த்தை தப்பாய்ப்போனால்
உதடு கடிப்பாய்
அதுவா? அதுவா? அதுவா?

என பாடல் முழுவதும் மிகவும் சுவாரஸ்யமாய் போய்க்கொண்டிருக்கும். காதலன், காதலியைப் பாடுவதாக அமைந்துள்ளது.

- முனைவர் க.சிவப்பிரியா, கிருட்டிணகிரி



துடிப்பும்... குழைவும்!


வாசகர்களே! உங்களுக்குப் பிடித்தமான பாடல் என்னவென்று...
10 வரி கமெண்ட்டுடன் எங்களுக்கு எழுதி அனுப்புங்க... kalki@kalkiweekly -க்கும் அனுப்புங்க.

"**ஒ**வ்வொரு பூக்களுமே சொல்கிறதே வாழ்வென்றால் போராடும் போர்க்களமே" எவ்வளவு நிதர்சனமான உண்மை. இந்தப் பாடலின் ஒவ்வொரு வரிகளுமே வாழ்க்கையின் உண்மை நிலையினை உணர்த்துபவை. ''உளி தாங்கும் கற்கள்தானே மண் மீது சிலையாகும், வலி தாங்கும் உள்ளம்தானே நிலையான சுகம் காணும்'' வாழ்வில் பல வலிகளையும், இடிகளையும் சந்தித்து வரும் என் போன்ற பெண்களுக்கு நிலையான சுகம் ஒரு நாள் வரும் என்ற நம்பிக்கையூட்டும் இந்த வரிகளைக் கேட்கும் போதெல்லாம் புதிதாகப் பிறக்கிறேன். 'ஒரு கனவிருந்தால் அதில் நினைவிருந்தால் ஒரு நாளில் நனவாகும்' என்ற நம்பிக்கை கனவுகளுடன் காத்திருக்கிறேன்.

- என்.கவிதா, கும்பகோணம்



தனிமையிலே 'இனிமை' காணமுடியுமா?



ஞாநி

ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 356 கோடி ரூபாய் முறைகேட்டை ஆ.ராசாவால் தனியாகச் செய்திருக்க முடியாது என்றுதான் நான் நினைக்கிறேன். முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியும் அப்படித்தான் நினைக்கிறார் என்று இப்போது தெரியவந்திருப்பது எனக்குப் புல்லரிக்கிறது. இப்படி ஓர் ஒப்புதல் வாக்குமூலத்தை இதற்கு முன்பு யாரும் கொடுத்ததில்லை.

'இளைஞன்' பட விழாவில் பேசிய கருணாநிதி, ஊமைப்படக் காலத்தில் பகாசுரன் வதைக் காட்சிகளை தாம் பார்த்தபோது எப்படி அசுரனைப் பற்றி மிகைப்படுத்தப்பட்ட வர்ணனைகள் சொல்லப்பட்டன என்று விவரித்துவிட்டு, அதேபோல ஒரு தனி நபர் ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 356 கோடி ரூபாய்களைத் தனியாக அபகரித்திருக்க முடியுமா என்று சிந்திக்காமல், படித்தவர்களும் நம்புகிறார்களே என்று கேட்டிருக்கிறார்.

அடுத்தபடி அவர் சொன்னதைத்தான் ஆங்கிலத்தில் உளவியலில் ஃப்ராய்டியன் ஸ்லிப் என்பார்கள். தன்னையறியாமலே அடிமனத்தில் இருக்கும் உண்மையை உளறிவிடுவதுதான் அது. ''எதை வேண்டுமானாலும் சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு ஒரு மனிதன் அந்தக் காரியத்தைச் செய்கிறான் என்றால் அவன் விஞ்ஞான ரீதியாகத்தான் செய்யமுடியும். 'எந்திரன்' படத்தில் ரஜினி எப்படி ரோபோவாக வந்து இந்தக் காரியங்களைச் செய்கிறாரோ, அதைப்போல செய்ய முடியுமே தவிர, தனியாக ஒரு மனிதன் அப்படிச் செய்யமுடியாது என்பதை அறிவுபூர்வமாக இன்றைக்கு உணர்கிறோம்,'' என்கிறார் கருணாநிதி!

புராண பகாசுரன் வேலைகளை இன்று விஞ்ஞான பூர்வமாகச் செய்ய முடியும் என்று கருணாநிதி சொன்னால், சரியாகத்தான் இருக்கும். ஏனென்றால்




ஓ பக்கங்கள்

விஞ்ஞானபூர்வமாக ஊழல்கள் செய்பவர் என்று 35 வருடங்களுக்கு முன்பே நீதிபதி சர்க்காரியாவால் வர்ணிக்கப்பட்டவர் அவர்!

ராசாவோடு ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யாராக இருக்கும் என்று யூகிக்கும் வசதியை, நமக்கு நீரா ராடியா டேப்கள் அளிக்கின்றன. அவற்றைப் பற்றி ஒருபோதும் கருணாநிதி ஒரு வார்த்தை கூட சொல்லப்போவதே இல்லை.

தி.மு.க. சம்பந்தப்பட்ட முறைகேடு ஸ்பெக்ட்ரம் என்பது மட்டும் அல்ல. பல





ஊழல்களில் அது ஒன்று. மிகப் பெரும் தொகைகளும், மிகப் பெரிய சூழ்ச்சிகளும் சம்பந்தப்பட்டிருப்பதால் அதைப் பற்றி அதிகம் பேசுகிறோம்.

ஆ.ராசாவும் டி.ஆர்.பாலுவும் தொடர்புடைய இன்னொரு மிகப் பெரும் முறைகேட்டினை தெஹல்கா இதழ் அம்பலப்படுத்தியிருக்கிறது. ராசா டெலிகாம் அமைச்சராவதற்கு முன்பு சுற்றுச் சூழல் அமைச்சராக இருந்தார். அவருக்கு முன்பு அந்தப் பொறுப்பில் பாலு இருந்தார். இருவர் கீழுமாக ஏழு வருடங்கள் அந்த அமைச்சகம் இருந்திருக்கிறது.


புதிய தொழில் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் வரும்போது அவற்றால் ஏற்படக்கூடிய சுற்றுச் சூழல் பாதிப்பு பற்றி மதிப்பிட்டுவிட்டு அனுமதி தருவதும்/மறுப்பதும் அமைச்சகத்தின் முக்கியப் பணிகளில் ஒன்று. அதற்கு முன்பு 20 வருடங்களில் நான்காயிரம் தொழில் திட்டங்களுக்கு அனுமதி தரப்பட்டது.ஆனால் பாலு, ராசா இருந்த சமயத்தில் மாதம் 100 திட்டங்களுக்கு க்ளியரன்ஸ்...! இரண்டே வருடங்களில் 2000 திட்டங்களுக்கு ஒப்புதல்.

ராசாவின் தனிச் செயலாளராக இருந்து இப்போது விசாரிக்கப்படும் ஆர்.கே.சந்தோலியா, முதலில் அவருடன் சுற்றுச் சூழல் துறையில் இருந்தவர். ராசா- நீரா ராடியா நட்பு அப்போதுதான் ஆரம்பம். நாட்டின் இன்னொரு மூலையில் இருக்கும் ராசாத்தி அம்மாள், அவர் ஆடிட்டர் ரத்தினம் ஆகியோரின் நட்பு எல்லாம் ராடியாவுக்கு ஏற்படுவதற்கான வித்து, சுற்றுச் சூழல் துறையில் தொடங்குகிறது.

பாலு-ராசா ஆட்சியில் சுற்றுச் சூழல் பாதிப்பு அறிக்கைகள் தருவதில் பெரும் முறைகேடுகள் நடந்திருப்பதாக சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் கூறுகின்றன. சூழல் பாதுகாப்பை மதிப்பிடுவதற்கான குழு உறுப்பினர்களாக, தமிழ்நாட்டிலிருந்து தமக்கு வேண்டியவர்களையே ராசா நியமித்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

பாலு காலத்தில் ஒவ்வொரு தொழிலுக்கும் நடத்தைக் கோட்பாடுகள் வகுக்கப்பட்டன. இவற்றை வகுப்பதில் தொழில் அதிபர்களுக்குச் சாதகமாக, பல முறைகேடுகளை பாலு செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. நடத்தைக் கோட்பாட்டை மீறினால் தண்டனை எதுவும் இல்லை. அது

சுயக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு அவ்வளவுதான். ஸ்பெக்ட்ரம் முறைகேட்டை விடப் பல மடங்கு அதிகமான பாதிப்பை சுற்றுச்சூழல் துறையில் நாட்டுக்கு தி.மு.க அமைச்சர்கள் ஏற்படுத்தியிருப்பதாக தெஹல்கா குற்றம் சாட்டியிருக்கிறது.



மன்மோகன்சிங் இரண்டாம் முறை பிரதமரானபோது பாலு, ராசா இருவரையும் அமைச்சரவையில் சேர்க்க விரும்பவில்லை என்று கூறப்பட்டது. இது தயாநிதி மாறனின் விஷமப் பிரசாரம் என்று நீரா ராடியாவிடம் கனிமொழி சொல்கிறார். மாறனையும் பாலுவையும்தான் மன்மோகன் விரும்பவில்லை என்பது அவர் தரப்பு வாதம்.

ஆனால் பிரதமர் மன்மோகன்சிங்கால் எதுவும் செய்ய முடியவில்லை. அவரால் அதிகபட்சம் செய்ய முடிந்ததெல்லாம் பாலுவை அடுத்த முறை அமைச்சரவையில் சேர்க்காமல் விட்டதுதான். ராசா ஒரு வழியாக விலகியதும் அந்தத் துறையை எந்த தி.மு.க. காரரிடமும் ஒப்படைக்காமல் தம் கட்சிக்காரரிடமே கொடுக்க முடிந்ததுதான்.

காங்கிரசும் தி.மு.க.வும் கூட்டணியில் இருந்தாலும், காங்கிரசால் தன் முதலமைச்சர் மீது நடவடிக்கை எடுப்பது போல, தி.மு.க அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. காரணம் கருணாநிதி சொன்னதாகத்தான் இருக்க முடியும். ''யாரும் தனி மனிதனாக அவ்வளவு பெரிய தொகையை எல்லாம் அபகரித்துவிட முடியாது'' என்பது எவ்வளவு ஆழ்ந்த அனுபவத்தின் விளைவாக உதிர்ந்த பொன்மொழியாக இருக்க வேண்டும்! இந்தப் பகுத்தறிவு முடிவிலிருந்துதான் கூட்டணி தர்மம் என்ற கோட்பாடே உருவாகியிருக்க முடியும்.

கூட்டணி தர்மம் என்ற ஒன்று இல்லாவிட்டால், காங்கிரஸ் மகாராஷ்டிரத்தில் தம் முதலமைச்சரை ஆதர்ஷ் வீட்டு ஒதுக்கீடு ஊழலுக்காக விலக வைத்தது போல, தமிழகத்தில் கருணாநிதியை வீட்டு வசதி வாரிய ஊழலுக்காக விலகச் சொல்லலாம். ம்ஹூம் முடியாது. கருணாநிதி கூட்டணி தர்மத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர். அதனால்தான் தமிழக வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடு முறைகேட்டில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்களுக்கும் உரிய பங்கு கொடுத்து விடுகிறார். சென்னையில் சொந்த வீடு இருக்கும் காங்கிரஸ் பெண் எம்.எல்.ஏ.வுக்கு, விதிகளை மீறி வீட்டு வசதி வாரிய நிலம் ஒதுக்கப்படுகிறது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமூக ஆர்வலர் கோபாலகிருஷ்ணன் வெளிக்கொணர்ந்திருக்கும் இந்தத் தகவல்கள் அதிர்ச்சியூட்டுகின்றன..... என்று சொல்ல மாட்டேன். இந்த ஆட்சியில் இப்படியெல்லாம் நடக்காமல் இருந்தால்தான் நமக்கு அதிர்ச்சி.

கருணாநிதி ஆட்சியில் சமூக சேவகர்களின் எண்ணிக்கை ஒரேயடியாக எகிறிவிட்டது. அண்ணா அறிவாலயத்தில் வேலை செய்யும் ஒருவர் சமூக சேவகராம். உடனே வீடு ஒதுக்கீடு. ஓர் அமைச்சரின் மருமகள், பேத்தி எல்லோரும் சமூக சேவகர்கள்! சட்டமன்ற தி.மு.க. கொறடாவின் மனைவி சமூக சேவகி! முதல்வரின் செயலாளர் மகள் சமூக சேவகி! ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மகன், ஐ.பி.எஸ். அதிகாரியின் மனைவி, மகள் எல்லோரும் சமூக சேவகர்கள்!! முதலமைச்சருக்கு செக்யூரிட்டி வேலை செய்தால் அவர்கள் ''அப்பழுக்கற்ற அரசு ஊழியர்கள்!''

இப்படிக் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள வீட்டு மனை, வீடுகளை கருணாநிதியின் அரசு, தமக்கு வேண்டியவர்களுக்க்

கெல்லாம் கண்டல் மாதிரி விநியோகித்திருக்கிறது. இத்துடன் ஒப்பிட்டால் மும்பையின் ஆதர்ஷ் வீடு ஒதுக்கீடு ஊழல் ஜுஜுபி.


ஆனால், தான் ஏழையாகப் பிறந்து ஏழையாக வளர்ந்து, ஏழைகளோடே பழகி ஏழைகளுக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பவன் என்று கூசாமல் பேசுகிறார் கருணாநிதி. சொத்துக் கணக்கு கேட்டால், உடனே தான் ஒன்றும் ஏழையாகப் பிறக்கவில்லை என்றும் அந்தக் காலத்திலேயே பக்கத்து ஊர் பள்ளி

இந்த வாரப் பூச்செண்டு!

சென்னை மாநகராட்சி மேயர் மா.சுப்ரமணியனுக்கும் துணை முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும் இ.வா.பூ.

சூளைமேடு மாநகராட்சிப் பள்ளியில் ப்ளஸ் டூ புகைப்படப் படிப்பை மூடுவதைக் கைவிடக் கோரி நான் எழுதிய கல்கி கட்டுரையைப் படித்ததும் ஸ்டாலின், மேயருக்குப் போன் செய்தார். மேயர் எனக்கு ஃபோன் செய்தார். படிப்பு தொடரும் என்று அறிவிக்கப்பட்டது. நேரில் பள்ளிக்குச் சென்று ஆய்வு செய்த மேயர், கம்ப்யூட்டர் பிரிண்ட்டர், கேமரா வாங்கித் தர உத்தரவிட்டார். முன்னாள் இந்நாள் மாணவர்களின் நிரந்தரப் புகைப்படக் காட்சியை எல்லா மாநகராட்சிப் பள்ளிகளிலும் நிறுவவும் உத்தரவிட்டிருக்கிறார். அடுத்த ஆண்டிலிருந்து நகராட்சி நிகழ்ச்சிகளைப் படம் எடுக்கும் வேலையை, சூளைமேடு மாணவர்களுக்குக் கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாக என்னிடம் தெரிவித்திருக்கிறார். நன்றி...





இந்த வாரத் திட்டு!

சாகித்ய அகாதமி சென்னைப் பிரிவை இங்கே இயங்கவிடாமல் துரத்தியடிக்கும் தமிழக அரசுக்கு இ.வா.தி.

யில் சேர்த்துப் படிக்க வைக்கும் வசதியுடன் பிறந்ததாகவும் சொல்லிக் கொள்கிறார்.

கருணாநிதியின் சமீப பேச்சுகள் ஒரு பக்கம் சிரிப்பையும் இன்னொரு பக்கம் எரிச்சலையும் ஏற்படுத்துகின்றன. அவருடைய மொத்த சொத்து மதிப்பு வெறும் ஆறு கோடி ரூபாய்தானாம். அப்படியானால் எப்படி அவர் மகன் அழகிரியின் சொத்து மதிப்பு 13 கோடியாக ஆயிற்று? ஸ்டாலினின் சொத்து மதிப்பு 13 கோடியாயிற்று? இருவரும் படித்த காலத்திலிருந்து ஒரு வேலைகூட பார்த்ததில்லை. எங்கேயும் பெரிய சம்பளம் வாங்கியதில்லை. என்ன தொழில் செய்தார்கள்? முதலீடுகள் எங்கிருந்து வந்தன? கனிமொழிக்குச் சொத்து மதிப்பு எப்படி 8 கோடி 45 லட்சம் ஆயிற்று? அவர் பார்த்த வேலை, வாங்கிய சம்பளம் என்ன? பாட்ஷா, அண்ணாமலை, சிவாஜி, எந்திரன் வசனகர்த்தாக்களுக்குத் தருவதை விடப் பல மடங்கு அதிகமாக வசனகர்த்தா கருணாநிதிக்கு 50 லட்சம் சம்பளம் தரும் தயாரிப்பாளர்கள் இருக்கிறார்கள். கனிமொழியின் கவிதைக்கு 5 லட்சம் யாராவது தருகிறார்களா என்ன? கருணாநிதியின் பேரன்கள் எல்லாம் கல்லூரியிலிருந்து வந்த உடனே கோடிக்கணக்கான ரூபாய் முதலீட்டில் வரிசையாக சினிமா எடுத்துக்கொண்டே இருக்கிறார்கள்... எப்படி?

கருணாநிதி எழுதவேண்டிய அடுத்த புத்தகம்: 'நூறே நாட்களில் கோடீஸ்வரனாவது எப்படி?' தனியே தன்னந்தனியே ஒரு கோடீஸ்வரக் குடும்பத்தை உருவாக்கிய அந்தச் சாதனை ரகசியத்தை மட்டும் தமிழக மக்களுக்கு அவர் தெரிவித்துவிட்டால், உலகம் அழியும்வரை அவருக்கு நன்றி விசுவாசத்தோடு அத்தனை தமிழர்களும் இருப்பார்கள்.

கர்நாடக சங்கீதக் கலைஞர்களுக்கு எத்தனை விருதுகளும், பட்டங்களும் வந்தாலும் 'சங்கீத வித்வத் சபை' என்று அழைக்கப்படும் 84 வயது சென்னை மியூஸிக் அகாதெமி வழங்கும் 'சங்கீத கலாநிதி' விருதினைப் பெறுவதில் தனிப் பெருமைதான். இவ்வாண்டு, பம்பாய் சகோதரிகளான சரோஜா - லலிதாவை சந்தோஷ சகோதரிகளாக்கி யிருக்கிறது சங்கீத கலாநிதி விருது. அவர்களுடைய உயர்ந்த இசைக் கோட்பாடையும் வாழ்க்கைப் பண்புகளையும் உணர்த்துகிறது அவர்களது பேட்டி:



சங்கீத கலாநிதி விருது பற்றி...

''இது எங்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த அங்கீகாரம், உழைப்பும் திறமையும் அங்கீகாரம் பெறும்போது மனத்துக்கு மிகவும் மகிழ்ச்சியும், உற்சாகமும் ஏற்படும். அந்த உணர்வை எத்தனை காலங்களானாலும் மாற்ற முடியாது.''

உங்களது நீண்ட இசைப் பயணம் பற்றி...



''1958ல் சென்னை மியூஸிக் காலேஜில் சேர வந்தபோது எங்கள் தந்தையின் ஒரே குறிக்கோள் எங்கள் இருவரையும் கர்நாடக சங்கீதத்தில் முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. நடுத்தர குடும்பம். மூன்று சகோதரிகள், இரண்டு சகோதரர்கள். எங்கள் இருவரது கவனம் முழுவதும் சங்கீதத்திலேயே இருக்க வேண்டும் என்பதற்காக குடும்பத்தில் அத்தனை பேருமே முழு மனத்துடன் ஆதரவு தந்தனர். அந்த ஊக்கம், உற்சாகம், ஆதரவு, அன்பு - இவைதான் நாங்கள் இன்றுள்ள நிலைக்குக் காரணம். அடுத்தது எங்களுடைய குரு திரு. டி.கே.கோவிந்தராவ் மற்றும் முசிரி சுப்ரமண்ய ஐயர். திரு. கோவிந்தராவ் எங்களுக்கு சங்கீதம் பயில்வித்தது எங்களுக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம். அவர் எங்கள் குடும்பத்தில் ஒருவராக ஒரு மூத்த சகோதரரைப் போல் எங்களின் ஒவ்வொரு முயற்சியிலும் உதவி செய்திருக்கின்றார். அதை வார்த்தைகளில் அடக்க முடியாது.''

மறக்க முடியாத சில கச்சேரிகள்...

''எங்களது முதல் பெரிய கச்சேரி, அறுபதுகளில் என்று நினைக்கிறோம். மயிலை சாய்பாபா கோயிலில்

✱ மிக அதிகமான ஒலி நாடாக்கள் பதிவு செய்துள்ளவர்கள் பம்பாய் சகோதரிகள். ✱ சம்ஸ்கிருத ஸ்லோகங்கள், விஷ்ணு சகஸ்ர நாமம், சௌந்தர்யலஹரி, ஆனந்தலஹரி, சிவானந்த லஹரி, ஆதித்ய ஹ்ருதயம், மூகாம்பிகை சுப்ரபாதம்... என்று பல ✱ கண்ணதாசன் தமிழில் மொழி பெயர்த்த ஆதி சங்கரரின் 'கனகதாரா ஸ்தோத்திரம்' தவிர திருப்பாவை, திருவெம்பாவை, திருமுருகாற்றுப் படை, திவ்யப் பிரபந்தம் என்று தமிழிலும் பாடிப் பதிவு செய்திருக்கின்றனர். ✱ கான மந்திர் ட்ரஸ்ட், காஞ்சி காம கோடி பீடம், இந்து மிஷன் ஆஸ்பத்திரி, சங்கர நேத்ராலயா என்று பல தொண்டு நிறுவனங்களுக்குத் தங்கள் இசை மூலம்

நவராத்திரி உற்சவத்தில் மதுரை மணி அய்யர் பாட வேண்டிய கச்சேரி; அவரது உடல் நிலை காரணமாக எதிர்பாராத விதமாக அன்று அவர் வர முடியவில்லை. அவருக்கு முன்னால் சின்னக் கச்சேரியாகப் பாட இருந்த எங்களையே மதுரை மணி அய்யரின் கச்சேரிக்குப் பதிலாக அவரின் அனுமதியுடன் பாடச் செய்தனர். அதற்கு நல்ல கூட்டம். அன்று ரசிகர்களுக்கு ஏற்பட்ட திருப்திதான் எங்களின் வெற்றிப் பாதைக்கு வழி போட்டது. அடுத்தது மைசூரில் நடந்த இன்னொரு கச்சேரி. டி.கே.கோவிந்தராவ் பிரத்தியேகமாகக் கற்றுக் கொடுத்த நான்கைந்து தாசர் கிருதிகளுடன் நாங்கள் பாடிய நிகழ்ச்சி பரவலான வரவேற்பைப் பெற்றது. முதன் முறையாக அமெரிக்க யுனிவர்சிட்டியில் நிகழ்த்திய ஒரு தமிழ்ப் பாடல்களாலான நிகழ்ச்சி.



சந்தோஷ சகோதரிகள்!

உள்ளூர் பத்திரிகை எங்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்த கூட்டத்தையும், கச்சேரியையும் மிகச் சிறப்பாகப் பாராட்டி எழுதி இருந்தது.''

கர்நாடக சங்கீதத்தின் இன்றைய நிலை...

''பல திறமை வாய்ந்த இளம் கலைஞர்கள் முன்னணியில் உள்ளனர். பலர் முன்னேறத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களிடம் நாங்கள் ஏராளமான உற்சாகத்தையும், நம்பிக்கையையும் பார்க்கிறோம். ஆனால், வணிக ரீதியாக மாறி வரும் சில நிகழ்வுகள் சற்று மனச் சோர்வை உண்டாக்குகின்றது என்பதையும் குறிப்பிட வேண்டும்.''

சங்கீத கலாநிதி விருதுடன் ஹிந்து நாளிதழ் வழங்கும் எம்.எஸ்.சுப்புலட்சுமி நினைவுப் பரிசான ரூபாய் ஒரு லட்சத்தைக் கொண்டு என்ன செய்யத் திட்டம்?

''எங்களுடைய அம்மா அப்பா பெயரால் இயங்கி வரும், 'முக்தாம்பரம் அறக்கட்டளை' கர்நாடக சங்கீதத்தில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்குப் பொருளாதார உதவிகளையும், மேடை ஆதரவையும் அளித்து வருகிறது. நாங்கள் பெற்ற பரிசுத் தொகையின் ஒரு பகுதியை இந்த டிரஸ்ட்டுக்குத் தருகிறோம்!''

செய்திச் சித்திரம் : தேவவிரதன்

நிதி உதவி செய்துள்ளனர். ✱ பம்பாய் சகோதரிகளின் முக்தாம்பரம் ட்ரஸ்ட் பல இளம் கலைஞர்களை ஊக்குவிக்கின்றது. ✱ வளைகுடா நாடுகள், அமெரிக்கா, கனடா, லண்டன், ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் என்று பல நாடுகளில் கச்சேரிப் பயணம் மேற்கொண்டிருக்கின்றனர். ✱ அம்பத்தூரில் உள்ள புவனேஸ்வரி பீடத்தின் கோயிலில் மிக மிக இளம் கலைஞர்களாகச் சென்று கச்சேரி செய்தபோது இவர்கள் இசையைக் கேட்டு மகிழ்ந்து 'பம்பாய் சகோதரிகள்' என்ற பெயரில் இனி பாடட்டும்; ஞானமும், புகழும் தேடி வரும்' என்று பேப்பரில் எழுதி வெற்றிப் பாதைக்கு வழி காட்டியவர் அங்கிருந்த மௌன சாமியார்.

வெற்றிக் கதை!

அப்போது இந்தியன் வங்கித் தலைவராக இருந்தவர் எம். கோபால கிருஷ்ணன். பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். சிறு தொழில் முனைவோருக்கான 'டானிக்' ஆக அமைந்திருந்தது அக்கட்டுரை. அதனைப் படித்துவிட்டு, கணவன் - மனைவி இருவருமாக சென்னைக்குக் கிளம்பினோம். அப்போது எனக்கு வயது இருபத்தியெட்டு. என் மனைவிக்கு இருபத்தியிரண்டு. இந்தியன் வங்கி சேர்மனை நேரில் சந்தித்தோம்; பேசினோம். எந்த சிபாரிசும் கிடையாது. சிறு தொழிலுக்கென அதிகபட்சமாக இருபத்தைந்து லட்ச ரூபாய்தான், கடனாக அப்போது அனுமதிக்கப்பட்டிருந்தது. நாங்கள் கேட்டிருந்ததோ அறுபத்திரெண்டு லட்ச ரூபாய். ''ரெண்டு பேருமே நல்லா படிச்சிருக்கீங்க. சிறு வயசாகவும் இருக்கீங்க. வங்கிக் கடனையடைச்சு நல்லா வந்திடுவீங்கனு நம்பிக்கை எனக்கு இருக்கு!'' எனச் சொன்னவர், கடனும் பெற்றுத் தந்தார். அந்தக் கட்டுரையும், வங்கிக் கடனுதவியுமே எங்களை ஜெயிக்க வைத்தது!'' எனக் கூறுகின்றனர் சங்கர்-கவிதா தம்பதியினர்.

தஞ்சாவூர் மாவட்டம், திருமலை சமுத்திரத்தில் இயங்கி வருகிறது Peekay Mediequip Ltd. இதன் உற்பத்தியானது, Disposable Needle எனப்படும், ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்தப்படும் ஊசி தயாரிப்பு ஆகும். SEPNIL என்கிற டிரேட் மார்க் முத்திரையுடன், உற்பத்தியாகிறது இந்த டிஸ்போசபிள் நீடில். ''டிரேட் மார்க் பெயரிலேயே அதன் தரம் உணர்த்தப்பட்டுவிடுகிறது'' என்கிறார் அதன் நிர்வாக இயக்குனர் சங்கர்.

சாஸ்த்ராவில் பொறியியல் மெக்கானிகல் இஞ்ஜினீயரிங் முடிச்சிட்டு, மூணு வருஷம் வெளியே வேலை பார்த்துள்ளார். 1992ல் திருமணம். மனைவி கவிதாவும் அவரும் பொறியியல் படிப்பில் டிரிபிள் E முடித்தவர். அவரது அப்பாவும் அம்மாவும் மருத்துவர்கள். என்ன தொழில் செய்யலாம் என புதுமணத் தம்பதிகள் இருவரும் சேர்ந்து யோசித்தபோது தான் உதயமானது, மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படும் டிஸ்போச




ஊசி முனையில்



பின் நீடில்.


✱கவிதா


✱சங்கர்

இருபது லட்ச ரூபாய் சொந்த முதலீடு. அறுபத்திரெண்டு லட்ச ரூபாய் வங்கிக் கடனுதவி. ஒரு ஏக்கர் பரப்பில் இயங்கத் தொடங்கியது Peekay Medi-equip Ltd. ஒரேயொரு மிஷின்தான் இறக்குமதி செய்யப்பட்டது. முப்பத்தியெட்டு பேர். இரண்டு ஷிஃப்ட். ஒரு மாதத்துக்கு பன்னிரெண்டு லட்சம் ஊசிகள் உற்பத்தியாகின. CANNULA எனப்படும் மெட்டல் நீடில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது. தற்போது அது இங்கேயே தயாரிக்கப்படுகிறது என்பது, வெற்றிப் படிக்கட்டுகளில் ஒன்று.

"நாங்க ரெண்டு பேருமே இஞ்ஜினியரிங் தேர்ச்சி பெற்றதால், எந்திரங்கள் இயக்குவது - அதன் குறைகளைக் களைவது, நவீனப்படுத்துவது போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த முடிந்தது. உறுதியும், தரமும் SEPNIL டிரேட் மார்க் தயாரிப்புகளின் தாரக மந்திரம். உற்பத்தியின் தரத்தில் கவனம் செலுத்துகின்ற அளவுக்கு, வெளி மார்க்கெட் வணிகத்திலும் கவனம் செலுத்தினோம். விளைவு? கொஞ்சம் கொஞ்சமாக உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டியதாகப் போயிற்று.

தொடக்க ஆண்டுகளில் உற்பத்தி மாதம் ஒன்றுக்கு, பன்னிரெண்டு லட்சம் ஊசிகள். இப்போது ஆண்டில் நாள் ஒன்றுக்கு பதினைந்து லட்சம் ஊசிகள். ஐ.எஸ்.ஓ. மற்றும் சி.இ. தரச் சான்றிதழ் பெற்ற தயாரிப்பு. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம், பீகார், உத்தரப்பிரதேசம் மற்றும் ஒரிசா என மொத்தம் பதினொரு மாநிலங்களுக்கு எங்கள் ஊசிகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இருபத்தியிரண்டு சூப்பர் ஸ்டாக்கிஸ்ட்டுகள், அறுநூறு வினியோகஸ்தர்கள் உள்ளனர். கடந்த நிதியாண்டில் மொத்த வணிகம் இருபத்தியிரண்டு கோடி ரூபாய். நிகழ் நிதியாண்டில் ஐம்பது கோடியைத் தாண்டிவிடுவோம். அடுத்த நிதியாண்டில் நூற்றைம்பது கோடி ரூபாய் வணிகம் எங்கள் இலக்கு. மருத்துவ ரீதியிலான FACE MASK மற்றும் CAPS, ஐ.வி செட்ஸ் ஆகியனவும் தயாரித்து வருகிறோம். டிஸ்போசபிள் நீடில்ஸ் மற்றும் எங்கள் தயாரிப்புகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் செயல்திட்டத்திலும் இயங்கி வருகிறோம்!'' எனக் கூறுகின்றனர் சங்கர் - கவிதா சங்கர் தம்பதியினர்.

செய்தி சித்திரம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு.

ஒரு வெற்றி!





"வட இந்தியாவிலிருந்து சென்னைக்கு வந்து, புதிதாகத் தொழில் தொடங்க திட்டமிட்டிருந்த நேரத்தில், தாத்தாவிடம் போய் 'எனக்கு உடனடியாக ஒரு டெலிஃபோன் இணைப்பு வேண்டும்; உங்களால் ஏற்பாடு செய்து தர முடியுமா?' என்று கேட்டேன். அவருக்கு இருந்த செல்வாக்குக்கு, அவர் ஒரு ஃபோன் செய்தால் போதும்; எனக்கு டெலிஃபோன் இணைப்பு கிடைத்து விடும். அவர், 'டெலிஃபோன் டைரக்டரியை எடுத்துக்கொண்டு வா' என்றார். அதில் இருந்த டெலிஃபோன் இணைப்பு பெறும் வழி முறைகளைப் படிக்கச் சொன்னார். 'ரூ. 1800/- கட்டினால்,




* நூல் வெளியீடு-இடமிருந்து வலமாக:கல்கி ராஜேந்திரன், சி.ஆர்.பார்த்தசாரதி, B.S.ராகவன், நாட்டிய ஆசார்யா சி.வி.சந்திரசேகர்.

எங்கே போகிறது இந்தியா?

உடனடியாக டெலிஃபோன் இணைப்பு கிடைக்கும்; மாதாந்திர பில் தொகை அந்த முன் பணத்திலிருந்து அட்ஜஸ்ட் செய்யப்படும் என்ற' own your telephone திட்டம் இருந்தது. உடனே தமது செக் புத்தகத்தை எடுத்து 1800 ரூபாய்க்கு ஒரு செக்கை எழுதி, என்னிடம் கொடுத்தார். 'அந்தப் பணத்தை பிற்பாடு திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்' என்று சொன்னபோது, 'அதற்கு அவசியமில்லை' என்று சொல்லிவிட்டார்! இணைப்பு கிடைத்தது. தாம் அந்தக் காலத்தில் டெலிஃபோன் இணைப்பு பெற்ற கதையைச் சொன்னார் சி.ஆர். பார்த்தசாரதி. தம் பேரனுக்காக, விதி முறைகளின்படி டெலிஃபோன் இணைப்பு வாங்கிக் கொடுத்த தாத்தா சென்னை மாகாணத்தின் முதல்வராய் இருந்த ராஜாஜி!

அமரர் கல்கியின் தேச பக்திக்கு நிகரானது அவரது ராஜாஜி பக்தி. ராஜாஜி உன்னத நிலைகளுக்கு உயர்ந்தபோதெல்லாம் கல்கியின் பேனா வாழ்த்து மலர்களை உதிர்த்து மகிழ்ந்தது. அவருக்கு எதிர்ப்புத் தோன்றிய ஒவ்வொரு தருணத்திலும் அதே பேனா

போர்வாளாக மாறி, கொள்கை விளக்கம் அளித்து எதிர்ப்புகளை முறியடித்தது. ராஜாஜியின் அணுக்கத் தொண்டரான கல்கியின் 56வது நினைவு நாளில் (டிச. 5) ராஜாஜி வாழ்க்கை வரலாறு புத்தகம் வெளியிடப்பட்டது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.எஸ். ராகவன் புத்தகத்தை வெளியிட, ராஜாஜியின் பேரன் பார்த்தசாரதி முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டு, ஏற்புரை ஆற்றிய போதுதான் மேற்சொன்ன டெலிஃபோன் சம்பவத்தைக் குறிப்பிட்டார்.



ராஜாஜி

ராஜாஜியின் மற்றொரு பேரன் ராஜ் மோகன் காந்தி தில்லி, கொல்கத்தா, லண்டன் என்று நெடிய பயணம் மேற்கொண்டு பல கோப்புகளை ஆய்வு செய்து, ராஜாஜி பற்றிய தகவல்களைச் சேகரித்து, ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக எழுதி இருக்கிறார். அது கல்கி ராஜேந்திரனால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, இரண்டு பாகங்களாக கல்கி வார இதழில் தொடராக வெளியானது. அந்த இரண்டு பாகங்களையும் சேர்த்து ஒரே புத்தகமாக வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

"நான் கல்கியில் பணியாற்றிய 50 வருடங்களில் தலையங்கம் தொடங்கி கட்டுரைகள், விமர்சனங்கள் உட்பட துணுக்குகள் வரை ஏராளமாக எழுதி இருக்கிறேன். ஆனால் அவை எல்லாவற்றையும்விட எனக்கு பூரண திருப்தி ராஜாஜி வாழ்க்கை வரலாற்றை மொழி பெயர்த்து எழுதியது தான். அதை ஒரு ஆங்கில மொழி பெயர்ப்பு போல இல்லாமல் நேரடியாகத் தமிழில் எழுதப்பட்டது போல இருக்க வேண்டும் என்று மிகுந்த சிரத்தையோடு மொழி பெயர்த்தேன்'' என்று தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார் கல்கி ராஜேந்திரன். ''ராஜ் மோகன் காந்தி தமது தாத்தாவின் வாழ்க்கை சம்பவங்களை விவரித்தபோதிலும் சற்றும் உணர்ச்சிவசப்படாமல் நிகழ்ச்சிகளைத் தொகுத்து அளித்திருக்கிறார்'' என்றும் பாராட்டினார்.

மேற்கு வங்கத்தில் ஐ.ஏ.எஸ். பணியில் சேர்ந்த பி.எஸ்.ராகவன், தமது பணிக்காலத்தில் மாநில - மத்திய அரசில், பொதுத்துறை நிறுவனங்களில், சர்வதேச அமைப்புகளில் என மொத்தம் 32 பதவிகளை வகித்தவர். ஓய்வு பெற்ற பிறகும் உந்துனர் அறக்கட்டளை மூலமாக மக்கள் மத்தியில் ஜனநாயக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு ஆற்றி வருபவர். நூலை வெளியிட்டு அவர் ஆற்றிய தலைமையுரை அவரது சிந்தனைத் தெளிவையும் சமூக உணர்வையும் வெளிப்படுத்தியது.

''எந்த நாடு பாராட்டப்பட வேண்டியவர்களைப் பாராட்டத் தவறுகிறதோ அந்த நாடு உருப்படாது; எந்த நாடு தகுதி இல்லாதவர்களைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டு பட்டங்கள் கொடுத்துக் கொண்டாடுகிறதோ அந்த நாடும் நசிந்துவிடும்' என்று காரசாரமாகத் தம் உரையை ஆரம்





* வடிவமைத்த ஹரீஷ் குஹன், தயாரிப்பில் உதவிய சுப்ரபாலன் - நினைவுப் பரிசு பெறுதல்

பித்தார் பி.எஸ். ராகவன்.

தம்முடைய பதவிக்காலத்திலும் ஓய்வு பெற்ற பின்னரும் சுமார் பத்தாயிரம் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருப்பதாகவும், ஆனால் இன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகவும் பெருமிதப்படுவதாகவும்; கல்கி பத்திரிகையை முதல் இதழ் முதல் விடாமல் படித்து வருவதாகவும் ராஜாஜி இட்ட கட்டளையின்படி, மக்களுக்கு எது நல்லது என்று எடுத்துச் சொல்லி வருகிற கல்கியைப் பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

''காந்திஜி, நேருஜி, ராஜாஜி, பட்டேல், சத்தியமூர்த்தி, காமராஜ்.... போன்றவர்கள் காண விரும்பிய இந்தியா எங்கே? இன்று இருக்கும் இந்தியா எங்கே? இன்றைய இந்தியாவைப் பார்க்கிறபோது, குரங்கு கையில் சிக்கிய பூமாலைதான் என் நினைவுக்கு வருகிறது.

மக்களுக்கு நீதித்துறை மீது மதிப்பு இருக்க வேண்டும். நாட்டை ஆளுபவர்கள் பெயரைச் சொன்னால் நம்பகத் தன்மை ஏற்பட வேண்டும். தெரிந்து தவறு செய்யமாட்டார்கள் என்ற எண்ணம் வர வேண்டும். ஜனநாயகத்தின் நான்காம் தூணாகக் கருதப் படும் ஊடகத் துறையையாவது நம்ப முடிகிறதா? வெளியில் உபதேசம் புரிந்துகொண்டு, உள்ளே நயவஞ்சகம் புரிந்து கொண்டிருக்கின்றன. யாரை நம்புவது?

ஆங்கிலேயர்கள் துப்பாக்கியுடன் வந்த போது, நாம் தைரியமாக மார்பைத் திறந்து காட்டி 'சுடு' என்று சொன்னோம். ஆனால் இன்று அந்தத் தைரியத்தை இழந்து பதுங்குகின்றோமே? கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எல்லாம் என்ன ஆனது? கருத்து சுதந்திரம் இருந்தாலும், கருத்தைச் சொன்ன பிறகு சுதந்திரமாக இருக்க முடியவில்லையே? மாற்றுக் கருத்துச் சொன்னால் மடக்க நினைக்கிறார்கள்; முடக்க நினைக்கிறார்கள்; அழிக்க முனைகிறார்கள்! முப்பது கோடி மக்கள் இருந்தபோது ஆங்கிலேயரை எதிர்க்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி இருந்தது. இன்று 110 கோடி மக்கள் இருக்கிறோம். ஆனால் சாதாரணமான விஷயங்களில் கூட விழிப்புணர்ச்சி இல்லையே?'' என்று இன்றைய சூழலைத் துல்லியமாகத்

வேலும் மயிலும்

''கன்னலின் இனிய தண் தமிழ் அளிப்பான்'' என்று முருகப்பெருமான் குறித்து ஒரு பாடலில் (பொன்மயில் ஏறி வருவான்) குறிப்பிட்டுள்ளார் அமரர் கல்கி. காபி ராகத்தில் அமைந்த இந்த எளிய பாடல் உள்பட, முருகன் பேரிலான பல பாடல்களைத் தேர்வு செய்து அபிநய மாலையாக்கி நாட்டிய நிகழ்ச்சி வழங்கினார் மஞ்சரி. 'வேலும் மயிலும்' என்ற தலைப்பையொட்டி, பரிபாடல் முதல் பதம் வரை முருகனின் அருளையும் அழகையும் சித்திரிக்கும் கவிநயம் மிக்க வரிகளுக்கு, உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவர் வெளிப்படுத்திய உணர்ச்சிமிக்க பாவங்களும் அசைவுகளும் நளினமான முத்திரைகளும் ஒரு தேர்ந்த ஓவியர் சிருஷ்டித்த தஞ்சாவூர் சித்திரம்போல் மனத்தில் பதிந்தன. குருவும் தந்தையுமான நாட்டிய ஆசார்யர் சி.வி.சந்திரசேகரின் பாணியில் சுத்தமான அடவுகள், அளவான, ஆனால் உழைப்பை மிகக் கோரும் ஜதிகள், பாரம்பரியத்திலிருந்து விலகாத கற்பனை போன்ற அம்சங்களால் மஞ்சரியின் நடனம் உயர்ந்த நிலையைத் தொட்டது. ''மறவேன் மறவேன்'' என்று வேலின்மேல் ஆணையிட்ட மன்னரும்

தமது உரையில் வர்ணித்த பி.எஸ்.ராகவன், நல்ல வழிகாட்டலையும் தந்தார்:

ஜன நாயகம் தழைக்க மூன்று முக்கிய மான கடமைகளை மக்கள் ஆற்ற வேண்டும் என்று நினைவூட்டினார்.

1. படித்தவர்கள் தேர்தலில் வாக்களிப் பதைத் தம் முக்கியமான கடமையாக நினைக்க வேண்டும். படித்தவர்கள் நிறைந்த சென்னை மைலாப்பூர் தொகுதியில் 90 சதவிகிதம் பேர் வாக்களித்திருக்க வேண்டுமல்லவா? ஆனால், அங்கே வாக்குப்பதிவு 39 சதவிகிதம்தான்.

2. நம்முடைய ஊடகத்துறையில் உள்ள இரண்டு பலவீனங்கள் : எதிலுமே ஒரு ஆரம்ப சூரத்தனம் இருக்கும். அப் புறம் சுணக்கம் வந்துவிடும். நெல்லிக்காய் மூட்டை போல நமக்குள்ளே கருத் தொற்றுமை இல் லாமல் இருப் பது. அப்படி இல்லாமல், இங்குள்ள பத்திரிகை ஆசிரியர்கள், ஊடக முக்கியஸ்தர் கள் அனைவரும் தேச நலனுக்காகக் கருத் தொருமித்து ஓர் அமைப்பை ஏற்படுத்தி ஆண்டுக்கு மூன்று, நான்கு முறை நாட்டு நடப்பை அலசி, தங்கள் கருத்துக்களை மக்கள் முன் வைக்க வேண்டும்.

3. இன்று கல்வி மிகவும் சீர்குலைந்து வியாபாரமாகிவிட்டது. சமூக அக்கறையோடு ஒவ்வொருவரும் உங்கள் குழந்தைகள் படிக்கிற அல்லது உங்கள் பகுதி யில் உள்ள பள்ளிக் கூடங்களின் செயல் பாட்டில் அக்கறை காட்டுங்கள். உங்கள் பகுதி ஆரம்ப சுகாதார நிலையம் எப்படிச் செயல்படுகிறது என்று பாருங்கள். அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்களின் செயல் பாட்டைக் கவனித்து, மக்களுக்கு அவற்றின் மீது நம்பிக்கை ஏற்பட உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.



❖ பொருத்தமான இறைவணக்கமாக 'வந்தே மாதரம்' பாடிய செல்வன் தேஜஸ்

ராகவனின் சொற்பொழிவு முடிந்தும் பார்வையாளர் ஒருவர் 'ராஜாஜியின் கருத் துகளை ராகவன்ஜி இன்று எதிரொ லித்தார்' என்றார் நெகிழ்ச்சியோடு.



மறப்பாரோ நீல மயிலே?'' என்று யதுகுல காம்போதி ராகத்தில் அமரர் கல்கியின் பாடலுக்கு ஆடிய போதோ நவரஸங்களும் மாறி மாறி வெளிப்பட்டு அசத்தின. பக்தி ரசத்தில் மஞ்சரியின் கண்களை நிறைத்த நீர், அவரது அர்ப்பணிப்புக்கும் ஆழ்ந்த கலையுணர்வுக்கும் சாட்சி சொன்னதோடு பார்வை யாளர்களையும் பரவசப்படுத்தியது.

நட்டுவாங்கம் செய்தவர் ஆசார்யர் சி.வி. சந்திரசேகர் என்பதால் நிகழ்ச்சி ஒரு தனிப் பரிமாணத்தில் ஒளிர்ந்தது. பாடல் களை சுருதி சுத்தமாகவும் வார்த்தைகளைச் சிதைக்காமலும் பாடினார் ஜோதிஷ்மதி ஷீஜித். வயலின் அனந்த கிருஷ்ணன், நாட்டியத்தின் நுணுக்கங்களைப் புரிந்து கொண்டு வாசிக்க, மிருதங் கத்தை அனுபவஸ்தரான அடை யாறு பாலு அற்புதமாகக் கையாண் டது நடனக் கலைஞருக்குப் பேராதரவு. நிகழ்ச்சியை அழகாகத் திட்டமிட்டுத் தொகுத்து வழங் கினார் மஞ்சரியின் கணவர் ராஜேந்திர குமார்.

அடர்த்தியான கருத்துகளும் உணர்ச்சி களும் தவழ்ந்த சென்னை ராகசுதா அரங்கம் அன்று ராஜாஜி - கல்கி அன்பர்களால் நிறைந் திருந்தது. திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்து அன்பர்கள் இந்நிகழ்ச்சிக்கு என்றே வந்தி ருந்தனர்!

நிகழ்ச்சி தொகுப்பு: **எஸ். சந்திர மௌலி**

புகைப் படங்கள் : **ஸ்ரீஹரி**

வட்டமேஜை

'ஆஹா ஆல்பம்' பகுதி வாராவாரம் ஆரவாரமாக உள்ளது. இதுபோல பலரிடம் மறக்கமுடியாத கடிதங்களும் இருக்குமே! அதையும் வெளியிட்டு, அவர்களையும் மற்ற வாசகர்களையும் குஷிப்படுத்தலாமே!

- சு.ஞானசேகர், ஹூப்ளி

கல்கியில் வெளியாகும் 'பாலிடிக்ஸ் பஜாரை'ப் படித்தாலே போதும். லேட்டஸ்ட் நாட்டு நடப்புகளைச் சூடாகத் (சுவையாக) தெரிந்துகொள்ளலாம்.

- கே. ராஜகோபால், சென்னை - 24

மேட்டூர் அணையின் பல சிறப்பு அம்சங்களைத் தெரிந்துகொள்ள உதவியது 'மேன்மை மிகு மேட்டூர்!' கட்டுரை.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

சூரிய, சந்திர கிரஹண காலங்களில் சேரனின் தெய்வம், 'கோட்டை மாரியம்மன்' கோயில் நடை சாத்தப்படுவது இல்லை என்பது ஓர் அரிய செய்தி.

- ஜி.கீர்த்தனா, நெய்வேலி

சூப்பர் ஷெஃப் வெங்கடேஷ் பட் எழுதும்
இலை போட்டாச்சு-7
அடுத்த வாரம்

எடியூரப்பாவை நீக்கமுடியாத பா.ஜ.க., ஸ்பெக்ட்ரம் ஊழலை எதிர்ப்பதில் அர்த்தமில்லை என்ற தொனியில் தராசார் அளித்த பதில் மிகவும் நேர்மைத்திறம் மிக்கது!

- அயன்புரம் த.சத்தியநாராயணன்

பெண்களின் கண்களுக்கென்று தனி மவுசு இருக்கத்தான் செய்கிறது போலும். நடிகை பிந்து மாதவியின் கண்கள், மொத்தக் கதையையும் தாய்க் கோழி போல அடை காக்கும் என இயக்குனர் அஞ்சனா சொன்னதிலேயே புரிகிறது!

-எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்



கண்களில் புரிகிறது!

'பயாஸ்கோப் பட்டியல்' வர இருக்கும் படங்களுக்கு ஒரு வெள்ளோட்டமாய் இருப்பது ரசிக்க வைக்கிறது.

- பி. ராம்பிரசாத், சென்னை

'மகிழ்ச்சி - மண் வாசம்; நந்தலாலா - செல்லுலாய்ட் கவிதை... திரைப் பட விமர்சனங்கள் முத்தாய்ப்பு!

- பி.கோபி, கிருஷ்ணகிரி

தாரமங்கலத்துக்கு 'சிற்ப மங்கலம்' என்ன பொருத்தமான தலைப்பு!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

சுதா சேஷய்யனின் 'வாரம் ஒரு மந்திரம்!' படிக்கப் படிக்க ஆவல் பெருகுகிறது.**- அ.முரளிதரன், மதுரை**

சேலம் மாவட்ட வாசகர் போட்டி - I ல் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் சொந்த ஊர் கேள்விக்கு, பதிலாகத் தரப்பட்டிருக்கும் ஊர்களில் பாப்பாரப்பட்டியை பாரப்பட்டி என்று திருத்தி வாசிக்கவும்.

(ஆ-ர்)

கலக்க வருதுப்பா...

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி!

இப்ப கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கும் வருது கல்கி டீம்...

- திரிவேணி சங்கமம்
- வானுயர் வள்ளுவர்
- தாணுமாலயன் வாழ் சுசீந்திரம்
- பத்மனாபபுரம் கோட்டை
- ரகசியம் சொல்லும் பேச்சிப்பாறை
- திற்பரப்பு அருவி
- சினிமாவில் நடிக்கும் முட்டம்
- குளிர்ச்சியான குளச்சல்
- வ.உ.சி.யின் ஒட்டப்பிடாரம்
- தசரா புகழ் குலசேகரப்பட்டினம்
- வீரம் விளைந்த பாஞ்சாலங்குறிச்சி
- கவிச்சூரியனின் கருவறை



இன்னும் என்னவெல்லாம் இருக்கு?
உங்க மாவட்டங்களின் (+) (–) என்ன? எழுதி அனுப்புங்க...

வாசகர்களே!



கன்னியாகுமரி தூத்துக்குடி

மாவட்டங்களின் வாசகர்களே...
திகதிப்பான அனுபவத்துக்கு
ரெடியாகுங்க!

உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் கல்கி கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் அடுத்த பக்கத்துல இருக்கு!

ஆமாம்! கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்கு சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- உங்கள் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ✓ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ✓ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ✓ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ✓ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு கூப்பனில் ✓ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கலக்க வருதுப்பா கல்கி

கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டம்

☐ **நியூஸ் ஏந்தி பவன்** ☐ **பெட்டிஷன் பாக்ஸ்**
☐ **வேடந்தாங்கல்** ☐ **ஜோக் ஃபால்ஸ்**

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 17.12.2010

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடுறோம்!



கல்கி ஆன்லைன்
இலவசப் பதிவு!
PRASHANTI
House of Silk Cottons
PRINT SUBSCRIPTION
கல்கி,
மங்கையர் மலர்,
கோகுலம்,
Gokulam
எல்லா
இதழ்களையும்
உடனடியாகப் படிக்கலாம்!
இனி, உங்கள் கருத்துக்களை
Click Here
திருமண மலர்
CLICK HERE
http://www.kalkionline.com

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.